28°c
32°c
26°c
தெளிவான காலநிலை காணப்படும்

உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily

பக்கம் 32

விலை: யாழ். – 20/= வன்னி – 20/= கொழும்பு – 30/=

சுடர்: 29 கதிர்: 176 வள்ளுவர் ஆண்டு: 2045

வைகாசி 07, புதன் 21.05.2014

21 MAY 2014

# மே 18ஆம் திகதிக்கு பின்னும் நினைவேந்தல் செய்யத் தடை

## பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்துக்கு இராணுவம் அறிவுறுத்து

யாழ்ப்பாணம், மே 21

வன்னியில் நடந்து முடிந்த கொடூரமான போரில் உயிரிழந்த தமிழ் மக்களுக்கு மே மாதம் 18ஆம் திகதி அஞ்சலி செலுத்த முடியாது என்று தடுத்து வந்த இலங்கை இராணுவம், இந்த மாதத்தின் எந்தவொரு நாளிலும் நினைவேந்தலை நடத்துவதற்குத் தடை விதித்துள்ளது.

கடந்த ஒரு வாரமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மூடப்பட்டிருந்தமையால் அது மீளத் திறக்கப்படும் இன்றையதினம் நினைவேந்தல் நிகழ்வை நடத்துவதற்குப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அழைப்பு விடுத்திருந்தது. ஆனால் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளை நேற்று இராணுவ சிவில் நிர்வாகக் காரியாலயத்துக்கு அழைத்த இராணுவத்தினர் அஞ்சலி நிகழ்வை நடத்த வேண்டாம் என்று அறிவுறுத்தினர். சட்டத்தை மீறிச் செயற்பட்டால் வேண்டத்தகாத நிகழ்வுகள் நடக்கும் என்று இந்தச் சந்திப்பின் போது இராணுவத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாம் ஒருபோதும் சட்டத்தை மீறிச் செயற்படமாட்டார்கள் என்று ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் பதிலளித்துள்ளனர். இராணுவத்தின் யாழ். மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் உதய பெரேராவின் சார்பில் பிரிகேடியர் அபய நாயக்க இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டார்.

மே 18ஆம் திகதி மாணவர்கள் அஞ்சலி நிகழ்வை நடத்துவார்கள் என்ற அச்சம் காரணமாகவே பல்லைக்கழகம் ஒரு வாரத்துக்கு இழுத்து மூடப்பட்டது. மே 18ஆம் திகதி விடுதலைப் புலிகளின் தலைமை கொல்லப்பட்ட நாள் என்பதால் அந்தத் தினத்தில் நினைவேந்தல் நிகழ்வுகள் எதனையும் போரில் கொல்லப்பட்ட பொது மக்களுக்காக நடத்த் முடியாது என்று அரசு தெரிவித்திருந்தது. ஆனால் அந்தத் தினம் கடந்த பின்னரும் அஞ்சலி நிகழ்வுகளுக்கு இராணுவம் தடை விதித்துள்ளது. (உ-4)

### நம்பிக்கையில்லா பிரேரணைக்கு கூட்டமைப்பு ஆதரவு

யாழ்ப்பாணம், மே 21

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான இன்றைய வாக்கெடுப்பில் பிரேரணைக்கு ஆதரவாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வாக்களிக்கும் என்று நேற்றைய கட்சிக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசுக்கு

— 21ஆம் பக்கம் பார்க்க

## அச்சுறுத்தும் துண்டுப்பிரசுரம் மீண்டும் யாழ். பல்கலைக்குள்

யாழ்ப்பாணம், மே 21

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக பேராசிரியர்கள், ஆசிரியர்கள், மாணவத் தலைவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு மீண்டும் நேற்று அச்சுறுத்தல் துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்டுள்ளன என்று பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. அத்துடன் அந்த துண்டுப்பிரசுரங்களில் குடாநாட்டில் இருந்து வெளியாகும் பத்திரிகைகளின் பத்திரிகையாளர்கள் இருவரின் பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளது.

பல்கலைக் கழக வளாகத்தில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் நேற்று கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதன் போது காலை முதல் மதியம் வரை சுமார் 15 புலனாய்வா

21ஆம் பக்கம் பார்க்க

## பேராசிரியர் இராசகுமாரன் மீது இன்று திடீர் விசாரணை

### பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸார் அழைப்பாணை

யாழ்ப்பாணம், மே 21

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக ஆசிரியர் சங்கத் தலைவர் போராசிரியர் இராசகுமாரனை விசாரணைகளுக்காக நான்காம் மாடிக்கு வருமாறு பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் அழைப்பாணை அனுப்பியுள்ளனர். நாளை முற்பகல் 10 மணிக்கு கொழும்பில் இருக்க வேண்டும் என்று கண்டிப்பாக உத்தரவிடப்பட்டதை அடுத்து நேற்றிரவே அவர் கொழும்புக்குப் புறப்பட்டார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளை இன்று நடத்துவதற்கு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் அழைப்பு விடுத்திருந்த நிலையில் பேராசிரியர்

21ஆம் பக்கம் பார்க்க

## விரட்டி விரட்டிக் கலைத்து நடுவீதியில் வாள் வெட்டு

### இளைஞர் படுகாயம்; பூநாறி மரத்தடியில் கொடூரம்



யாழ்ப்பாணம், மே 21

முச்சக்கர வண்டியில் வந்த இரு இளைஞர்களை கொக்குவில் சந்தியிருந்து விரட்டிய பத்துப் பேர் கொண்ட கும்பலொன்று, பூநாறிமரம் பகுதியில் வைத்து மறித்து, கலைத்து கலைத்து, கைக் கோடாலியால் வெட்டியும் பொல்லுகளால் கடுமையாகவும் தாக்கியது. தாக்குதலில் நிலைகுலைந்த ஓர் இளைஞர் சம்பவ இடத்திலேயே வீழ்ந்தார். மற்றைய இளைஞர் ஓடித் தப்பினார்.

சினிமாப் படப் பாணியில் நேற்று மாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தால் அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

21ஆம் பக்கம் பார்க்க

## புதுப்பிக்கப்படுகிறது வாக்காளர் பட்டியல்

யாழ்ப்பாணம், மே 21

2014 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியலைப் புதுப்பிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்த யாழ். மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் பொ. குகநாதன், வாக்காளராகப் பதிவு செய்யத் தகுதியான அனைவரையும் பதிவு செய்யுமாறும் கோரிக்கை விடுத்தார்.

இதுகுறித்து அவர் தெரிவிக்கையில்,

"ஒவ்வொரு ஆண்டும் வாக்காளர் பெயர் பட்டியல் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றது. அதனடிப்படையில் இந்த ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் மீளாய்வு நடவடிக்கைகள் கடந்த 16 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கிராம சேவையாளர்கள் ஊடாக பி.சி. படிவம் வீடு வீடாக விநி

21ஆம் பக்கம் பார்க்க



**இலங்கையில் மாற்றம் ஒன்றை மோடியின் அரசு ஏற்படுத்தும்**

பக்கம் 12

### இந்திய புலனாய்வு சந்தேகநபருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், மே 21

இலங்கையில் கடந்த 19 ஆண்டுகளாக தங்கியிருந்த, இந்திய புலனாய்வு முகவர் நிலையத்தின் (றோ) அதிகாரி என்ற சந்தேகத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்ட நபரை எதிர்வரும் 26 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு அநுராதபுரம் மாவட்ட நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

வட மத்திய மாகாண சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ரவி

— 21ஆம் பக்கம் பார்க்க

**15 நாள்களேயான குழந்தை ரூ.15 ஆயிரத்துக்கு விற்பனை**

அதிர்ச்சியூட்டும் தகவல் 2 ஆம் பக்கத்தில்

## போர்க்குற்ற விசாரணையை ஏற்க வேண்டும் இலங்கை

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து

கொழும்பு, மே 21

போரால் பாதிக்கப்பட்டு நீதியை எதிர்பார்த்திருக்கும் மக்களுக்காக, ஐ.நா. மனித உரிமைகள் சபையினூடாக முன்னெடுக்கப்படும் போர்க் குற்ற விசாரணைகளுக்கு இலங்கை அரசு ஒத்துழைக்க வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் மீண்டும் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மனித உரிமைகள் கண்காணிப்

21ஆம் பக்கம் பார்க்க

## வெளிநாடு அனுப்புவதாகக் கூறி பெருந்தொகைப் பணம் மோசடி

### இரு பெண்கள் மீது குற்றஞ்சாட்டி டசின் கணக்கானவர்கள் வீட்டின் முன் போராட்டம்



மனம் அளவித் தூற்றுபவர்தான் மோசடியில் ஈடுபட்டவர்

யாழ்ப்பாணம், மே 21

ஆட்களை வெளிநாடு அனுப்புவதாகக்கூறி தம்மிடம் இருந்து லட்சக் கணக்கில் பணத்தை மோசடி செய்தார்கள் என்று குற்றஞ்சாட்டி யாழ். நகரில் கஸ்தூரியார் வீதியில், இந்துக் கல்லூரிக்குச் சமீபமாக உள்ள வீட்டின் முன்னால் கூடிய டசின்கணக்கானவர்கள், வீட்டில் இருந்தவர்களை திட்டித் தீர்த்த சம்பவம் நேற்று நடைபெற்றது.

இதனை அடுத்து அந்த இடத்திற்கு வந்த பொலிஸார் அந்த வீட்டில் இருந்த மூதாட்டியையும் மற்றொரு பெண்ணையும் பொலிஸ் நிலையத்துக்கு

21ஆம் பக்கம் பார்க்க

# உதயன் பணிமனை முற்றுகை; ஊடக அமைப்புகள் கண்டனம்

**இது உதயன் மீதான இராணுவத் துன்புறுத்தல் என்றும், ஊடக சுதந்திரத்தின் மீதான பாரிய மீறல் அந்த அமைப்புகள் குற்றஞ்சாட்டியுள்ளன**

கொழும்பு, மே. 21

'உதயன்' பத்திரிகை அலுவலகம் படையினராலும், புலனாய்வாளர்களாலும் முற்றுகையிடப்பட்டமைக்கு எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பும் (ஆர்.எஸ்.எவ்.), இலங்கையில் ஜனநாயகத்துக்கான ஊடகவியலாளர் அமைப்பும் கண்டனம் தெரிவித்துள்ளன.

வடக்கில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகள் கடைப்பிடிக்கப்பட்ட, கடந்த 18 ஆம் திகதி உதயன் பணியகத்துக்குச் செல்லும், கன்னாதிட்டி மற்றும் நாவலர் வீதிச் சந்தியை, முற்றுகையிட்டிருந்த ஆயுதம் தாங்கிய படையினரும், புலனாய்வாளர்களும், அந்தப் பகுதி ஊடாக போக்குவரத்து செய்வதை தடுத்ததுடன், உதயன் பணியகத்துக்கு செல்வோரையும், கண்காணித்துக் கொண்டிருந்தனர்.

இது உதயன் மீதான இராணுவத் துன்புறுத்தல் என்றும், ஊடக சுதந்திரத்தின் மீதான பாரிய மீறல் என்றும், எல்லைகளற்ற ஊடகவியலாளர் அமைப்பின் ஆசிய பகுதி தலைவரான பென்ஜமின் இஸ்மாயில் தெரிவித்துள்ளார். போர் முடிந்து ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னரும், இலங்கை அரசு மிகவும் மோசமான வழிமுறைகளின் மூலம், போர் பற்றிய தகவல்கள் வெளியாவதை தணிக்கை செய்யப்படுகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன் முள்ளிவாய்க்கால் படுகொலைகளை நினைவுகூரும் கவிதைகள் மற்றும் உயிர் தப்பியோரின் சாட்சியங்கள் அடங்கிய, 'முள்ளிவாய்க்கால் துயர் மலர் 05' - என்ற சிறப்பு இணைப்பை உதயன் வெளியிட்டிருந்தமையையும் ஆர்.எஸ்.எவ் அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது. (ற-5)

## வெள்ளைக்கொடி படுகொலைக்கான மேலும் ஆதாரங்கள் வெளியாகின



கொழும்பு. மே 20

இறுதிப் போரின் போது வெள்ளைக் கொடியுடன் சரணடைந்தவர்கள் கொல்லப்பட்டார்கள் என்ற குற்றச்சாட்டுத் தொர்டர்பாக மேலும் பல ஆதாரங்கள் வெளியாகி வருகின்றன என்று தெரிவித்திருக்கிறார் மனித உரிமைகள் சட்டத்தரணியும் ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் நியமித்த இலங்கைப் போர்க் குற்றங்கள் தொடர்பான நிபுணர் குழுவின் அங்கத்தவருமான யஸ்மின் சூக்கா.

விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் மற்றும் சமாதானச் செயலகப் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் அடங்கிய குழுவினர் வெள்ளைக் கொடியுடன் சரணடைய முற்பட்டபோது சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன. வெள்ளைக் கொடி வழக்கு என இந்த விவகாரம் விழிக்கப்பட்டது.

வெள்ளைக் கொடிப் படுகொலைகள் தொடர்பான முழு விவரங்கள் அடங்கிய அறிக்கை ஒன்றை சர்வதேச உண்மை மற்றும் நீதிக்கான திட்டம் என்ற அமைப்பு வெளியிட்டுள்ளது. இதில் சூக்காவும் ஒருவராக இருந்துள்ளார்.

நடேசன், புலித்தேவன் ஆகியோர் சரணடைவது தொடர்பாக அரச பிரமுகர்களுடன் நடத்தப்பட்ட உரையர்டல்களின் எழுத்து வடிவம், சரணடைவது எப்படி என்று வெளிநாட்டில் இருந்த ஒரு பிரமுகர் மூலமாக வெளிவிவகார அமைச்சுச் செயலாளர் பாலித ஹோகன்ன அனுப்பிய குறுந்தகவல் போன்ற விவரங்கள் அந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளன. (உ)

## இளம்பெண் வெட்டிக் கொலை

மன்னார், மே 21

மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கரிக்கா முறிப்பு கிராமத்தில் பெண் ஒருவர் நேற்றுமுன்தினம் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார். 31 வயதுடைய ஒரு வயதுக் குழந்தை யின் தாயான ராமநாதன் வசந்தி என்பரே கொல்லப்பட்டவராவார்.

நேற்று முன்தினம் மாலை 5 மணியளவில் குறித்த இளம் குடும்பப்பெண் அவருடைய வீட்டில் வைத்து கழுத்துப்பகுதி வெட்டப்பட்டு இரத்தவெள்ளத்தில் வீழ்ந்திருந்ததைக் கண்ட அயலவர்கள் பொலிஸாருக்கு தெரியப்படுத்தினர். அதையடுத்து முருங்கன் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை காலை மன்னார் நீதிவான் ஆனந்தி கனகரட்ணம் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டதோடு சடலத்தை உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்துமாறு அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

அதேவேளை, குறித்த பெண்ணின் கணவர் தலைமறைவாகியுள்ளார் என்று கூறப்படுகின்றது. (ற-56)



முன்னாள் பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக, கொழும்பு, பிரதான நீதவான் நீதிமன்றில் நேற்று நடைபெற்ற வழக்கு விசாரணையை முடித்துக்கொண்டு வெளியேறுகின்றார். அவருடன் வழகறிஞர் குணரட்ன வன்னிநாயகவும் காணப்படுகின்றார்.

## வெற்றிக் கொண்டாட்டங்கள் இலங்கைக்கு தேவையில்லை

**மீண்டும் வலியுறுத்துகின்றது கனடா**

கொழும்பு, மே. 21

போர் வெற்றிக் கொண்டாட்டங்கள் இலங்கைக்குத் தேவையில்லை என்று மீளவும் வலியுறுத்தியுள்ள கனடா, நல்லிணக்க முயற்சிகளே தற்போது முன்னெடுக்கப்பட வேண்டும் என்று தெரிவித்துள்ளது.

இலங்கை அரசினால் கொண்டாடப்பட்ட போர் வெற்றி விழா கடந்த மே 18 ஆம் திகதி மாத்தறையில் இடம்பெற்றது. இதில் பங்கெடுக்கப் போவதில்லை என்று இலங்கைக்கான கனேடியத் தூதுவர், ஐஷல்லி வைட்டிங் தெரிவித்திருந்தார். இறந்த மக்களுக்காக ஓர் நாளை கடைப்பிடிக்குமாறும் அவர் கோரியிருந்தார்.

இவ்வாறானதொரு நிலையில் போர் வெற்றி விழாவில் உரையாற்றிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ், எவர் என்ன சொன்னாலும் போர் வெற்றிக் கொண்டாட்டங்கள் நடந்தே தீரும் என்று தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், தற்போதைய நிலையில் இலங்கைக்கு தேவையாக இருப்பது நல்லிணக்க முயற்சிகளே [illegible] வெற்றிக் கொண்டாட்டங்கள் அல்ல என்று கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெயார்ட் தெரிவித்துள்ளார். இதன் காரணமாகவே போர் வெற்றி நிகழ்வை கனடா புறக்கணித்ததாகவும் அவர் உறுதிப்படுத்தியுள்ளார். (ற-5)

## 15 நாள்களேயான குழந்தை ரூ.15 ஆயிரத்துக்கு விற்பனை

**மன்னாரில் சம்பவம்**

மன்னார், மே 21

பிறந்து 15 நாள்களேயான குழந்தை ஒன்று ரூபா 15 ஆயிரத்துக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது. மன்னார் பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து அந்தக் குழந்தை தற்போது மீட்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்துத் தெரியவருவதாவது,

மன்னார் தாராபுரம் கிராமத்தில் உள்ள தம்பதியர்கள் பிறந்து 15 நாள்களேயான குழந்தை ஒன்றை 15 ஆயிரம் ரூபா கொடுத்துப் வாங்கியுள்ளனர். இந்தத் தகவல் எப்படியோ மன்னார் பொலிஸாருக்கு எட்டியுள்ளது. அதையடுத்து நேற்றுக்காலை தாராபுரம் கிராமத் திற்குச் சென்ற மன்னார் பொலிஸ் நிலையத்தின் போதைப் பொருள் தடுப்புப்பிரிவு அதிகாரி மற்றும் பொலிஸ் நிலைய சிறுவர்.பெண்கள் பிரிவின் நிலைய அதிகாரி உள்ளிட்ட குழுவினர் குழந்தையை மீட் டுள்ளனர். அத்துடன் குறித்த தம்பதியரையும் கைது செய்துள்ளனர்.

முதற்கட்ட விசாரணைகளில், குறித்த குழந்தை கடந்த 4 தினங்களுக்கு முன்னர் 15 ஆயிரம் ரூபா கொடுத்து வாங்கப்பட்டது என்றும், அந்தக் குழந்தை யின் தாய் வவுனியா செட்டிக்குளம் பகுதியைச் சேர்ந்தவர் என்றும் தெரியவந்துள்ளது. இதுகுறித்த மேலதிக விசாரணைகளைத் தற்போது பொலிஸார் மேற்கொண்டு வருகின்ற (ற-56)

# போரால் மரணித்த தமிழருக்கும் அஞ்சலி செலுத்தப்பட வேண்டும்

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கோரிக்கை**

கொழும்பு, மே 21

"இராணுவத்தினருக்கு நாடாளுமன்ற வளாகத்தில் அஞ்சலி செலுத்தப்பட்டது. இதை நாம் பிழையெனக் கூறவில்லை. இதேபோல், போரால் உயிரிழந்த தமிழ் மக்களுக்கும் அஞ்சலி செலுத்தப்படவேண்டும். அப்போதுதான் நல்லிணக் கம் என்பது சாத்தியமாகும்."

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசா நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றிய அவர் மேலும் கூறியவை வருமாறு:-

இந்த அரசுக்கு எதிராக நாங்கள் தான் நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை கொண்டு வந்திருக்க வேண்டும். எனினும், ஐக்கிய தேசியக் கட்சி அதைக் கொண்டுவந்துள்ளது. இதைநாம்ஆதரிப்போம்.போதைவஸ்து என்பது கொடூர வர்த்தகமாகும். இதை அரசு ஆதரிக்கின்றதா? இல்லையா? இதற்கு எமக்குத் தெளிவான பதில் அவசியம்.

தென்னிலங்கையில் மட்டுமல்ல, வடக்கில் இராணுவப் பாதுகாப்பு ஒரு வீட்டுக்கு ஓர் இராணுவம் என்ற அடிப்படையில் பலப்பட்டிருந்தாலும் அங்கும் போதைவஸ்துப் பாவனையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துவருகின்றது. எனவே, சட்டம், ஒழுங்கை அரசு நிலை நாட்டவேண்டும்.

17ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டம் ஒழிக்கப்பட்டு 18 ஆவது திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்ட தன் பலாபலன்களே இந்தக் கொடூர நிலைமைகளாகும். நீதி, பொலிஸ் துறைகளால் சுயாதீனமாக செயற்பட முடியவில்லை.

அதேவேளை, போதைவெறி போன்று இந்த நாட்டில் தற்போது மதவெறி, இனவெறி ஆகியனவும தலைவிரித்தாடுகின்றன. குறிப்பாக, இந்துக்களின் ஈமச்சடங்கு நிகழ்வை இராணுவத்தினர் தடுத்துநிறுத்தியுள்ளனர். மே 18ஆம் திகதியன்று உயிரிழந்த தமிழ் மக்களுக்கு ஒரு துளி கண்ணீரைச் சிந்துவதற்குக்கூட அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

இதற்குப் பெயர் மதவெறி அல்லவா? கீரிமலைக்கு பிதிர்க்கடன் கிரியைகளை செய்வதற்கு தடைவிதிக்கப் பட்டுள்ளது. யாழ். பல்லைக்கழகம் மூடப்பட்டது. தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும், உள்ளூராட்சி மன்றத் தலைவர்களும் கண்காணிக்கப்பட்டனர். நல்லூர்க் கோவில் வளாகத்திலும் இராணுவம்குவிக்கப்பட்டது.

இராணுவத்தினருக்கு நேற்று முன்தினம் நாடாளுமன்ற வளாகத்தில் நீங்கள் அஞ்சலி செலுத்தினீர்கள். இது சரி. அதேபோல், உயிரிழந்த தமிழ் மக்களுக்கு நாடாளு மன்ற வளாகத்தில் ஏன் அஞ்சலி செலுத்தக்கூடாது? நிலைமை இப்படி இருந்தால் நல்லிணக்கம் சாத்தியமாகுமா? - என்றார். (ற-சி)

# நியதிச் சட்ட உருவாக்கத்துக்கான செலவீனங்களுக்கு சுவிஸ் உதவும்

## வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 21

வடக்கு மாகாண சபையின் நியதிச் சட்ட உருவாக்கத்துக்கான செலவீனங்களுக்கு உதவுவதற்கு சுவிஸ் அரசு முன்வந்துள்ளது என்று தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண அவைத் தலைவர் சீ.வி.கே. சிவஞானம்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நேற்றுமுன்தினம் சுவிஸ் நாட்டின் அரசியல் விவகாரச் செயலாளர் டேவிற் விக்னறி யுடனான சந்திப்பொன்று வடக்கு மாகான சபையின் பேரவைச் செயலகத்தில் நடை பெற்றது. அந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண சபை மூலமாக மாகாணத்தின் முக்கிய நிதியீட்டல்களை நேரடியாகப் பெற வேண்டும் எனில் வடக்கு மாகாண சபைக்கென ஒரு நியதிச் சட்டம் உருவாக்கப்பட்டு அதனை சபையில் நிறைவேற்றவேண்டும் என்பது பற்றியும், அது தொடர்பான ஆவணங்களைத் தயாரிப்பதற்கான நிதிச் செலவீனங்கள் தொடர்பில் அவருடன் பேசப்பட்டது. அதன்போது தேவையான நிதியை தமது நாட்டு அரசு வழங்கும் என்று அவர் உறுதியளித்தார்.

இந்தச் சந்திப்பில் தற்போதைய அரசியல் நிலைவரங்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. இந்தச் சந்திப்பில் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்களான சிவயோகம் பரஞ்சோதி, சுகிர்தன் மற்றும் சயந்தன் ஆகியோரும் உடனிருந்தனர்"- என்று தெரிவித்தார். (ற-101)

# ரவிகரனுக்கு எதிரான வழக்கை தள்ளுபடிசெய்தது முல்லை. நீதிமன்று

யாழ்ப்பாணம், மே 21

நீதிமன்றம் முன் ஆர்ப்பாட்டம் செய்வதைத் தவிர்ப்பது நல்லது என்று மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனுக்கு அறிவுரை கூறி பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கைத் தள்ளுபடி செய்தார் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி .

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வடக்கு மாகாணசபை உறுப்பினர் து.ரவிகரனை, முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் நேற்று முன்னிலையாகுமாறு, நேற்று முன்தினம் அறிவுறுத்தல் கொடுக்கப்பட்டிருந்தது. அதில் வழக்கு இலக்கம் மாத்திரம் குறிப்பிடப்பட்டிருந்தது. குறித்த வழக்கு என்ன காரணத்துக்காக யாரால் தாக்கல் செய்யப்பட்டிருந்தது என்று எதுவும் குறிப்பிடப்படவில்லை.

நேற்று நீதிமன்றில், சட்டத்தரணி த.பரஞ்சோதி ஊடாக மன்றில் முன்னிலையானார் ரவிகரன். காணாமற்போனோர் தொடர்பிலான வழக்கு முல்லைத்தீவு மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. குறித்த வழக்கினை துரிதப்படுத்தக் கோரி முல்லை மாவட்ட நீதிமன்றம் முன்பாக ரவிகரன் தலைமையில் இன்று (நேற்று) ஆர்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக தமக்குப் புலனாய்வுத் தகவல் கள் கிடைத்துள்ளதாகவும் அதற்காகவே வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸாரால் மன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் போது மன்றில் பதிலளித்த து.ரவிகரன், காணாமற்போனவர்கள் எங்களுடைய உறவுகள். அவர்களுக்காக ஆர்ப்பாட்டம் செய்யக் கூடாதென்பதல்ல எனது நோக்கம். ஆனால் இன்று(நேற்று) எந்த நடவடிக்கைகளுக்கும் திட்டமிடவில்லை. இது பொலிஸா ரால் சோடிக்கப்பட்டதொன்று என்று குறிப்பிட்டார்.

இதனையே சட்டத்தரணியும் தனது வாதத்தில் வலியுறுத்தினார். இதனையடுத்து நீதிபதி, நீங்கள் உரிய அனுமதியைப் பெற்று அமைதிக்குப் பங்கமில்லாமல் ஆர்ப்பாட்டம் நடத்தலாம். ஆனால் நீதிமன்றத்தின் முன்னால் அதனைத் தவிர்ப்பது நல்லது என்று தெரிவித்து, பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கைத் தள்ளுபடி செய்துள்ளார். (ஐ-5)

# கட்சிகளை அரவணைத்துக்கொண்டு எந்தத் தேர்தலையும் சந்திக்கத் தயார்

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் சவால்

கொழும்பு, மே 21

ஜனாதிபதித் தேர்தலையோ அல்லது பொதுத் தேர்தலையோ அரசு அறி வித்தால் ஏனைய எதிர்க்கட்சிகளுடன் இணைந்து அந்தத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி களமிறங்கும் என எதிர்க்கட்சித் தலைவரும், ஐ.தே.கவின் தேசியத் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க நேற்று அறி வித்தார்.

நாடாளுமன்றில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்றக் குழுக் கூட்டத் தின்போதே அவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தலை அரசு அறிவித்ததன் பின்னர் எதிர்க்கட்சியின் வேட்பாளர் யார் என்பதை நாம் பகிரங்கமாக அறிவிப்போம் என்றும் தெரிவித்துள்ளார்.

எது எவ்வாறிருப்பினும், அடுத்தத் தேர்தலை அறிவிப்பதற்கு அரசு தயாரில்லை. அதனால், மக்களை அணிதிரட்டி தேர்தலொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக நாம் போராட்டம் நடத்துவோம்என்றும்தெரிவித்துள்ளார்.

# சங்கிலி திருட்டு

யாழ்ப்பாணம், மே 21

யாழ்.கொட்டடி பகுதியில் நேற்றுப் பகல் வீடு புகுந்த திருடர்கள் தங்கச் சங்கிலி ஒன்றைத் திருடிச் சென்றுள்ளனர் என்று யாழ்.பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டில் யாருமில்லாத நேரம் உள்நுழைந்த திருடர்கள் ஜன்னல் கம்பிகளை வளைத்து உள்நுழைந்து திருட்டில் ஈடுபட்டுள்ளனர். (ஐ-4)

# சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு மேல் மாகாண ஆளுநர் உதவ வேண்டும்

## மனோகணேசன் கோரிக்கை

கொழும்பு, மே 21

சிறுபான்மையினருக்கு எதிராக சட்டத்தை கையில் எடுக்கும் இனவாதிகளை தடுத்து நிறுத்தாமல், ஆளுநர் அலவி மௌலானாவின் கொள்கை பிரகடனத்தில் கூறப்பட்டுள்ள எந்த ஒரு பொருளாதார அபிவிருத்தி இலக்கையும் அடைய முடியாது என ஜனநாயக மக்கள் முன்னணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

மேல் மாகாணசபையில் ஆளுநரின் கொள்கைப் பிரகடனம் தொடர்பான விவாதம் நேற்று நடைபெற்றது. இதன்போது உரையாற்றிய மனோ கணேசன் மேலும் தெரிவித்ததாவது;

13ஆவது திருத்தத்தின்படி அமைக்கப்பட்டுள்ள மாகாண சபைகளுக்கான சட்டம், ஒழுங்கு தொடர்பான அதிகாரம் அந்தந்த மாகாணங்களுக்கு உரித்துடையன. மேல் மாகாண முதலைமைச்சர் பிரசன்ன ரணதுங்க நிதி, கல்வி, உள்ளூராட்சி ஆகிய துறைகளுடன் சட்டம், ஒழுங்கு ஆகியவற்றையும் விடயங்களையும் கொண்டாள்கிறார் என்று அவரது அமைச்சு பொறுப்புகள் மற்றும் அதிகாரங்கள் பற்றிய பிரகடனம் கூறுகிறது.

சட்டம் ஒழுங்கு தொடர்பான பொறுப்புக்கள் முதலமைச்சருக்கு இருக்கின்றன. ஆனால் இன்று அவை சீர்குலைக்கப்பட்டுள்ளன. இது குறித்து நாம் பெரும்கவலையடைகின்றோம். அரசுடன் இருந்து சட்டம், ஒழுங்கை சீர்குலைக்க முயற்சிப்பவர்களை தடுத்து நிறுத்த இந்தச் சபை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த நாட்டில் இன்று சட்டமும், ஒழுங்கும் சீர்குலைந்துள்ளன. சட்டத்தை தங்கள் கைகளில் எடுத்துகொண்டு செயற்படலாம் என ஒரு சாரார் நினைக்கின்றனர். இவை அனைத்தும்மேல்மாகாணத்தில் இருந்து தான் ஆரம்பித்து முழு நாட்டுக்கும் பரவுகின்றன.

சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்துள்ள நிலையில் பொருளாதார அபிவிருத்தி என்பது ஒரு கனவு மாத்திரமே.

மேல்மாகாணத்தின் அழுத்கம நகரில் கடந்த 10ஆம் திகதி ஒரு வர்த்தக நிலையம் எரியூட்டப்பட்டது. சம்பவம் இடம்பெறுவதற்கு முன்னர் ஒரு அமைப்பினர் பகிரங்கமாகவே கடை எரிப்போம் என தெரிவித்திருந்தனர். இது குறித்து பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் அன்றிரவு அந்த கடை அறிவிக்கப்பட்டபடி எரியூட்டப் பட்டது. இதை எவராலும் தடுத்து விட முடியவில்லை. இவ்வாறான சம்பவங்கள் தான் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளது என்பதற்கு எடுத்துக்காட்டாகும் - என்றார். (ஐ)

# வட மாகாண சபையின் பிரியாவிடையில் கண்கலங்கினார் இந்திய துணை தூதர்

யாழ்ப்பாணம், மே 21

வடக்கு மாகாணசபையினால் நடத்தப்பட்ட பிரியாவிடை வைபவத்தில் கலந்து கொண்ட இந்தியத் துணைத்தூதுவர் வி.மகாலிங்கம் கண்கலங்கினார்.

யாழிலுள்ள இந்தியத் தூதரகத்தில் துணைத் தூதராகப் பணியாற்றிய வி.மகாலிங்கம், கயானாவுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்கின்றார். இவருக்கான பிரியாவிடை வைபவம் வடக்கு மாகாணசபையினால் நேற்று இரவு யாழ்.நகரிலுள்ள விடுதியொன்றில் நடத்தப்பட்டது.

**ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி பங்கெடுக்க வில்லை**

வடக்கு மாகாணசபையில் 38 உறுப்பினர்கள் உள்ள நிலையில் நேற்றைய பிரியாவிடை நிகழ்வில் அரைவாசிக்கும் குறைவான உறுப்பினர்களே பங்கெடுத்துள்ளனர். எதிர்க்கட்சி சார்பில் சி.தவராஜாவும், தவநாதனுமே பங்கெடுத்தனர். ஏனைய எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பங்கெடுக்கவில்லை. அதேபோன்று ஆளுங் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் 12 உறுப்பினர்கள் வரையில் பங்கெடுக்கவில்லை.

அவைத் தலைவர், கல்வி அமைச்சா த.குருகுலராஜா, உறுப்பினர் அஸ்மின் மற்றும் முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஆகியோர், அவரது சேவையையும் இந்தியாவையும் பாராட்டிப் பேசினர். பின் பதில் உரையாற்றிய வி.மகாலிங்கம், இந்த மண்ணை விட்டு பிரிவது வேதனையாக இருக்கின்றது என்று சொல்லும் போது அவரது கண்கள் கலங்கின. பின்னர் அதைத் துடைத்துக் கொண்டு உரையாற்றினார். (ஐ-5)

# மே 18இல் வடக்கில் இராணுவ அடக்குமுறை: கூட்டமைப்பின் குற்றச்சாட்டுக்கு அரசு எதிர்ப்பு

## சபையில் நேற்று கடும் சொற்போர்

கொழும்பு, மே 21

போரால் உயிரிழந்த மக்களை நினைவுகூருவதற்கு மே 18ஆம் திகதி தடை விதிக்கப்பட்டமை, அத்தினத்தில் வடக்கில் இராணுவ சுற்றிவளைப்புகள் இடம்பெற்றமை போன்ற விடயங்கள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா நேற்றுச் சபையில் பேசுகையில், அதற்கு ஆளுந்தரப்பினர் கடும் எதிர்ப்பை வெளியிட்டதால் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவுக்கும் ஆளுந்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு மிடையில் கடும் சொற்போர் இடம்பெற்றது.

நாடாளுமன்றம் நேற்றுப் பிற்பகல் ஒரு மணிக்கு பிரதி சபாநாயகர் சந்திம வீரக்கொடி தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்பு, பொதுமனுத் தாக்கல், வாய்மூல விடைக்கான கேள்வி நேரம் ஆகியன முடிவடைந்த பின்னர் அரசுக்கு எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியால் கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மீதான விவாதம் ஆரம்பமானது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உப தலைவரான ஜோசப் மைக்கல் பெரேரா பிரேரணையை சமர்ப் பித்து விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றினார். நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க அதை வழி மொழிந்து உரையாற்றினார். அதன் பின்னர் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா உரையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மாவை நாடாளுமன்ற உறுப்பினர் சேனாதிராசா உரையாற்றினார். அவர் தமதுரையின்போது, போதைவஸ்து பாவனையால் ஏற்படும் சீரழிவுகளைச் சுட்டிக்காட்டிப் பேசினார். வடக்கில் ஒரு வீட்டுக்கு ஓர் இராணுவச் சிப்பாய் என்ற அடிப்படையில், பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தாலும் அங்கும் போதைவஸ்து பாவிப்போர் தொகை அதிகரித்து வருகின்றது என்றும் கூறினார்.

இவ்வாறு உரையாற்றிக் கொண்டிருக்கையில், நாட்டில் போதைவெறி தலை தூக்கியுள்ளது போல் மதவெறி, இனவெறி ஆகியவையும்தலை தூக்கியுள்ளன எனச் சுட்டிக்காட்டி மே 18 திகதி வடக்கில் நடந்தவற்றை விரிவாக சபையில் விவரித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா.

இதன்போது, ஒழுங்குப் பிரச்சினையொன்றை எழுப்பிய பிரதியமைச்சர் சரத் வீரசேகர, மக்களை நினைவுகூர தடை விதிக்கவில்லை எனக் குறிப்பிடுகையில், இது ஒழுங்குப் பிரச்சினை அல்லவென்று மாவை சேனாதிராசா வாதிட்டார். மாவையுடன் இணைந்து சுமந்திரனும் குரல் எழுப்பினார். இதனையடுத்து, சுகாதார பிரதியமைச்சர் லலித் திஸாநாயக்கவும் கூட்டமைப்பினருடன் தர்க்கத்தில் ஈடுபட்டார்.

பிரதியமைச்சர்கள் இருவரும் எழுந்து நின்று, "கொட்டி, கொட்டி" எனக் கத்தினர். இதற்கு மாவை சேனாதிராசா பதிலடி கொடுத்துக்கொண்டிருந்தார். இதனால், சபையில் பெரும் கூச்சல் குழப்பம் ஏற்பட்டது.

யாழ். பல்கலைக்கழகம் மூடப்பட்ட விவகாரம் குறித்து மாவை சேனாதிராசா பேசுகையில்:-

அவருக்கும், அமைச்சர் டக்ளஸுக்கும் இடையில் சூடான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன.

ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரனும் ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பி, பிரதி சுகாதார அமைச்சர் லலித் திஸாநாயக்கவுடன் சொற்போரில் ஈடுபட்டார். சபையில் கடும் சத்தம் ஏற்பட்டதால் இவர்கள் கூறிய விடயங்கள் தெளிவாக விளங்கவில்லை.

ஒலிவாங்கிகள் நிறுத்தி வைக்கப்பட்டதால் பிரதியமைச்சர்கள் - மாவைக்குமிடையில் ஏற்பட்ட கருத்துப் பரிமாற்றல்கள் தெளிவாக விளங்கவில்லை.

## மின்தடை

உயர் அழுத்த தாழ் அழுத்த மின்விநியோக மார்க்கங்களின் இணைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகள் நடைபெற இருப்பதால் சில இடங்களில் மின்சாரம் தடைப்படும் என இலங்கை மின்சார சபையின் யாழ் அலுவலகம் அறிவித்துள்ளது. இதன்படி இன்று புதன்கிழமை மற்றும் எதிர்வரும் சனிக்கிழமை 24 ஆம் திகதி ஆகிய தினங்களில் காலை 8 மணியிலிருந்த மாலை 5.30 மணி வரை குடத்தனை, நடுக்குடத்தனை, பொற்பதி, குடத்தனை வடக்கு கடற்கரைப் பகுதி, மணற்காடு சந்தி, மணற்காடு வடக்கு, அம் மன் ஆகிய இடங்களிலும் நாளை வியாழக்கிழமை காலை 08.00 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரை வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவு ஆகிய இடங்களிலும்மின்சாரம்தடைப்பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## வடக்கு மாகாண ஆளுநராவதற்கு சந்தர்ப்பம் கோருகிறார் றெமிஜியஸ்

### 'சிலோன் ருடே' தகவல்

கொழும்பு, மே 21

யாழ்ப்பாணத்தை கடைசியாக ஆண்ட தமிழ் மன்னனான சங்கிலியனின் வாரிசு என்று தன்னைத் தானே அறிவித்துக் கொண்டுள்ள றெமிஜியஸ் கனகராஜா, வடக்கு மாகாண ஆளுநராகப் பணியாற்றுவதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துள்ளார் என்று ஆங்கிலப் பத்திரிகையான 'சிலோன் ருடே' செய்தி வெளியிட்டுள்ளது.

றெமிஜியஸ்கனகராஜாதற்போதுநெதர்லாந்தில் வசித்து வருகிறார். முடிக்குரிய அரசர்களுக்குரிய சடங்கா சாரங்களை அவர் இன்னமும் பின் பற்றி வருகிறார். கடந்த மாதம் நெதர்லாந்து சென்றிருந்த அமைச் சர் ராஜித சேனாரத்னவை அவர் சந்தித்துப் பேசி யுள்ளார்.

**இராணுவ ஆளுநர் தேவையில்லை**

இந்தச் சந்திப்புத் தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது, என் மீதான தடையை நீக்கி, அதிகாரபூர்வமாக அழைப்பு விடுத்தால், நாடு திரும்பி வடக் கிலுள்ள மக்களுக்குச் சேவையாற்றத் தயாராக இருக்கின் றேன். வடக்குக்கு ஓர் இராணுவ ஆளுநர் தேவை யில்லை. சிவில் ஆளுநரே தேவை. நான் அந்தப் பணியை ஆற்றத் தயா ராக இருப்பதாகவும் அமைச் சர் ராஜித சேனாரத்ன விடம் குறிப்பிட்டேன்.

போர் முடிந்து ஐந்து ஆண்டு களாகி விட்ட நிலையிலும் முன் னாள் இராணுவ அதிகாரியே வடக்கில் ஆட்சி நடத்துகிறார். எதிர்வரும் ஜூனில் மற்றொரு பாதுகாப்பு அதிகாரியே மீண்டும் ஆளுநராக நியமிக்கப்படவுள் ளார். இது தொடரக் கூடாது இந்த நிலை மாற்றப்பட வேண்டும்.

இலங்கை அரசு அனுமதித் தால், ஓர் அமைச்சராகவோ அல்லது வடக்கு மாகாண சபைக்கும், இலங்கை அரசுக் கும் இடையில் ஒரு தூதராகவோ கூடப் பணியாற்றவும் தயாராக இருக்கிறேன், என்று ராஜிதவிடம் குறிப்பிட்டதாக றெமிஜியஸ் கனகராஜா தெரிவித்துள்ளார். (வ-5)

## கண்ணீர் அஞ்சலி



எமது நெடுந்தீவு பிரதேச செயலர் ஆ.சிறி அவர்களின் அன்புத் தயாார்

### திருமதி லெட்சுமிப்பிள்ளை ஆழ்வாப்பிள்ளை

17.05.2014 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் குடும்பத்தார் மற்றும் உறவுகள் அனைவருக் கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித் துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலக ஊழியர்கள்,**
**நெடுந்தீவு பிரதேச செயலகம்.**

## மரண அறிவித்தல்

### திருமதி திருநடனம் சுப்பிரமணியம் (கமலம்)



அளவெட்டி கேணிக்கரையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி திருநடனம் சுப்பிரமணியம் (கமலம்) நேற்று (20. 05. 2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - விசாலாட்சி தம்பதியினரின் மகளும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும்.நாகலிங்கம், நடராசா ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.2014) புதன்கிழமை பிற்பகல் 12.30 மணிளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனகிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கேணிக்கரை வீதி,*
*அளவெட்டி.*

தகவல்:
**ந.கணேசமூர்த்தி**

## மரண அறிவித்தல்

### திருமதி சிவமலர் அரியரத்தினம்



குரும்பசிட்டி கிழக்கை பிறப்பிடமாகவும், நீராவியடியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி சிவமலர் அரியரத்தினம் நேற்று (20.05.2014) செவ்வாய்க்கிழமை இறைபதம் எய்தியுள்ளார். அன்னார் குரும்பசிட்டி கிழக்கை சேர்ந்த காலம் சென்ற பொன்னுத்துரை ஞானவல்லி தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும். அரியரத்தினத்தின் (ஒய்வு பெற்ற கணக்காளர், மாவட்ட செயலகம் யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும் திலீபன் (U.K) Dr.நிருபா (குழந்தை வைத்திய நிபுணர் போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத் தாயும் நிவேதிதா (U.K), Dr. கந்தசாமி உமாசங்கர் (சத்திரசிகிச்சை நிபுணர், ஆதார வைத்திய சாலை பருத்தித்துறை) ஆகியோரின் அன்பு மாமியாரும், மிருணா ளினி, பிருந்தன், லஷ்மி(U.K),அபிஷா, அபினாஷ் ஆகியோரின் அன்பு பாட்டியும். சிவகுமார் சிவனேஸ்வரி (நீர் கொழும்பு), சிவ நாதன்(ஜேர்மனி) சிவராசா ( சுவீடன்) சிவமணி (தலவாக்கலை) ஆகியோரின் சகோதரியும் இராஜேஸ்வரி, செல்வரத்தினம் (நீர்கொழும்பு), யசோதா (ஜேர்மனி) லீலா (சுவீடன்) பஞ்சானந்தன் (தலவாக்கலை).ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று ( 21.05.2014) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப.200 மணியளவில் கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு தகனத்திற்காக எடுத்து செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-
Dr. க.உமாசங்கர்
021 222 1798 37/3, சிவத்தீனநர் ஒழுங்கை, பிரவுன்றோட் [illegible], யாழ்ப்பாணம்
(48294)

## வழிபாட்டுத்தலங்கள் மீது சிறு தாக்குதல்களே நடந்தன

### சபையில் நேற்று அரச தரப்பு தகவல்

கொழும்பு, மே 21

இலங்கையில் சிறுபான்மை யின வழிபாட்டுத் தலங்கள் மீது இதுவரை யில் பெரிய ளவிலான தாக்குதல்கள் இடம் பெறவில்லை என நேற்று சபையில் தெரிவித்த அரசு, ஓரிரு சிறு சம்பவங்களே இடம் பெற்றுள்ளன என் றும் அவை தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தது.

நாடாளுமன்றில் நேற்று இடம் பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க எழுப்பிய கேள் விக்குப் பதிலளித்தபோதே பௌத்த சாசன மற்றும் மத விவகார பிரதியமைச்சர் எம்.கே. டி.எஸ். குணவர்தன மேற் கண்டவாறு தெரிவித்தார்.

2012ஆம் ஆண்டின் சனத் தொகைப்படி ஒரு கோடியே 42 இலட் சத்து 22 ஆயிரத்து 344 (70.2%) பௌத்தர்க ளும், 25 இலட்சத்து 54 ஆயி ரத்து 606 (12.6%) இந்துக் களும், 19 இலட்சத்து 67 ஆயி ரத்து 227 (9.7%) இஸ்லாமியர்களும், 12 இலட்சத்து 37 ஆயிரத்து 038 (6.1%) ரோமன் கத்தோலிக்கர்களும், 2 இலட்சத்து 72 ஆயிரத்து 568 (1.3%) கத்தோலிக்கரல்லாத கிறிஸ்தவர்களும் உள்ளனர் - என்றார்.

இதனையடுத்து பல்லின மக் கள் வாழும் நாட்டில் அனை வருக்கும் பாதுகாப்பு வழங்கப் படவேண்டும். அப்படியாயின் ஏன் வழிபாட்டுத் தலங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட வேண்டும்? - என ரவி கரு ணாநாயக்க எழுப்பிய கேள்விக்கு அமைச்சர் குணவர் தன பதிலளிக்கையில்,

வழிபாட்டுத் தலங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் குறித்து சமர்ப்பிக்கப்பட்ட முறைப் பாட்டுக்கமைய நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சிறுசிறு குழுக்களே இவ்வாறான சம்ப வங்களில் ஈடுபடுகின்றன - என்றார்.


## விற்பனைக்கு

டோபர்மன் நாய்க் குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 605 3845

## பணம் வசூலிப்பவர் தேவை

சிங்களம் தெரிந்திருக்க வேண்டும். மாதாந்தம் 30,000 தொடக்கம் 40,000 வரை சம்பாதிக்கலாம்.
தங்குமிடம் இலவசம் ஆவணங்களுடன் நேரில் வரவும்.

**சுஜித் என்ரபிறைசஸ்**

பருத்தித்துறை வீதி,
நுணாவில் சந்தி சாவகச்சேரி.
தொடர்பு: 021 227 0586,
077 4715318


## மரண அறிவித்தல்

### திருமதி பவளக்கொடி முத்துச்சாமி (ஆசாரியார்)



திருநெல்வேலி காளிகோவிலடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பவளக்கொடி முத்துச்சாமி (ஆசாரியார்) நேற்று (20.05. 2014) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம், சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற முத்துச்சாமியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான பொன்னையா சுந்தரம் தம்பதிகளின் அன்பு மருமகளும்,விஜயரத்தினத்தின் அன்புச் சகோதரியும், ஸ்ரீநிவாசன், சந்திரகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும்,கிருஷ்ணபேபி, பத்மாவதி (பிரான்ஸ்), ஆகியோரின் அன்பு மாமியாரும் சிந்துஜா, நர்மதா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், மகேஸ்வரியின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.2014) புதன் கிழமை பி.ப. 1 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*காளிகோவிலடி, திருநெல்வேலி.*
*தொ.பே.: 0756603669*

தகவல்:
மு.ஸ்ரீநிவாசன் (மகன்)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை பூபாலசிங்கம்

**(ஓய்வுபெற்ற கணக்காளர், சீமெந்துக் கூட்டுத்தாபனம் காங்கேசன்துறை)**



மந்துவில் மேற்கு மந்துவிலை பிறப்பிடமாகவும், ஐயா கடைச் சந்தி, சாவகச்சேரி வடக்கினைப் வசிப்பிட மாகவும் கொண்ட வேலுப்பிள்ளை பூபாலசிங்கம் (20.05.2014) செவ் வாய்க்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளை மற்றும் அன்னம்மா தம்பதியினரின் கனிஷ்ட புத்திர னும், இந்துமதியின் (ஓய்வுபெற்ற கணக்காளர், இலங்கை போக்குவரத் துச் சபை, கோண்டாவில்), அன்புக் கணவரும், விஜிதா, கோபி கிருஷ்ணா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.2014) புதன்கிழமை மு.ப. 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரிகைக்காக வேம்பிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

***ஐயா கடை சந்தி,***
***சாவகச்சேரி வடக்கு,***
***சாவகச்சேரி.***

***தகவல்:***
**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

### திருமதி பரமேஸ்வரி பொன்னையா



அச்சுவேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், அச்சுவேலி மேற்கு, ஆதவன் மில்லடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி பொன்னையா நேற்று (20.05.2014) செவ்வாய்க்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் கதிரன் பொன்னையாவின் அன்பு மனைவியும், வசந்தகுமாரியின் பாசமிகு தாயாரும், துரைராசாவின் அன்பு மாமியாரும், சுதர்சினி (பிரான்ஸ்), நிறோஜன் (பிராந்திய முகாமையாளர், செலிங்கோ லைவ் நிறுவனம்), நிர்மலறோஜன் (லண்டன்), தருநிதா, தசோனியா (அபிவிருத்தி உத்தியோகத்தர் கல்வி அமைச்சு வடக்கு மாகாணம்), ரவிமோகன் (பிரான்ஸ்), ஜனார்த்தனா, பிரியதர்சினி (லண்டன்), ஜெகன் (அபிவிருத்தி உத்தியோகத்தர், மாவட்ட நீதிமன்றம் - மல்லாகம்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சுதேஸ்சனா, சுபெக்சிகா, நிறைஞ்சன் (பிரான்ஸ்), ஸ்ருதிகா, அபினாஷ், நிபியா, கிபோஷன், வைஸ்ணவி (லண்டன்), நிவர்த்திகா, அசவிருதன், ஜெயகிருஷ்சாந் ஆகியோரின் அன்பு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.2014) புதன் கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.30 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக அச்சுவேலி தோப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

***ஆதவன் மில்லடி,***
***அச்சுவேலி மேற்கு,***
***அச்சுவேலி.***

***தகவல்:***
**குடும்பத்தினர்**

வலி. தெற்கு பிரதேச
21 MAY 2014
பொது சன நூலகம்
ஏழாலை

## நிர்வாக சேவைக்கு தெரிவாகியோர் விவரங்கள் இணையத்தில்

இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் - III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப்பரீட்சை மூலம் தெரிவு செய்யப் பட்டவர்களில் திறந்த நிலை, சேவை மூப்பு, திறமை நிலை ஆகியவை மூலமாக தெரிவானோரின்விவரங்கள்இலங்கை பொதுச் சேவைகள் ஆணைக் குழுவின் இணையத்தளத்தில்வெளியிடப்பட்டுள்ளது.

திறந்த நிலையில் நடைபெற்ற இரண்டு போட்டிப் பரீட்சைகளிலும் உரிய வெட்டுப்புள்ளியைப் பெற்ற 140 பேர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப் பட்டிருந்தனர். அவர்களில் நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட 135 பேரின் பெயர் விவரங்கள் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் வெளி யாகியுள்ளன.

இவற்றுக்கான நேர்முகப் பரீட்சைகள் கொழும்புக் கல்வி அமைச் சில் நடைபெற்றது. (வ-11)



யாழ்.தேவி ரயில் சேவையை யாழ்ப்பாணம்வரை விஸ்தரிப்பதை விரைவு படுத்துவதற்காகத் தற்போது அதிகமான தண்டவாளங்கள் கனரக வாகனங்களில் யாழ்ப்பாணத்துக்குக் கொண்டு வரப்படுகின்றன. (வ-20)

## கிணறு மாசடைவால் குடிதண்ணீர் இல்லை

பளை, மே 21

குடிதண்ணீர் எடுக்கப் பயன்படுத்தப்பட்டு வந்த இயக்கச்சியிலுள்ள கிணறு திடீரென மாசடைந்துள்ளதால் கிளாலிப் பகுதியில் வசிக்கும் மக்களுக்கான குடிதண்ணீர் விநியோகம் கடந்த ஒருவார காலமாக இடை நிறுத்தப்பட்டுள்ளது. இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் குடிதண்ணீர் தேடி அலைய வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

கிளாலியில் மீள்குடியேறிய மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினைக்குத் தீர்வுகாண முன்வந்துள்ள பொது நிறுவனம் ஒன்று அந்தப் பகுதியில் பல வருடங்களால் பயன்படுத்தப்படாமல் பழுதடைந்துள்ள நிலையிலிருந்த 13 கிணறுகளை புனரமைத்துத் துப்புரவு செய்து வழங்கியதைத் தொடர்ந்து மக்கள் குறித்த கிணற்றைப் பயன்படுத்தி வந்தனர்.

கடந்த வருடம் போதியளவு பருவமழை பெய்யாததாலும்,

**நீர்மட்டம் நாளுக்கு நாள் குறைந்து சென்றதால் மக்களுக்கு மீண்டும் குடிதண்ணீர் பிரச்சினை ஏற்பட்டது.**

நாட்டில் ஏற்பட்ட கடும் வெப்பம் காரணமாகவும் அந்தப் பகுதியிலுள்ள கிணறுகளிலும் குளங்களிலும் நீர்மட்டம் நாளுக்கு நாள் குறைந்து சென்றதால் மக்களுக்கு மீண்டும் குடிதண்ணீர் பிரச்சினை ஏற்பட்டது.

இந்த நிலை குறித்து கிளாலி அபிவிருத்திச் சங்கம் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலருடன் தொடர்பு கொண்டதை அடுத்து அந்தப் பகுதியில் ஆறு தண்ணீர் தாங்கிகள் வைக்கப்பட்டு பிரதேச சபையால் குடிதண்ணீர் வழங்கப்பட்டு வந்தது. (வ-115)

## கற்பித்தல் நுட்பங்கள் கலந்துரையாடல் இன்று

தென்மராட்சி, மே 21

வடமாகாண கல்வி அமைச்சால் நடத்தப்பட்ட கல்வி ஆலோசனை மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்களை அனைத்துக் கல்வி வலயங்களிலும் செயற்படுத்த கல்வி அமைச்சால் முடிவு செய்யப்பட்டுள்ளது.

மாநாட்டில் நிறைவேற்றப் பட்ட மாணவர் கல்வி தொடர்பான 'எண்ணக் கருவாக்கலும் கற்பித்தல் நுட்பங்களும்' பற்றிய கலந்துரையாடல் அனைத்து கல்வி வலயங்களிலும் நடத்தப்படவுள்ளன. இதன் முதலாவது கலந்துரையாடல் இன்று புதன் கிழமை தென்மராட்சி கல்வி வலயத்தில் இடம்பெறவுள்ளது.

இன்று காலை 9மணிக்கு தென்மராட்சி வலயக் கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோருக்கான கலந்துரையாடலும்- பி.ப.2 மணிக்கு சாவகச்சேரி மகளிர் கல்லூரி மண்டபத்தில் ஜி.சீ.ஈ. சாதாரணதர வகுப்புகளில் தமிழ், கணிதம், வரலாறு, விஞ்ஞானம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடலும் இடம்பெறும்.

வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெறும் கலந்துரையாடல்களில் வடமாகாண கல்வி அமைச்சின் ஆலோசகர் கலாநிதி நா.எதிர்வீரசிங்கம் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார். (வ-9)

# உண்மை விதை வெங்காயம் பயிரிட்டால் உச்சப் பயன்கள்

## யாழ்.மாவட்ட விவசாயப் பணிப்பாளர் தெரிவிப்பு


யாழ்ப்பாணம், மே 21

உண்மை விதை மூலம் வெங்காயம் பயிரிடுவதால் அதன் உற்பத்தித்திறன் அதிகரிப்பதோடு நோயைத் தாக்குப் பிடிக்கும் வீரியமும் அதிகரிக்கும்.

எனவே வெங்காயச் செய்கையில் ஆர்வமுள்ள விவசாயிகள் உண்மை விதையில் இருந்து உற்பத்தியை மேற்கொள்ளுமாறு யாழ்.மாவட்ட விவசாயப் பணிப்பாளர் கி.சிறிபாலசுந்தரம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:-

ஒரு கிலோ வெங்காயத்துக்கான உற்பத்திச் செலவு சாதாரண முறையை விட 40-45 வீதம் குறைக்கப்படுகிறது. இதனால் அதிக இலாபம் கிடைக்கக் கூடியதாக இருக்கும். அரசு நாடு முழுவதும் வெங்காயச் செய்கையை ஊக்குவித்து வருகின்றது.



கோப்புப் படம்

எனவே போட்டிச் சந்தைக்கு முகம் கொடுக்கக்கூடியதாக புதிய தொழில்நுட்பங்களை உள்வாங்கி உற்பத்திச் செலவைக் குறைத்து உற்பத்தித் திறனை அதிகரிப்பதன் மூலம் யாழ்.மாவட்ட விவசாயிகள் போட்டிச் சந்தைக்கேற்ற விலையில் விற்பனை செய்யக் கூடியதான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும்.

கடந்த காலங்களில் வெங்காயச் செய்கைக்கு வெங்காய விதைக் குமிழ்கள் மட்டுமே பயன் படுத்தப்பட்டு வந்தன. எனினும் கடந்த 2013 முதல் 500க்கும் மேற்பட்டோர் உண்மை விதை மூலமே வெங்காயத்தை உற்பத்தி செய்து வருகின்றனர் - என்றார். (வ-7)

## துண்டுப் பிரசுரம் வெளியிட்ட இருவருக்கு விளக்கமறியல்

தென்மராட்சி, மே 21

குடும்பம் ஒன்றைப் பற்றி துண்டுப் பிரசுரம் வெளியிட்ட இருவரை விளக்கமறியலில் வைக்குமாறு சாவகச்சேரி நீதி மன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் குறித்து தெரிய வருவதாவது:

சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த ஒரு குடும்பத்தினரிடம் சீட்டுப் பணம் செலுத்திய பலருக்குச் சீட்டுப் பணம் கட்டி முடிந்துள்ள நிலையிலும் இது வரை அவர்களுக்கான பணம் வழங்கப்படவில்லை.

தமக்கான சீட்டுப் பணத்தைக் கேட்கச் செல்லும் ஆண்கள் தனது மனைவி, மகள்மார் ஆகியோரிடம் நாகரிகமற்ற விதத்தில் நடந்துகொள்வதாக சீட்டுக்குப் பொறுப்பானவர் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

அதனால் அவரிடம் தமக்குரிய சீட்டுப் பணத்தைக் கேட்டுப் பெற ஆண்கள் எவரும் செல்ல வேண்டாம், தங்கள் குடும்பத்தினரை அனுப்பி வைக்குமாறு பாதிக்கப்பட்டவர்கள் எனக் குறிப்பிட்டு துண்டுப் பிரசுரமொன்று கடந்த புதன்கிழமை சங்கத்தானை, சாவகச்சேரி ஆகிய இடங்களில் இரவோடிரவாக ஒட்டப்பட்டிருந்தது. சம்பந்தப்பட்டவர்களால் துண்டுப் பிரசுரங்கள் மறுநாள் காலையில் கிழித்தெறியப்பட்டன. துண்டுப் பிரசுரங்களை ஒட்டியவர்கள் யார் என்பது இனம் காணப்பட்டிருக்கவில்லை; இந்த நிலையில், இரவு துண்டுப் பிரசுரங்கள் ஒட்டிய இருவரின் படங்கள் டச்சு வீதியில் உள்ள கடை ஒன்றில் பொருத் தப்பட்டிருந்த இரகசியக் கண்காணிப்புக் கமராவில் பதிவாகியிருந்தன.

கடை உரிமையாளர் இது தொடர்பாக பொலிஸாருக்கு அறிவித்ததை அடுத்து குறிப்பிட்ட இருவரையும் பொலிஸார் கைது செய்து கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றில் முற்படுத்தினர்.

**துண்டுப் பிரசுரங்களை ஒட்டியவர்கள் யார் என்பது இனம் காணப்பட்டிருக்கவில்லை; இந்த நிலையில், இரவு துண்டுப் பிரசுரங்கள் ஒட்டிய இருவரின் படங்கள் டச்சு வீதியில் உள்ள கடை ஒன்றில் பொருத் தப்பட்டிருந்த இரகசியக் கண்காணிப்புக் கமராவில் பதிவாகியிருந்தன.**

வழக்கை விசாரித்த நீதிவான் இருவரையும் எதிர்வரும் 29 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (வ-9)

## வீதி விபத்துகளில் சிக்கிய மூவர் மருத்துவமனையில்

தென்மராட்சி, மே 21

வீதி விபத்துக்களில் சிக்கிய காயமடைந்த மூவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

மட்டுவில் கமலாசனி வித்தியாலயத்துக்கு முன்பாக சைக்கிளும் மோட்டார் சைக்கிளும் நேற்று விபத்துக்குள்ளானதில் சைக்கிளில் சென்ற சரசாலை தெற்கைச் சேர்ந்த கிருஷ்ணன் ஸ்ரீஸ்கந்தராசா (வயது-51) என்பவரும் மோட்டார் சைக்கிளில் பயணித்த மண்டுவில் சோலையம்மன் கோயிலடியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் உருத்திரபாலன் (வயது-35) ஆகியோரும் காயமடைந்த நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு இ.ஸ்ரீஸ்கந்தராசா என்பவர் யாழ்.போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை நேற்றுமுன்தினம் வரணி பகுதியில் இடம் பெற்ற வீதி விபத்தில் காயமடைந்த வரணி இடைகுறிச்சியைச் சேர்ந்த கந்தசாமி அருந்தவராசா (வயது-31) என்பவர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (வ-9)

## வாக்கு வாதத்தை தடுக்க முற்பட்டவர் தாக்கப்பட்டார்

தென்மராட்சி, மே 21

இரு பகுதியினருக்கு இடையே ஏற்பட்ட வாக்குவாதத்தை தடுக்கச் சென்ற நபர் மதுப் போத்தலால் தாக்கப்பட்டு தலையில் காயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று சாவகச்சேரி நகர்ப் பகுதியில் இடம் பெற்றது. சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த உதயகுமார் அகிலன் (வயது-29) என்பவர் தலையில் காயம் ஏற்பட்ட நிலையில் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (வ-9)

## சட்டவிரோத மின்சாரம் மூவர் கைது

தென்மராட்சி, மே 21

பொது மக்கள் கொடுத்த இரகசியத் தகவலையடுத்து சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற மூவரைச் சாவகச்சேரி பொலிஸார்கைதுசெய்துள்ளனர். தகவல்களின்பிரகாரம்கைதடி நாவற்குழி, கைதடி-நுணாவில்,கைதடிஆகிய இடங்களில் திடீர் பரிசோதனை நடத்தி சட்ட விரோதமாக மின்சாரம்பெற்ற மூவரைக்கைது செய்துள்ளனர். குறித்த மூவருக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் வழக் குத் தாக்கல் செய்யவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (வ-9)



மட்டக்களப்பு,ஏறாவூர், சவுக்கடிக் கடலிலிருந்து நேற்றுச் செவ்வாய்க்கிழமை காலை சுமார் 2,500 கிலோகிராம் நிறையுடைய இராட்சத சுறா மீனொன்று பிடிபட்டுள்ளது. (ச)

# கிழக்குப் பல்கலைக்கழகத்தின் விரிவுரைகள் இன்று ஆரம்பம்

## துணைவேந்தர் அறிவிப்பு



கிட்ணன் கோபிந்தராஜா

மட்டக்களப்பு,மே 21

கடந்த 2ஆம் திகதி இடைநிறுத்தப்பட்ட கிழக்குப் பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் இன்று புதன்கிழமை மீள ஆரம்பிக்கப்படும் என்று கிழக்குப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கிட்ணன் கோபிந்தராஜா தெரிவித்தார்.

கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார, வர்த்தக முகாமைத்துவ விஞ்ஞான மற்றும் விவசாய பீடங்களின் சகல மாணவர்களுக்குமான விரிவுரைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இதேவேளை இன்று புதன்கிழமை அனைத்து பீட மாணவர்களுக்குமான கூட்டமும் கிழக்கு பல்கலைக்கழக நல்லையா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அதில் அனைத்து மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு பல்கலைக்கழக பதிவாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அனைத்துப் பீட முதலாம் வருட மாணவர்களுக்கான கூட்டம் இன்று புதன்கிழமை முற்பகல் 10.30 மணிக்கும், அனைத்து பீட இரண்டாம் வருட மாணவர்களுக்கான கூட்டம் நண்பகல் 12 மணிக்கும், அனைத்து பீட மூன்றாம், நான்காம் வருட மாணவர்களுக்கான கூட்டம் பிற்பகல் 2.30 மணிக்கும் நடைபெறவுள்ளன. (ச)

# கிழக்கில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை

## வளங்களை முழுமையாகப் பயன்படுத்தத் திட்டம்

மட்டக்களப்பு,மே 21

தனியார் துறையினரின் உதவியைப் பெற்று கிழக்கு மாகாணத்தின் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் நசீர் அஹமட் தெரிவித்தார்.

> “இலங்கையின் மொத்த உள் நாட்டு உற்பத்திக்கு கிழக்கு மாகாணத்தின் சுற்றுலாத் துறையின் மூலம் கூடுதல் பங்களிப்பைச் செய்ய முடியும்.

கிழக்கு மாகாணத்தின் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வது தொடர்பாகச் சுற்றுலாத்துறையின் பங்குதாரர்களுடனான கலந்துரையாடல் நேற்றுமுன்தினம் கொழும்பு, சினமன் கிராண்ட் ஹோட்டலில் நடைபெற்றது

இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாணத்தின் சுற்றுலாத்துறையை உலகறியச் செய்வதற்கு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

மாகாண சபையின் வளங்கள் வரையறுக்கப்பட்டிருந்தாலும், தனியார் துறையினரின் உதவியுடன் இந்தத் துறையை அபிவிருத்தி செய்ய முடியும்.

இலங்கையின் மொத்த உள் நாட்டு உற்பத்திக்குக் கிழக்கு மாகாணத்தின் சுற்றுலாத் துறையின் மூலம் கூடுதல் பங்களிப்பைச் செய்ய முடியும்.

இந்தத் துறையை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை அரசின் ஒத்துழைப்புடன் முன்னெடுத்து வருகிறோம்.

மாகாண சபைக்கான நிதி ஒதுக்கீடுகள் மட்டுப்படுத்தப்பட்டவை என்பதால் தனியார் துறையினரின் உதவியுடன் இந்தத் துறை அபிவிருத்தி செய்யப்படும்.

கிழக்கு மாகாணத்தின் சுற்றுலாத்துறை தொடர்பாக உலகறியச் செய்வதற்கான பரப்புரைகள் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளது. அதற்குத் தனியார் துறையினரின் ஒத்துழைப்பு அவசியம்.

போரால் மோசமாகப் பாதிக்கப்பட்ட கிழக்கு மாகாணம் தற்பொழுது வழமைக்குத் திரும்பியிருப்பதுடன், அபிவிருத்தியை நோக்கி முன்னேறி வருகிறது.

கிழக்கு மாகாணத்தின் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்வதில் உறுதியாகவே இருக்கின்றோம்.

கிழக்கு மாகாணத்தில் பல்வேறு சுற்றுலா மையங்கள் இருக்கின்றன-என்றார். (ச)

# மரமுந்திரிகைச் செய்கை இம்முறை 500 ஏக்கரில்

## மட்டு. வீதியோரங்களில் விற்பனை அமோகம்



விற்பனையில் ஈடுபடும் மக்கள்

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்தமுறை 500 ஏக்கரில் மரமுந்திரிகைசெய்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்று இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தின் மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய முகாமையாளர் கே.சசிகரன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த வருடம் செய்கை பண்ணப்பட்ட மரமுந்திரிகைச் செய்கையின் அறுவடை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரையம்பதி, புதுக்குடியிருப்பு, கிராண்குளம், களுவாஞ்சிக்குடி, வாகரை, செங்கலடி உட்படப் பல பிரதேச செயலகப் பிரிவுகளில் மரமுந்திரிகைச் செய்கை பண்ணப்பட்டுள்ளது. அறுவடையாகும்மரமுந்திரிகைப் பழங்கள் மற்றும் விதைகள் மட்டக்களப்பு- கல்முனை பிரதான வீதிகளில் வைத்து விற்பனைசெய்யப்பட்டுவருகின்றன. மரமுந்திரிகைப் பழங்களை மக்கள் மிகவும் ஆர்வத்துடன கொள்வனவு செய்து வருகின்றனர். அதனால் மரமுந்திரிகைச் செய்கையாளர்கள் பெரிதும் நன்மையடைந்துள்ளனர்- என்றார்.

இலங்கையில் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே அதிக அளவில் மரமுந்திரிகைச் செய்கை பண்ணப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

அமரர் சுப்பிரமணியம் ஏரம்பமூர்த்தி (கண்ணன்)

(கலோஷா ஹாட்வெயர், உரிமையாளர்-சாவகச்சேரி)

மலர்வு 16.10.1968

உதிர்வு 21.04.2014

திதி : ஸப்தமி

இதயத்தின் தூறலில் உயிர் பிரிந்துபோனதுவே
நேற்றிருந்த உறவு ஒன்று இன்று முடிந்துபோனதுவே
காத்திருந்த உறவுகள் கண்விழித்துப் பார்த்திருக்க
பார்த்திருந்த மரணம் பரிதவிக்கச் செய்ததுவே!
பேச்சிழந்து புலம்புகின்றோம் கண்ணா - புலம்பியொரு
வார்த்தை உன்னிடத்தில் தேடுகின்றோம்
கண்ணிருக்க மணியில்லை - காற்றிருக்க உயிரில்லை.
உறவுகள் இங்கிருக்க எம் அருகில் நீ - இல்லை
என்றும் உன் நினைவோடு நாமும் வாழ்வோமே கண்ணா.

எமது குடும்பத்தலைவரின் மறைவுச்செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவிகள் ஒத்தாசைகள் புரிந்த, துயரத்தில் பங்குகொண்ட மற்றும் அஞ்சலிகள், ஆறுதல்கள் தெரிவித்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த, கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டு, மலர்வளையம் வைத்து, அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மற்றும் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம், இன்று (21.05.2014) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக எற்றுக்கொள்ளவும்

என்றும் நீங்கா நினைவுகளுடன்

மீசாலை மேற்கு, மீசாலை. குடும்பத்தினர்.

(C/7694) (7.6.3)



31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 28.01.1968

உதிர்வு 21.04.2014



திருமதி பானுகலா விஜயகுமார்

எமது குடும்பத்தலைவியின் மறைவுச் செய்தி அறிந்து ஓடோடி வந்து உதவி ஒத்தாசைகள் புரிந்து துயரத்தில் பங்குகொண்ட மற்றும் அஞ்சலிகள் ஆறுதல்கள் தெரிவித்த உற்றார்,உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த, கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்ட, மலர் வளையங்கள் சாத்தி அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மற்றும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

21.05.2014 புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு யாழ்.கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள ஆரோக்கிய மாதா ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும். இத் திருப்பலியில் பங்குகொண்டு இவருக்கான பிரார்த்தனையிலும் எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசன உபசாரத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

(48172)(5.6.3.)

சி.விஜயகுமாரி,
195B, கஸ்தூரியார் வீதி,யாழ்ப்பாணம்.

பிரிவாற்றாது துயருறும் குடும்பத்தினர்.

# சோபிததேரர் தலைமையில் பொது வேட்பாளர் தெரிவு

கொழும்பு,மே 21
ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகளின் சார்பில் போட்டியிடும் பொது வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்ய, கோட்டே நாக விகாரையின் மகாநாயக்கர் மாதுலுவாவே சோபித தேரர் தலைமையில் குழுவொன்று நியமிக்கப்பட உள்ளது.

இந்தக் குழுவை நியமிக்கும் பணிகளில் எதிர்க்கட்சிகளும் சிவில் அமைப்புக்களும் கூட்டாக இணைந்து ஈடுபட்டுள்ளன என்று சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

> “ ஜனாதிபதித் தேர்தலில் போட்டி யிடும் பொது வேட்பாளரை நியமிப்பது தொடர்பான கொள்கைகளை தயாரிப்பதே இந்தக் குழுவின் பிரதான பணியா கும்

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் பொது வேட்பாளரை நியமிப்பது தொடர்பான கொள்கைகளை தயாரிப்பதே இந்தக் குழுவின் பிரதான பணியாகும் என்று கூறப்படுகிறது.

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடக் கூடிய பொது வேட்பாளரைத் தெரிவு செய்வதற்கு இந்தக் குழுவின் நடவடிக்கைகள் உதவியாக அமையும் என்று கூறப்படுகிறது.

பொது வேட்பாளர் தெரிவு தொடர்பில் மாதுலுவே சோபித தேரருக்கும் பல அரசியல் கட்சிகளுக்கும் இடையில் ஏற்கனவே பேச்சுக்கள் நடத்தப்பட்டு வந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# ஆலோசனைக் குழு விரைவில் நியமனம்

கொழும்பு,மே 21
சட்டம், ஒழுங்கை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆலோசனைக்குழுவொன்று உருவாக்கப்படவுள்ளது.

சட்டம், ஒழுங்கு விவகாரங்கள் தொடர்பில் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கும் நோக்கில் இந்தக் குழு உருவாக்கப்படவுள்ளது.

சட்டம், ஒழுங்கு தொடர்பில் கொள்கை வகுப்பு மற்றும் திட்டங்களை முன்னெடுத்தல் தொடர்பில் இந்தக் குழு ஜனாதிபதிக்கு நிபுணத்துவ ஆலோசனைகளை வழங்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆலோசனைக்குழு சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் கீழ் இயங்கும் என்று தெரிவிக்கப்படுகிறது.

> இந்த ஆலோசனைக் குழு சட் டம் மற்றும் ஒழுங்கு அமைச்சின் கீழ் இயங்கும் என்றும், மத முரண்பாடுகள், சமூகப் பிரச்சினைகள், இனப் பிரச்சினைகள் தொடர்பில் ஆலோசனைகளை வழங்கும் என்றும் கூறப்படுகின்றது.

மத முரண்பாடுகள், சமூகப் பிரச்சினைகள், இனப் பிரச்சினைகள் தொடர்பில் இந்தக் குழு ஆலோசனைகளை வழங்கவுள்ளது.

இந்த ஆலோசனைக்குழு சட்டத் திருத்தங்களை மேற்கொள்ளாது. பிரச்சினைகளுக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பது குறித்து ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கும் என்று கூறப்படுகிறது. மத முரண்பாடுகளைத் தடுக்கும் நோக்கில் ஏற்கனவே விசேட பொலிஸ் பிரிவொன்று உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

# தங்கம் கடத்த முயன்ற மூவர் கைது

கொழும்பு ,மே 21
சுமார் 12 மில்லியன் ரூபா பெறுமதியான தங்கத்தைக் கடத்திச் செல்ல முயன்ற மூவர் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத் துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் மும்பை நோக்கிச் செல்லத் தயாராகவிருந்த நிலையில் அவர்கள் மூவரும் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர்களிடம் 24 தங்கக் கட்டிகள் கைப்பற்றப்பட்டன என்றும் விமான நிலைய சுங்க ஊடகப் பேச்சாளர் லெஸ்லி காமினி தெரிவித்தார். (ச)

# நம்பிக்கை ஏற்படும் வகையில் பொலிஸார் நடக்க வேண்டும்

## அஸாத் வேண்டுகோள்

கொழும்பு.மே 21
நாட்டின்சட்டம்மற்றும்ஒழுங்கை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் நம்பிக்கை ஏற்படும் வகையில் பொலிஸார் நடந்து கொள்ளவேண்டும் என்று தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அஸாத் சாலி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நியாயமான விலையில் தரமான பொருள்கள் கிடைக்குமாயின், நுகர்வோர் அந்த வர்த்தக நிலையங்களை நாடிச் செல்வதை எவராலும் தடுக்க முடியாது. வர்த்தகப் போட்டியை நியாயமான முறையில் எதிர்கொள்ள முடியாதவர்களே வன்முறையைத் தூண்டும் வகையில் செயற்படுகின்றனர் என்று அவர் கூறினார்.

அளுத்கமை மற்றும் மாவனல்லை ஆகிய பகுதிகளில் இந்தப் பாணியிலேயே கடை உடைப்பு மற்றும் கடைகள் எரியூட்டப்பட்ட சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று அவர் சுட்டிக்காட்டினார்.



அஸாத் சாலி

இவ்வாறான தாக்குதல்களின் பின்னணியில் செயற்படும் கும்பலை இதுவரை பொலிஸாரால் கண்டுபிடிக்க முடியாமைக்கான காரணம் தெரியவரவில்லை என்று அவர் கூறினார். (ச)

# தம்புள்ள பொலிஸார் உடனடி இடமாற்றம்

கொழும்பு.மே 21
தம்புள்ள பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த 13 பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு உடனடி இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

தம்புள்ள பிரதேசத்தில் நாளுக்கு நாள் வாகன விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றன என்று கூறப்படுகிறது.

தம்புள்ள பொலிஸ் நிலையத்தின் மோட்டார் போக்குவரத்துப் பிரிவைச் சேர்ந்த உத்தியோகத்தர்களே இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மோட்டார் போக்குவரத்து பிரிவின் பொறுப்பதிகாரி உட்பட 13 பேர் இவ்வாறு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

மாத்தளை பிராந்தியத்துக்குப் பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகரின் தீர்மானத்துக்கு அமைய அவர்களுக்கான இடமாற்ற உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை கடந்த ஆண்டில் தம்புள்ள பிரதேசத்தில் 24 வாகன விபத்துக்கள் இடம்பெற்றுள்ளன. இந்த ஆண்டில் மூன்று விபத்துக்களே இடம்பெற்றுள்ளன என்று தம்புள்ள பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

பொலிஸ் அத்தியட்சகரின் இந்த இடமாற்ற உத்தரவுக்கு தம்புள்ள, சிகிரிய பொலிஸ் நிலைய உத்தியோகத்தர்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர். (ச)

# மாற்றி ஏற்றப்பட்ட நோய்த் தடுப்பூசி

## தெஹிவளை மிருகக்காட்சிச் சாலையில் சம்பவம்

கொழும்பு,மே 21
தெஹிவளை மிருகக்காட்சிச் சாலையிலுள்ள சிங்கங்களில் ஒன்று நோய்வாய்ப்பட்டுள்ள நிலையில், அந்த சிங்கத்துக்கு ஏற்றப்பட வேண்டிய நோய்த் தடுப்பூசியை சுகதேகியாகவுள்ள சிங்கத்துக்கு மாற்றி ஏற்றிய சம்பவம் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

இந்த மிருகக்காட்சிச் சாலையில் உள்ள சிங்கங்களில் ஒன்று சுகவீனமுற்றுள்ளது. அந்தச் சிங்கத்துக்குத் தடுப்பூசி ஏற்றுவதற்காக சிங்கக் கூட்டுக்குள் சென்ற மிருக வைத்தியர், நோய்வாய்ப்பட்ட சிங்கத்துக்கு ஏற்ற வேண்டிய ஊசியை, மற்றைய சிங்கத்துக்கு ஏற்றியுள்ளார்.

அதனால், கோபமடைந்த மிருகக்காட்சிசாலை ஊழியர்கள், குறித்த வைத்தியருடன் வாக்குவாதப்பட்டுள்ளனர்.

இதனால், அப்பகுதியில் சற்று பதற்ற நிலை ஏற்பட்டது.

நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதையடுத்து, நோய்வாய்ப்பட்ட சிங்கத்துக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டது என்று மிருகக் காட்சி சாலை வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச)


# இலங்கையை ஒருபோதும் கைவிடாது பாகிஸ்தான்

## மஹிந்த ராஜபக்ஷவிடம் உறுதியளித்தார் அந்த நாட்டு ஜனாதிபதி

கொழும்பு. மே 21
நாமும் பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்டிருந்தோம். பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றோம். பாகிஸ்தான் எப்போதும் இலங்கைக்கு ஆதரவாக இருக்கும் - இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் உறுதியளித்துள்ளார் பாகிஸ்தான் ஜனாதிபதி மஹ்மூன் ஹுசைன்.

ஆசியாவின் தொடர்பாடல் மற்றும் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் நடவடிக்கை தொடர்பான நான்காவது உச்சி மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பாகிஸ்தான் ஜனாதிபதி மஹ்மூன் ஹுசைன் ஆகியோர் சீனா சென்றுள்ளனர்.

அங்கு இருநாட்டுத் தலைவர்களுக்கும் இடையே நடைபெற்ற கலந்துரையாடலிலேயே பாகிஸ்தான் ஜனாதிபதி [illegible]



இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது.

[illegible] பாகிஸ் [illegible]

ஆதரவாக இருக்கும். இலங்கைக்கு எதிராக சுமத்தப்பட்டிருக்கும் முறைப்பாடுகள் [illegible]

தொடர்பில் நாங்கள் விசேட கவனம் செலுத்துகின்றோம். இலங்கையுடனான உறவு [illegible]

தில் நாம் ஆர்வமாக இருக்கின்றோம். நாங்கள் ஒரு சுதந்திர வர்த்தக உடன்படிக்கையைச் செய்து கொண்ட முதலாவது நாடு இலங்கையாகும். முன்னாள் போராளிகளை சமூக மயப்படுத்திமை தொடர்பில் இலங்கை எடுத்துள்ள நடவடிக்கைகள் பாராட்டுக்குரியது"- என்று தெரிவித்துள்ளார்.

கலந்துரையாடலின்போது கருத்துத்தெரிவித்துள்ளஇலங்கை ஜனாதிபதி, சர்வதேச அரங்கில் இலங்கை அரசுக்கு பாகிஸ்தான் வழங்கி வரும் ஆதரவுக்கு நன்றியைத் தெரிவித்துள்ளார்.

"நாங்கள் 14 ஆயிரத்துக்கும் மேற்பட்ட முன்னாள் புலி உறுப்பினர்களை விடுவித்து அவர்களை சமூக மயப்படுத்தியுள்ளோம். அவர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கு சிறந்த இடம் சமூகமே என நான் உணர்கிறேன்.

595 சிறுவர்-போராளிகளை விடுவித்து போர் நிறைவு பெற்று ஒரு மாதகாலப்பகுதிக்குள் அவர்களது பெற்றோரிடம் கையளித்தோம். உண்மையில் இதுவொரு கடினமான பணி"- என்று தெரிவித்துள்ளார்.

இந்தச் சந்திப்பில், இருநாடுகளுக்கும் இடையிலான வர்த்தக உறவுகளை மேம்படுத்துவது குறித்தும் ஆராயப்பட்டது. வர்த்தக வாய்ப்புகளைக் கண்டறிவதற்கு தனியார் துறையினருக்கு வாய்ப்பளிப்பது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதுடன், இருநாடுகளுக்கும் இடையிலான கிரிக்கெட் ஆட்டங்களை மீண்டும் நடத்துவது தொடர்பிலும் ஆலோசிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (ந-10)

# இலங்கைத் தமிழர் விடிவு குறித்து கலந்துரையாட நேரம் ஒதுக்கித் தருக

## மோடிக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள்

யாழ்ப்பாணம், மே 21

இலங்கைத் தமிழர்களின் விடிவு தொடர்பில் கலந்துரையாடுவதற்காக, இந்தியாவின் புதிய பிரதமர் நரேந்திரமோடியிடம் நேரம் ஒதுக்கித் தருமாறு, மோடிக்கு நேரடியாக அனுப்பி வைத்துள்ள வாழ்த்துக் கடிதத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் அந்தக் கட்சியின் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரனால், இந்தியாவின் புதிய பிரதமராகத் தெரிவாகியுள்ள நரேந்திரமோடிக்கு நேற்று முன்தினம் கடிதமொன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த கடிதத்தில், பாரதீய ஜனதாக் கட்சி தனிப்பெரும்பான்மை ஆசனாங்களுடன் ஆட்சி அமைக்கும் விதத்தில் பெரு வெற்றியீட்டியுள்ளமை யையிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாங்கள் எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். தங் களது திறமையான தலைமையின் கீழ் வலுவான இந்தியா உருவாக வேண்டும் என்று விரும்புவதுடன் உருவாகும் என்றும் நம்புகின்றோம்.

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக இந்தியா மற்றும் இலங்கைத் தமிழர் களிடையில் மொழி, மதம் மற்றும் கலாசார உறவுகள்பின்னிப்பிணைந்துள்ளன. தங்களது சீரிய தலைமையின் கீழ் எமது சகோதரத்துவ உறவுகள் மேலும் வலுப்பெற வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம். தங்களது திறமைமிக்க தலைமைத்துவத்தின் கீழ் அமையவிருக்கும் புதிய அரசிடமிருந்து நீண்டகாலமாக இழுத்தடிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் எமது நாட்டின் இனப்பிரச்சினைக்கு நிலையான தீர்வை உத்தரவாதப் படுத்தக் கூடிய கொள்கைகளை நாம் ஆவலுடன் எதிர்பார்க்கின்றோம்.

போர் முடிவுற்றவுடன் இயல்பாகத் திரும்பியிருக்க வேண்டிய அமைதிக்குப் பதிலாக, இலங்கைத் தமிழர்களின் இருப்பே நாளுக்குநாள் அழிவுப்பாதையில் சென்று கொண்டிருக்கின்றது. அவர்களது வாழ்வு மிகவும் ஆபத்தானதாக மாறி வருகின்றது. இலங்கை அரசு தனது முழு அதிகாரத்தையும் ஆயுதப்படைகளையும் பயன்படுத்தி தமிழர்களின் நிலங்களை அபகரிப்பதுடன் அவர்களது வாழ்வாதாரத்தையும் பறித்தெடுக்கின்றது.

இலங்கை அரசு தமிழர்களுக்கு எதிராக நன்குதிட்டமிட்ட வகையில் மூர்க்கத்தனமான வன்முறைகளை அமுல்படுத்துகின்றது. அவர்களின் நாளாந்த வாழ்வும் பாதுகாப்பும் அனைத்து வகைகளிலும் அச்சத்திற்குள்ளாக்கப்பட்டுள்ளன. எமது மக்களின் விடியல் குறித்து முழுமையாகவும் அக்கறையுடனும் கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

ஆகவே மேற் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக விரிவான கலந்துரையாடலை மேற்கொள்வதற்கு வசதியாக கூடிய விரைவில் தங்களின் பொன்னான நேரத்தின் ஒருபகுதியை எமக்காகவும் ஒதுக்கி, வேண்டுகோள்களைச் செவிமடுக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம் - என்றுள்ளது.

இதேபோன்றதொரு கடிதம், தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. (வ-5)




ACKNOWLEDGEMENT

**Dr.Chelvadurai Indrarajah**

passed away peacefully on the 21st April 2014. We thank all our friends and relations who shared our grief, assisted us in numerous ways during his illness and thereafter. We regret our inability to thank everyone individually.

**Yeoman services at Jaffna Teaching Hospital**

We wish to express our most sincere gratitude and appreciation to Dr Peranandarajah, and the members of his team who cared for our father during his recent stay at the Jaffna Teaching Hospital.

Our father was a patient of Dr Peranandarajah for years and the last time for about 10 days before his demise on the 21st April 2014. He has always been a wonderful doctor–informative, patient, warm, and an endless source of optimism; and during the last month we realised just how extraordinary he is, and how far he goes to care for his patients. It was beautiful to watch how his team carried out instructions to everybody's utmost satisfaction.

We also thank Dr Parthiban, Dr Sayanthan and Dr Verni Shoban for their invaluable services rendered during our difficult times.

We take this opportunity to thank everyone for the great services rendered and wish them good health to continue with their noble journey.

'Chelvam' Urumpirai. (48264)(4.3.6)

**Mrs. Indrarajah, daughters, sons in law, and grand children**





**கரம்பொன், அன்னை வேளாங்கண்ணி மாதா யாஸ்திரை தல திருவிழா**

07.05.2014 அன்று மினி சூறாவளியினால் சேதமடைந்த கரம்பொன் அன்னை வேளாங்கண்ணி மாதா ஆலயம் முற்றாக புனர்நிர்மாணம் செய்யப்பட்டு

- 22.05.2014 வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு திருச்செபமாலையும் தொடர்ந்து அன்னையின் திருவுருவம் தாங்கிய கொடி ஏற்றப்பட்டு நவநாள் வழிபாடுகள் ஆரம்பமாகின்றன.
- 22ஆம் திகதியிலிருந்து தினமும் மாலை 5 மணிக்கு திருச்செபமாலையும் தொடர்ந்து திருப்பலியும் இடம்பெறும்.
- 30.05.2014 வெள்ளிக்கிழமை நற்கருணை விழாவும்.
- 31.05.2014 சனிக்கிழமை திருவிழா திருப்பலி காலை 6.30 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகி அன்னையின் திருச்சொரூப பவனியுடன் திருவிழா இனிதே நிறைவடையும்.

அன்னையின் ஆசிர்பெற அன்போடு அழைக்கின்றோம்.

பங்குத்தந்தையும், பங்குமக்களும்.

விளம்பர அனுசரணை: **A.C.D. JAFFNA.**



**இதோ! வெளிவந்துவிட்டது**

2013 ஆம் ஆண்டு Past Paper அடங்கிய G.C.E O/L Past Paper Book மேலும் எம்மிடம் Master Guide Publications வெளியீடான ஆங்கில, தமிழ், சிங்கள, ஆங்கில மொழிமூல நூல்கள். Loyal Publication, K.V.Printers, M.D.Gunasena வெளியீடான நூல்கள் மற்றும் பல **இந்திய இலங்கை** வெளியீடான நூல்களையும் விலைக்கழிவுடன் பெற்றுக் கொள்ளலாம்.

ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்,
212, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். (அ/14033) (3.6.4)



**வலி. கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி**

லொறி 42/3568 (அசோக் லேலன்ட்) உடற்கோப்பு மறுசீரமைப்பு

எமது சங்கத்தின் லொறி 42/3568 மறுசீரமைப்பதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மேலதிக விவரங்கள், விண்ணப்பப்படிவங்களை தலைமைக்கந்தோரில் பெற்றுக்கொள்ளவும். விண்ணப்ப முடிவுதிகதி 10.06.2014 ஆகும்.

பொது முகாமையாளர், வலி.கிழக்கு தெ.ப.ப.நோ.கூ.சங்கம், நீர்வேலி.



**TRADE FINANCE & INVESTMENTS PLC.**

(Registered with the Central Bank of Sri Lanka under the Finance Companies Act No.78 of 1988)
(Registration No. PB 445)
KARADIPOKKU JUNCTION, KILINOCHCHI.

**பதிவு செய்யப்பட்ட வாகனங்கள் விற்பனைக்கு**

| Model | Reg.No |
|---|---|
| HF-DELUXE | NP BAK-9673 |
| CB TWISTER | NPXU -9694 |
| YAMAHA SZ | NP XZ -5935 |
| HF DAWN | NP BAE-5491 |
| HF-DELUXE | NP BAH-3651 |
| SUPER SPLENDOR | NP BAD-8606 |
| MF 240 | 37-9401 |
| HARVESTER | DF-11070234.DF |
| HARVESTER | Z11B1523L |
| ISUZZU LORRY | 26-5162 |
| CD DELUX | NPXP-1942 |
| ROAD MATE | NPQY-3830 |
| PLEASURE | NP BAC-9365 |

பணம் செலுத்தியவுடன் அனைத்து ஆவணங்களினையும் பெற்றுக் கொள்ளலாம்.

(CR BOOK, DLETION LETTER AND YARD RELEASE LETTER )

* நியந்தனைக்குட்பட்டது.

மேலதிக விபரங்களுக்கு:
(சி/14030) (30.6.3) **021 228 0110, 021 228 0108**



**கடை வாடகைக்கு**

யாழ்ப்பாணம், கே.கே.எஸ் வீதியில் சத்திரச்சந்திக்கும் மிட்டாய் சந்திக்கும் இடையில் கடை வாடகைக்கு உள்ளது.

(48029) (2.6.4) தொடர்பு:077 723 8084

**விற்பனைக்கு**

40 நாள்கள் நிரம்பிய கறுப்பு/வெள்ளை பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0777 041 767 (48273)(5.6.3)

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், பிறவுண் வீதியில் (Brown Road) நல்ல அமைதியான சூழலில் காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
(48084) (12.3.6) **072 959 6597/075 071 6607**

**தேவை**

சகலவிதமான நெல் வகைகளும் கொள்முதல் செய்யப்படும். (48269) (7.6.3)
மாப்பிள்ளை மில் தொடர்பு : 077 772 2215

**மலிவு விற்பனை**
**TVகள், குளிர்சாதனப் பெட்டிகள்**

மிக மலிவு விலையில்Sony, பனசோனிக் TVகள் 21" - 14000/=, 29" - 15000/=, இரட்டைக்கதவு - குளிர்சாதனப் பெட்டிகள் - 25000/= முதல், DVD - 2950/=, அம்பிளிபயர், Box, ரேடியோ கசெற்

தொடர்பு: 021 568 9344/077 044 0570

சோனி ரேட்ற்சென்ரர் (கொமர்ஷல் வங்கி எதிரில்) 56, K.K.S வீதி, சுன்னாகம்.

**கடை வாடகைக்கு**

சுண்டுக்குளி பாடசாலைக்கு அருகில் சகல தளபாடங்களுடன் கடை வாடகைக்கு உண்டு. அத்துடன் அறைகளும் வாடகைக்கு உண்டு. (48275) (5.6.3)

தொடர்பு: 077 320 0727/021 222 6660

**Personal Class**

தரம் -3 முதல் A/L வரையான மாணவர்களுக்கு English Class உம் Spoken with Grammar கற்க விரும்புபவர்களுக்கும் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும். எமது நிறுவனத்தில் வந்து கற்கும் வாய்ப்பும் உண்டு. (மேலதிக விவரங்களுக்கு ஆசிரியரை உடன் தொடர்பு கொள்ளவும்) பிரபல ஆசிரியர் (48276) (5.6.3)

தொடர்பு: 076 654 9050



**இந்தியாவில் உயர்கல்வி**

**STUDY IN INDIA**

University Grant Commission, Sri Lanka (UGC) இனால் அங்கீகரிக்கப்பட்ட ANNA UNIVERSITY மற்றும் PERIYAR UNIVERSITY ஆகிய பல்கலைக்கழகங்களில் பட்டதாரியாக வாய்ப்பு.

A/L'S 3 சாதாரண சித்தி + A/L English போதுமானது

**SSM COLLEGE OF ENGINEERING - ANNA UNIVERSITY DEGREE**

- B.E. Computer Science & Engineering
- B.E. Electronics & Communication Engineering
- B.E. Electrical & Electronics Engineering
- B.E. Mechanical Engineering
- B.Tech. Information Technology
- B.Tech. Textile Technology
- B.Tech. Textile Chemistry

சேலம் தமிழ்நாடு

**SSM COLLEGE OF ARTS & SCIENCE - PERIYAR UNIVERSITY DEGREE**

- B.Sc. Computer Science
- B.Sc. Bio-Technology
- B.Sc. Textile & Fashion Designing
- B.Sc. Hotel Management & Catering Science
- B.Sc. Maths / B.C.A. / B.Com. / B.Com (CA), B.B.A. / B.A. English

- 100க்கு மேற்பட்ட இலங்கை மாணவர்கள் கல்விகற்ற நிறுவனம்.
- **International Hostel.**
- மேற்கூறிய Degree முடிப்பவர்களுக்கு எதிர்காலத்தில் Canada, Australia, New Zealand, European Union ஆகிய நாடுகளில் PR (Permanent Residency) பெறுவதற்கான வாய்ப்பு.

**Call : 0777 - 767 818 (தமிழில்)**

www.ssmce.ac.in

**SIC** No. 01, Veverset Place, Wellawatte, Colombo 06.

21 MAY 2014

# மண் அகழ்வால் மக்கள் பாதிப்பு

## பார்வையிட்டது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் குழு

மன்னார், மே 21

மன்னார், பேசாலைப் பகுதியில் சட்டவிரோதமான முறையில் தனிநபர் ஒருவர் மணல் மண் அகழ்வில் ஈடுபட்டு வருகிறார். அதனால் இயற்கை இடர்களால் பேசாலைக் கிராமம் பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று மக்கள் கவலை தெரிவித்தனர்.



மணல் அகழ்வை பார்வையிட்ட கூட்டமைப்பு உறுப்பினர்கள்

மன்னார், பேசாலை -தலைமன்னார் பிரதான வீதியில் தனி நபர் ஒருவர் தனக்குச் சொந்தமானதாக கூறப்படும் காணியில் உள்ள மணல் மண்ணை விற்பனை செய்து வருகின்றார்.

எனினும் குறித்த காணியின் பின்புறம் கடல் உள்ளதால் குறித்த காணியிலுள்ள மணல் மண்ணை அகழ்ந்து விற்பனை செய்வதால் கடல் நீர் கிராமத்துக்குள் உட்புகும் அபாயம் ஏற்பட்டுள்ளது என்று மக்கள் தெரிவித்தனர்.

மணல் மண் அகழ்வால் எதிர்காலத்தில் கடல் அரிப்பு மற்றும் வெள்ள அபாயங்கள் ஏற்படுகின்ற போது பேசாலை கிராமம் அதிக பாதிப்புக்களை எதிர்கொள்ள நேரிடும் என்று மக்கள் கூறினர்.

இந்தப் பிரச்சினையை ஆராய்வதற்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் விசேட குழு குறித்த கிராமத்துக்குச் சென்று மணல் மண் அகழ்வு இடம்பெறுவதைப் பார்வையிட்டுள்ளது.

இந்தக் குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், வடமாகாண கல்வி அமைச்சர் ரி.குருகுலராசா, வடமாகாண மீன்பிடி போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர் அயூப் அஸ்மின் மற்றும் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை இம்மானுவேல் செபமாலை, மன்னார் பிரதேச சபை உப தலைவர் 'அந்தோனி சகாயம் ஆகியோர் சென்றிருந்தனர்.

இந்தக் குழுவினர் மணல் அகழப்படும் குறித்த காணியை பார்வையிட்டதோடு குறித்த காணியின் உரிமையாளருடன் கலந்துரையாடினர்.

இதன் போது, குறித்த காணியில் உள்ள மணல் மண் உரிய திணைக்களங்களின் அனுமதியுடனே விற்பனை செய்யப்பட்டுவருவதாக காணி உரிமையாளர் அவர்களுக்குத் தெரிவித்தார்.

அதற்கான ஆவணங்களையும் அவர் கூட்டமைப்பு உறுப்பினர்களிடம் காண்பித்துள்ளார்.

எனினும் இந்தப் பகுதியில் அதிகளவில் மணல் அகழ்வு செய்யப்படுவதால் எதிர் காலத்தில் கிராமத்துக்கு இயற்கை இடர்களின் பாதிப்புக்கள் ஏற்படும் என்ற அச்சம் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது. அதனால் இந்தப் பிரச்சினை குறித்து மன்னார் பிரதேச சபை உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (ச-56)

# பாலங்குளத்தை புனரமையுங்கள்

## ஆரோக்கியபுரம் மக்கள் வேண்டுகோள்

துணுக்காய், மே 21

துணுக்காய், ஆரோக்கியபுரம் பாலங்குளத்தைச் சுற்றியுள்ள பகுதிகளிலுள்ள மிதிவெடிகளை அகற்றி அந்தக் குளத்தை மீளப் புனரமைப்புச் செய்ய வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

2001 ஆம் ஆண்டு நியாப் திட்டத்தின் கீழ் பாலங்குளம் உருவாக்கப்பட்டது. இந்தக் குளத்தின் மூலம் ஆரோக்கியபுரம் கிராமத்தில் வாழ்கின்ற குடும்பங்கள் 130 ஏக்கர்களில் கால போக நெற் செய்கை மேற்கொள்ள முடியும்.

எனினும் சிறுபோக நெற் செய்கை 15 ஏக்கர்களில் மட்டுமே மேற்கொள்ள முடிகிறது. இந்தக் குளத்தை புனரமைப்புச் செய்தால் கூடுதலான நிலப்பரப்பில் நெற் செய்கையை மேற்கொள்ள முடியும் என்று மக்கள் தெரிவித்துள்ளனர். (ச-18)



மரி அன்னையின் பரிசுத்த மாதத்தையொட்டி மன்னார் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மாலை மரி அன்னையின் பவனி நடைபெற்றபோது... (ச)

# மக்கள் குடியிருப்புக்குள் நுழையும் யானைகள்

## வீடு சேதம்; உடைமைகள் நாசம்



சேதத்துக்குள்ளான வீடு

வவுனியா, மே 21

தற்போது ஏற்பட்டுள்ள வறட்சியால் காட்டு யானைகள் மக்கள் குடியிருப்புக்குள் நுழைய ஆரம்பித்துள்ளன.

வவுனியா, கருவேலன் கண்டல், மானுருவி கிராமத்தில் உள்ள வீடு ஒன்றை காட்டு யானைகள் சேதப்படுத்தியுள்ளன.

இந்தப் பகுதியிலுள்ள வீட்டுத் தோட்டப் பயிர்கள், தென்னை மரங்கள், வாழைமரங்கள் என்பவற்றையும் காட்டு யானைகள் சேதப்படுத்தியுள்ளன. அதனால் பல்லாயிரக் கணக்கான சொத்துக்கள் நாசமாகியுள்ளன என்று மக்கள் தெரிவித்தனர்.

மானுருவி கிராமத்தில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளது. அதனால் மக்கள் அச்சத்துடன் வாழ்வைக் கழித்து வருகின்றனர்.

எனவே காட்டு யானைகளின் பாதிப்புகளில் இருந்து எம்மைக் காப்பாற்ற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

# இருளில் மூழ்கும் கிளிநொச்சி நகர்

## ஒளிராத மின் விளக்குகள்

*கிளிநொச்சி, மே 21*

*கிளிநொச்சி நகருக்கு மின்சாரம் வழங்கப்பட்டும் மின் விளக்குகள் ஒளிர்வதில்லை என்று மக்கள் கூறுகின்றனர்.*

*கிளிநொச்சி நகர் ஏ-9 வீதியில் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றப் பகுதியில் இருந்து கரடிப்போக்குச் சந்தி வரையான 2 கிலோமீற்றர் பகுதிக்கு வீதியின் நடுவே மின் விளக்குக் கம்பங்கள் நடப்பட்டு மின்விளக்குகள் ஒளிர விடப்பட்டன. ஆனால் கடந்த ஆறுமாதங்களாக வீதியிலுள்ள விளக்குகள் எதுவுமே ஒளிராது இரவாகியதும் அந்தப் பகுதி இருளடைந்து காணப்படுகின்றது.*

*கிளிநொச்சி நகர் பகுதியில் உள்ள வீதி விளக்குகளை ஒளிர வைப்பதற்கான நடவடிக்கைகளை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் எவரும் மேற்கொள்ளவில்லை என்று மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.*

*வீதி விளக்குகளுக்கான மின்சாரக் கட்டணம் மின்சார சபைக்குச் செலுத்தப்படாததால் மின்விளக்குகள் ஒளிர்வதில்லை என்று கூறப்படுகிறது.*

*எனினும் வீதி விளக்குகளுக்கான மின்சாரக் கட்டணம் குறித்து தம்முடன் எதுவும் பேசப்படவில்லை. வீதி விளக்குகளுக்கான மின்சாரக் கட்டணம் மிகவும் அதிகமாகவுள்ளது என்று கரைச்சிப் பிரதேச சபை தெரிவித்துள்ளது.*

*கிளிநொச்சி நகரிலுள்ள வீதி விளக்குகளுக்கான மின்சாரக் கட்டணத்தைச் செலுத்துவதற்கு பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.*

*(ச-426)*

## கசிப்பு விற்ற நபர் பொலிஸாரிடம் மாட்டினார்

மாந்தை, மே 21

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கில் பொலிஸார் நடத்திய சுற்றிவளைப்பில் கசிப்பு விற்பனை செய்து வந்த நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று மல்லாவி பொலிஸார் தெரிவித்தனர்.

பொதுமக்கள் வழங்கிய தகவலையடுத்து தாம் நடத்திய திடீர் தேடுதலின் போதே இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் கூறினர்.

இந்த நபரைக் கைது செய்த போது அவரிடம் இருந்து 5 லீற்றர் கசிப்பு கைப்பற்றப் பட்டது என்றும் பொலிஸார் கூறினர். (ச-18)

# வைத்தியர்கள் பற்றாக்குறை

வவுனியா, மே 21

வவுனியா பம்பைமடு ஆயுள்வேத வைத்தியசாலைக்கு போதிய வைத்தியர்கள் இல்லாததால் நோயாளிகள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

வவுனியா பம்பைமடு ஆயுள்வேத வைத்தியசாலைக்கு நாளாந்தம் நூற்றுக்கணக்கான நோயாளிகள் முல்லைத்தீவு, மல்லாவி, மாங்குளம், செட்டிகுளம், நெடுங்கேணி, வவுனியா உட்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்த பலர் வருகை தருகின்றனர். எனினும் குறிப்பிட்ட வைத்தியர்களின் வருகைக்காக முற்பகல் 10.30 மணிவரை காத்திருக்க வேண்டியுள்ளது.

இந்த வைத்தியசாலையில் இருந்து நோயாளர்கள் போதிய மருந்துகளைப் பெற முடியாதுள்ளது என்று கூறப்படுகிறது.

இந்த வைத்தியசாலைக்குப் போதிய வைத்தியர்கள் இல்லாததால் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளிகளைப் பார்வையிட்ட பின்னரே நாளாந்தம் நோயாளிகளை வைத்தியர்கள் பார்வையிடுகின்றனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

எனவே இந்த வைத்தியசாலைக்கு மேலதிக வைத்தியர்களை நியமித்துத் தருமாறு நோயாளிகள் தெரிவித்தனர். (ச-402)

# தமிழக அமைச்சரவையில் திடீர் அதிரடி மாற்றங்கள்

## ரமணா, தாமோதரன், பச்சைமால் நீக்கம்; பதிலாகப் புதிய அமைச்சர்கள் மூவர்





சென்னை,மே 21

தமிழக அமைச்சரவை நேற்று முன்தினம் திங்கட்கிழமை திடீரென மாற்றி அமைக்கப்பட்டது. பி.வி.ரமணா, கே.டி.பச்சைமால் மற்றும் எஸ்.தாமோதரன் ஆகியோர் அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்டனர். அவர்களுக்குப் பதிலாக அக்ரிகிருஷ்ணமூர்த்தி, கோகுல இந்திரா மற்றும் எஸ்.பி.வேலுமணி ஆகியோர் மீண்டும் அமைச்சரவையில் சேர்க்கப்பட்டுள்ளனர். மேலும் 3 அமைச்சர்களின் துறைகளும் மாற்றப்பட்டுள்ளன.

அமைச்சரவை மாற்றம் குறித்து ஆளுநர் மாளிகை வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:-

வருவாய்த்துறை அமைச்சர் பி.வி.ரமணா, தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கே.டி.பச்சைமால் மற்றும் வேளாண் துறை அமைச்சர் எஸ்.தாமோதரன் ஆகியோர் அமைச்சரவையில் இருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களுக்குப் பதிலாக அக்ரி எஸ்.எஸ்.கிருஷ்ணமூர்த்தி (கலசப்பாக்கம் தொகுதி), எஸ்.பி.வேலுமணி (தொண்டா முத்தூர் தொகுதி) மற்றும் எஸ்.கோகுல இந்திரா (அண்ணா நகர் தொகுதி) ஆகியோரை அமைச்சரவையில் சேர்க்கக் கோரும் பரிந்துரைகளுக்கு ஆளுநர் அனுமதி அளித்துள்ளார். முதல்வர் ஜெயலலிதாவின் பரிந்துரைப் படி புதிய அமைச்சர்களுக்கும், ஏற்கெனவே இருக்கும் அமைச்சர்களுக்கும் கீழ்க்கண்டவாறு துறைகள் ஒதுக்கப்படுகின்றன.

அக்ரிகிருஷ்ணமூர்த்தி வேளாண் துறை அமைச்சராக நியமிக்கப்படுகிறார். இவர் வேளாண் பொறியியல் தோட்டக்கலை, தரிசு நில மேம்பாடு, கரும்பு பரிமாற்றம் மற்றும் கரும்பு மேம்பாடு ஆகியவற்றின் பொறுப்புகளைக் கவனிப்பார்.

எஸ்.பி.வேலுமணி, நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சட்டத்துறை அமைச்சராக நியமிக்கப்படுகிறார். இவர் நகராட்சி நிர்வாகம், பஞ்சாயத்து மற்றும் பஞ்சாயத்து யூனியன், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், நகர் மற்றும் ஊரக குடிநீர் விநியோகம், சட்டம், நீதி மற்றும் சிறைத்துறை, பணியாளர் நலன் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தம் ஆகிய துறைகளை கவனித்துக் கொள்வார்.

கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சராக கோகுல இந்திரா நியமிக்கப் பட்டுள்ளார். புதிய அமைச்சர்கள் 3 பேரும் ஆளுநர் மாளிகையில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை 4.40 மணிக்கு பதவி யேற்றுக் கொண்டனர்.

நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சராக இருக்கும் கே.பி.முனுசாமி, இனி தொழிலாளர் நலத்துறை அமைச்சராக பதவி வகிப்பார். அவர், மக்கள் தொகை, வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி, செய்தித்தாள் கட்டுப்பாடு, கணக்கெடுப்பு, நகர்ப்புற மற்றும் ஊரக வேலை வாய்ப்பு ஆகியவற்றின் பொறுப்புக் களையும் கவனிப்பார்.

பி.வி.ரமணா வகித்து வந்த வருவாய்த் துறை, அமைச்சர் பதவி ஆர்.பி. உதயகுமாருக்கு ஒதுக்கப்படுகிறது. மாவட்ட வருவாய் நிர்வாகம், துணை ஆட்சியர்கள், எடை மற்றும் அளவைகள் ஆகியவற்றின் பொறுப்புக்களை உதயகுமார் வகிப்பார். இவர் வகித்து வந்த இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை, தற்போதைய கைத்தறித்துறை அமைச்சர் எஸ்.சுந்தர்ராஜுக்கு மாற்றப்பட்டுள்ளது-இவ்வாறு அந்த அறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)

# சோனியா, ராகுல் பதவி விலகலை ஏற்க மறுத்ததாம் காங்கிரஸ் கட்சி



சோனியாகாந்தியும், ராகுல்காந்தியும்

புதுடில்லி,மே 21

தேர்தல் தோல்விக்குப் பொறுப்பேற்று காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தியும், துணைத் தலைவர் ராகுல் காந்தியும் பதவி விலக முன்வந்ததாகவும், ஆனால் காங்கிரஸ் செயற்குழு அதை ஏற்றுகொள்ளவில்லை என்றும் கூட்டத்துக்குப் பின் செய்தியாளர்களைச் சந்தித்த காங்கிரஸ் கட்சித் தலைவர் ஆஸ்கர் பெர்னாண்டெஸ் தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் நாடளாவிய ரீதியில் வெறும் 44 தொகுதிகளை மட்டுமே கைப்பற்றிப் படுதோல்வியைத் தழுவிய காங்கிரஸ் கட்சியின் செயற்குழுக் கூட்டம் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மாலை புது டில்லியில் உள்ள காங்கிரஸ் கட்சித் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. இதன்போதே இவர்கள் இருவரும் பதவி விலக முன்வந்தார்கள் என அவர் மேலும் கூறினார்.

அத்துடன் காங்கிரஸ் கட்சி தொடர்ந்தும் சோனியா காந்தி மற்றும் ராகுல் காந்தி ஆகியோரின் தலைமையில் செயல்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் காங்கிரஸ் கட்சி தனது தோல்வியைப் பணிவுடன் ஏற்றுக் கொள்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் ஏற்பட்டுவரும் ஆழமான மாற்றங்களைக் கவனிக்கக் காங்கிரஸ் கட்சி தவறிவிட்டதாகவும், வாக்காளர்களின் ஆதரவைப் பெற ஏன் காங்கிரஸ் கட்சி தவறிவிட்டது என்பதை உள்ளாய்வு செய்ய வேண்டும் என்றும் அந்தத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸ் கட்சித் தலைவர் சோனியா காந்தி தலைமையில் இது தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காங்கிரஸ் கட்சித் தொண்டர்களின் அயராத தன்னலமற்ற கடும் உழைப்பை மீறியும் இந்தத் தேர்தலின் முடிவுகள் அமைந்தமை வருத்தத்தைத் தருகிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டத்துக்குப் பிறகு செய்தியாளர்களிடம் இந்தத் தீர்மானம் குறித்து பேசிய காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜனார்தன் நிவேதி, கட்சியின் சகல மட்டத்திலும் கூட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார். கண்ணியம் மிக்க வகையிலும் நிதானத்துடனும் அரசை நடத்தி வந்தமைக்காக பிரதமர் மன்மோகன் சிங்குக்கு காங்கிரஸ் செயற்குழுக் கூட்டம் நன்றி தெரிவிப்பதாகவும் அந்தத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

# நாடாளுமன்றத்தின் படியில் விழுந்து வணங்கிய மோடி



நரேந்திரமோடி

புதுடில்லி,மே 21

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற பா.ஜ.க. நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் பங்கேற்கச் சென்ற நரேந்திர மோடி, நாடாளுமன்ற வாயிற் படியில் விழுந்து வணங்கினார்.

நாடாளுமன்றத்துக்கு பா.ஜ.க. தலைவர்கள் புடை சூழச் சென்ற மோடி, வாயிலை அடைந்ததும், தனது தலை படியில் படுமாறு விழுந்து வணங்கிய பின்னர் வளாகத்துக்குள் சென்றார்.

அப்போது, அவரை வரவேற்க வந்த அத்வானியின் காலிலும் விழுந்து ஆசி பெற்றுக் கொண்டார். (த)

# ஒபாமாவை தவிர்த்த மோடி




மோடி ஒபாமா

*புதுடில்லி,மே 21*

*மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க .வெற்றி பெற்றதற்கு வாழ்த்து தெரிவித்த உலக நாடுகளின் தலைவர்களுக்கு நரேந்திர மோடி நன்றி தெரிவித்துள்ளார்.*

*இது தொடர்பாக டுவிட்டரில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், ஜப்பான், ரஷ்யா, ஸ்பெயின், நேபாளம், கனடா, ஜேர்மனி மற்றும் தென்னாபிரிக்கா ஆகிய நாடுகளின் தலைவர்களுக்கும், ஐ.நா. சபை பொதுச் செயலர் பான் கீ முன் மற்றும் திபெத்திய மதத் தலைவர் தலாய்லாமாவுக்கும் நன்றி தெரிவித்துள்ளார். ஆனால் தன்னைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாழ்த்து தெரிவித்த அமெரிக்க அதிபர் ஒபாமாவுக்கு மோடி நன்றி தெரிவிக்கவில்லை.*

*குஜராத் கலவரத்தைத் தொடர்ந்து, மோடிக்கு விஸா வழங்க அமெரிக்க அரசு மறுத்து வந்தது.*

*இந்நிலையில், மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க. வெற்றி பெற்றதைத் தொடர்ந்து பிரதமராகப் பதவியேற்கவுள்ள நரேந்திர மோடியை தொடர்பு கொண்டு ஒபாமா வாழ்த்துத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (த)*

## நான் தோற்றது ஏன்? சிரஞ்சீவி விளக்கம்

நாடு முழுவதும் காங்கிரஸுக்கு எதிரான அலை வீசியதே தமது தோல்விக்குக் காரணம் என முன்னாள் மத்திய அமைச்சரும் நடிகருமான சிரஞ்சீவி தெரிவித்துள்ளார். ஹைதராபாத்தில் அவர் நிருபர்களுக் குப் பேட்டியளித்துள்ளார்.

அப்போது பேசிய அவர், மக்களவைத் தேர்தலில் நாடு முழுவதும் காங்கிரஸ் கட்சிக்கு எதிரான அலை வீசியது. இதன் காரணமாகவே ஆந்திராவிலும் காங்கிரஸ் படுதோல்வி அடைந்தது.

மேலும், நடிகர் பவன் கல்யாண் பா.ஜ.க-தெலுங்கு தேசம் கூட்டணிக்கு ஆதரவாகவும் காங்கிரஸுக்கு எதிராகவும் பரப்புரை செய்ததால் காங்கிரஸ் தோல்வியைச் சந்திக்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார். (த)

# ஜல்லிக்கட்டு தடையை நீக்க தமிழக அரசு சீராய்வு மனு

சென்னை,மே 21

ஜல்லிக்கட்டுக்கு விதிக்கப்பட்ட தடையை நீக்கக் கோரி, உயர் நீதிமன்றத்தில் தமிழக அரசு சீராய்வு மனு தாக்கல் செய்துள்ளது.

தமிழகத்தில் ஜல்லிக்கட்டு, மகாராஷ்டிர மாநிலத்தில் ரேக்ளா போட்டி உட்பட காளைகளை வைத்து நாடு முழுவதும் நடத்தப்படும் பொழுது போக்கு நிகழ்ச்சிகளுக்கு முழுமையாகத் தடை விதித்து உச்ச நீதிமன்றம் கடந்த 7ஆம் திகதி உத்தரவு பிறப்பித்தது.

இந்தத் தீர்ப்பை எதிர்த்து தமிழக அரசு சார்பில் உயர்நீதி மன்றத்தில் நேற்று முன் தினம் திங்கட்கிழமை சீராய்வு மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

> ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி தமிழகத்தின் பண்பாடு, பாரம் பரியம், கலாசாரத்துடன் தொடர்புடையது.

அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

ஜல்லிக்கட்டு நிகழ்ச்சி தமிழகத்தின் பண்பாடு, பாரம் பரியம், கலாசாரத்துடன் தொடர்புடையது. அதை விளையாட்டு நிகழ்ச்சியாகவோ, பொழுது போக்கு நிகழ்ச்சியாகவோ கருத முடியாது. இந்த நிகழ்ச்சியில் காளைகள் கொடுமைப்படுத்தப்படுவது இல்லை.

மற்ற நாடுகளில் காளைகள் கொடுமைப்படுத்தப்படுகின்றன. அதுபோன்ற எதுவும் தமிழகத்தில் நடப்பதில்லை. ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியைக் கட்டுப்படுத்தலாம். முழுமையாகத் தடை விதிக்கக்கூடாது. எனவே, விதிக்கப்பட்ட தடையை நீக்க வேண்டும். இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

தமிழக அரசு சார்பில் வழக்கறிஞர் யோகேஷ் கன்னா இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். இம்மனு விரைவில் விசாரணைக்கு வரவுள்ளது. (த)

## கடற் பாதுகாப்புப் பிரிவை கலைக்கிறது தென்கொரியா

சியோல்.மே 21
தமது கடற்பாதுகாப்புப் பிரிவைக் கலைப்பதற்குத் தென்கொரியா திட்டமிட்டுள்ளது.
அண்மையில் பயணிகள் கப்பல் கவிழ்ந்ததில் 300 க்கும் அதிகமானவர்கள் உயிரிழந்த நிலையில் அந்த நாட்டு ஜனாதிபதி பார்க் ஹியூன் ஹைய் இதனைத் தெரிவித்துள்ளார்.
இந்தக் கப்பல் விபத்துக்கு உத்தியோகபூர்வமாகத் தென்கொரிய ஜனாதிபதி மன்னிப்புக் கோரியுள்ளார்.
மீட்புப் பணிகளைப் புதிய பாதுகாப்பு நிலையம் மேற்கொள்ளும் என தென்கொரிய ஜனாதிபதி பார்க் ஹியூன் ஹைய் சுட்டிக்காட்டியுள்ளார்.
தமது நடவடிக்கைகளை உரிய முறையில் நிறைவேற்றுவதற்குக் கடற்பாதுகாப்புப் பிரிவு தவறி யுள்ளதாக அவர் கூறியுள் ளார். (த)



வடக்கு கொலம்பியாவில் பஸ் ஒன்றில் தீப்பிடித்ததில் 32 குழந்தைகள் உடல் கருகிப் பரிதாபமாக உயிரிழந்தனர். பஸ்ஸில் இருந்த 25 க்கும் மேற்பட்டோர் படுகாயங்களுடன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். வடக்கு கொலம்பியாவின் தலைநகர் பொகோடோவில் இருந்து 850 கிலோமீற்றர் தொலைவில் மத விழா ஒன்றில் கலந்து கொண்டுவிட்டு 32 குழந்தைகள் உட்பட 50 க்கும் மேற்பட்டோர் ஒரு பஸ்ஸில் திரும்பிக் கொண்டிருந்தனர். உயிரிழந்த குழந்தைகள் அனைவரும் ஒன்றில் இருந்து 8 வயது உடையவர்கள் என



கமராவில் பதிவான காட்சிகள்

## 2 வயது மகளை நீச்சல் தடாகத்தில் வீசிய தந்தை

வொஷிங்ரன்.மே 21
தமது இரண்டு வயது மகளை நீச்சல் தடாகத்தில் தள்ளிவிட்ட தந்தை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
அமெரிக்கா அரிசோனா மாகாணத்தைச் சேர்ந்தவர் கோரி மெக்கர்த்தி. இவரது 2 வயது மகள் நீச்சல் தடாகம் அருகே விளையாடிக்கொண்டு இருந்தார். அவருடன் ஒரு நாய்க்குட்டியும் விளையாடிக் கொண்டு இருந்தது. இந்நிலையில் சிறுமி நாய்க்குட்டியை தூக்கினார். நாய்க்குட்டி தவறி நீச்சல் தடாகத்தில் விழுந்து இறந்துவிட்டது.
இந்தச் சம்வத்தால் கோபமடைந்த மெக்கர்த்தி தனது மகளைத் தடாகத்தில் தூக்கி வீசினார். இது தொடர்பான காணொலி இணையத் தளங்களில் வெளியாகியுள்ளது.
குழந்தையைப் பெண்ணொருவர் காப்பாற்றியுள்ளார். தமது தமது மகளை நீச்சல் தடாகத்தில் வீசிய குற்றத்துக்காக மெக்கர்த்தி கைது செய்யப்பட்டுள்ளார்.
இது குறித்து மெக்கர்த்தி கூறுகையில், அவள் 5 வாரமேயான நாய்க்குட்டியை நீச்சல் தடாகத்தில் எறிந்து விட்டாள். அது இறந்து விட்டது. அவளுக்குப் பாடம் புகட்டவே அவளை நீச்சல் தடாகத்தில் வீசினேன் எனக் குறிப்பிட்டுள்ளார். (த)

# உக்ரைன் எல்லையை விட்டு விலகுகிறது ரஷ்யா

## தனது முடிவில் இருந்து பின்வாங்கினார் புடின்

மொஸ்கோ.மே 21
பல மாதங்களாக நீடித்து வரும் உக்ரைன் பிரச்சினையில் முக்கிய திருப்பமாக, அந்நாட்டின் எல்லையில் ரஷ்யா நிறுத்தி வைத்திருந்த துருப்புக்களைப் பழைய நிலைகளுக்குத் திரும்புமாறு அதிபர் விளாடிமிர் புடின் திங்கட்கிழமை உத்தரவிட்டுள்ளார்.
உக்ரைனின் எல்லையை ஒட்டிய ராஸ்டோவ், பெல்கிரேட், பிரியான்ஸ்க் ஆகிய பகுதிகளில் பருவ காலப் பயிற்சி' என்ற பெயரில் ரஷ்யா தனது படைகளைக் குவித்திருந்தது.
உக்ரைன் விவகாரத்தில் ரஷ்யாவின் நடவடிக்கை களுக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்துவரும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள், ரஷ்யாவின் பல்வேறு அதிகாரிகள் மற்றும் வர்த்தகர்கள் மீது விஸா மறுப்பு, சொத்துக்கள் முடக்கம் ஆகிய தடைகளை விதித்தன.
மேலும், எல்லையில் ரஷ்யா நிறுத்தி வைத்துள்ள படைகளை விலக்கிக் கொள்ளவேண்டும் எனவும் வலியுறுத்தி வந்தன.
பனிப்போருக்குப் பிறகு, ரஷ்யா மற்றும் மேற்கத்தேய நாடுகளுக்கிடையே உக்ரைன் பிரச்சினையால் ஏற்பட்டுள்ள இந்தப் பதற்றத்தைத் தணிக்கும் முயற்சியாக, உக்ரைன் எல்லையிலிருந்து படைகள் திரும்பப் பெறப்படும் என இரு வாரங்களுக்கு முன்பு ரஷ்ய அறிவித்திருந்தது.
இந்நிலையில், ராஸ்டோவ், பெல்கிரேட், பிரையான்ஸ்க் ஆகிய பகுதிகளில் பயிற்சி மேற்கொண்டுள்ள படைகளைப் பழைய நிலைகளுக்குத் திரும்ப அழைக்குமாறு பாது காப்புத்துறை அமைச்சர் செர்ஜி ஷோய்குவிடம் அதிபர் புடின் கடந்த திங்கட்கிழமை உத்தர விட்டுள்ளார். (த)



எல்லையில் இருந்து விலகும் ரஷ்யப் படையினர்

# லிபிய நாடாளுமன்றம் மீது கிளர்ச்சியாளர்கள் தாக்குதல்

## இரண்டு பேர் சாவு

திரிபோலி.மே 21
லிபியாவின் நாடாளுமன்றக் கட்டடத்தின் மீது நிகழ்த்தப்பட்ட தாக்குதலில் இருவர் உயிரிழந்தனர். இதைத் தொடர்ந்து தலைநகர். திரிபோலியில் பதற்றம் நீடித்து வருகிறது.
தலைநகர் திரிபோலியின் மத்தியில் உள்ள நாடாளுமன்றக் கட்டடத்தின் மீது கடந்த ஞாயிற்றுக்கிழமை ரொக்கெட் குண்டுகளை வீசியும், விமானங்களில் இருந்தும் ஆயுதக் கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நிகழ்த்தினர். இந்தத் தாக்குதலில் 2 பேர் உயிரிழந்தனர். 50க்கும்மேற்பட்டோர்காயமடைந்தனர். கிளர்ச்சியாளர்கள் தாக்குதல் நிகழ்த்தியபோது, நாடாளுமன்றக்கட்டடத்துக்குள்இருந்த உறுப்பினர்கள் நாலா பக்கமும் ஓடிச் சென்று தப்பினர்.
இந்தத் தாக்குதல் நிகழ்த்தப்பட்ட ஒரு மணி நேரம் கழித்து, இராணுவப் பொலிஸ் தளபதி மொக்தர் பர்னானா தொலைக்காட்சி ஒன்றில் பேசியபோது, முன்னாள் இராணுவத் தளபதி கலீபா ஹிப்டர் சார்பில், நாடாளுமன்றத்தை முடக்க இந்தத் தாக்குதல் நிகழ்த்தப்பட் டுள்ளது. ஹிப்டரால் 60 பேர் இதற்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். அவர்கள்தான் லிபிய நாடாளுமன்றத்தை வழி நடத்திச் செல்வார்கள் என்றும் தெரிவித்தார். (த)

## மோடியை அழைக்கிறார் பங்களாதேஷ் பிரதமர்



பங்களாதேஷ் பிரதமா ஷேக ஹசினா

டாக்கா.மே 21
தமது நாட்டுக்குப் பயணம் செய்யுமாறு இந்தியாவின் புதிய பிரதமராக பதவியேற்கவுள்ள நரேந்திர மோடிக்குப் பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா அழைப்பு விடுத்துள்ளார்.
மக்களவைத் தேர்தலில் வெற்றி பெற்றநரேந்திர மோடிக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ள ஷேக் ஹசீனா அவரது தலைமைத்துவத்தின் கீழ் இரு தரப்பு உறவுகள் மேம்படும் எனவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (த)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழர்களின் படுகொலை மாதமாக 'மே' மாதத்தை உடன் பிரகடனப்படுத்துங்கள்

தமிழ் மக்கள் வகைதொகையின்றிக் கொல்லப்பட்ட போரை நினைவுகூர்ந்து, உயிரிழந்த மக்களுக்கு அஞ்சலி செலுத்துவதைக்கூட மே -18ஆம் நாளில் தடுத்திருந்தனர். விடுதலைப் புலிகளின் தலைமை அழிக்கப்பட்ட நாள் அது. எனவே அந்த நாளில் அஞ்சலி எதனையும் செலுத்தக்கூடாது என்றனர். சரி! அந்த நாளுடன் இந்தப் பிரச்சினைகள் முற்றுப் பெற்றுவிடும் என்று எண்ணினால், அதுதான் இல்லை, பிரச்சினை மே -18ஆம் நாள் மட்டுமே இல்லை என்பதை இப்போது இராணுவத்தினர் வெளிப்படுத்தி விட்டார்கள்.

ஒரு வார காலமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மூடப்பட்டுக் கிடந்ததால் அது மீள ஆரம்பமாகிய பின்னர் உயிரிழந்த தமிழ் மக்களுக்கான நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அது ஒரு நல்ல முயற்சி.

தடுக்கப்பட்ட ஒரு நிகழ்வை நடத்துவோம் என்று பலவந்தமாக பல்கலைக்கழகத்திற்குள் புகுந்து வன்முறை எதிலும் ஈடுபடாமல், சட்டமும் ஒழுங்கும் சொன்னதன்படி கேட்டு நடந்த பின்னர், தங்கள் உணர்வுகளையும் வெளிப்படுத்துவதற்குப் பல்கலைக் கழகச் சமூகம் தீர்மானித்தது. ஒரு நாட்டின் குடிமக்களாக இதைவிடச் சிறப்பாக எவராலும் நிர்வாகத்துக்கு ஒத்துழைக்க முடியாது.

அப்படி இருந்தபோதும் இந்த விடயத்தில் மீண்டும் தலையிட்டுள்ள இராணுவம், பல்கலைக்கழகத்தில் நினைவேந்தல் நிகழ்வுகளை நடத்த வேண்டாம் என்று பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்திற்கு அறிவுறுத்தியுள்ளது. ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளை அழைத்த, இராணுவத்தின் பிரதிநிதி, நயமான மிரட்டலாக இதனைக் கூறியுள்ளார்.

போரில் உயிரிழந்தவர்களை நினைவுகூர்வதற்குத் தமிழர்களுக்கு உரிமை உள்ளது என்பதை ஏற்றுக் கொண்டுள்ளபோதும் அதனை நடைமுறைப்படுத்த அனுமதிக்க முடியாது என்றிருக்கின்றார் அந்தப் பிரதிநிதி. அப்படி ஒரு நிகழ்வு நடைபெற்றால் இராணுவம் தலையிட வேண்டியிருக்கும் என்றும் கூறியிருக்கிறார் அவர். அதனைப் பல்கலைக்கழகப் பிரதிநிதிகள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது ஒருபுறம் இருந்தாலும் இது என்ன கொடுமை என்று புரியவில்லை. கொடுங்கோல் சர்வாதிகார ஆட்சிகளில் மட்டுமே இப்படி நடக்க முடியும். நாகரிகமுள்ள ஜனநாயகப் பாரம்பரியம் உள்ள எந்தவொரு நாட்டிலும் இத்தகைய அடாவடி அணுகு முறை ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. இராணுவ ஆட்சியிலுள்ள நாடுகளில் மட்டுமே இப்படி நிகழக்கூடும்.

இலங்கையில் ஜனநாயக ஆட்சியே நீடிக்கிறது என்று கூறிக் கொண்டாலும், வடக்கில் மட்டும் இராணுவத்தின் ஆட்சியே நீடிக்கின்றது என்பதற்கான மற்றுமொரு தெளிவான உதார ணமே இது. வடக்கின் சிவில் நிர்வாகத்தில் இராணுவத்தினர் தலையிடுவதில்லை என்று இனி ஒருபோதும் கூறமுடியாது.

ஒரு புறத்தில் இராணுவத்தினர் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளை அழைத்து இப்படி நயமாகப் பேசிக்கொண்டிருக்க, மறுபுறத்தில் பேராசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் சில ஊடகவியலாளர்களுக்கும் கொலை மிரட்டல் விடுக்கும் சில துண்டுப் பிர சுரங்கள் பல்கலைக்கழக வளாகத்திலே நேற்றுக் காலையில் காணப்பட்டன என்றும் செய்திகள் வெளியாகியுள்ளன. யாழ்ப்பா ணத்தில் மீண்டும் நீதிக்குப் புறம்பான கொலைகள் தலைதூக்கி விடுமோ என்ற அச்சத்தை இது ஏற்படுத்தியிருக்கிறது.

1995 முதல் 1998 வரையிலும் 2006 முதல் 2009 வரையிலும் இத்தகைய நீதிக்குப் புறம்பான கொலைகளால் யாழ். குடாநாடு பீதியில் உறைந்து கிடந்ததை யாரும் இன்னும் மறந்து விடவில்லை. அத்தகைய நிலை மீண்டும் உருவாகிவிடக்கூடும் என்ற அச்சம் மக்களிடம் எழுவது சர்வதேச அரங்கில் இலங்கை அரசுக் கும் நல்லதல்ல.

இவை எல்லாவற்றுக்கும் இடையே கொழும்பு அரசு என்னும் கோலியாத்துடன் தாவீதுகள் போன்று தமிழ் மக்கள் முரண்பட்டு நிற்க, அவர்களுக்கான அரசாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண அரசு என்ன செய்கிறது என்பது தெரியவில்லை. இங்கே இப்படி மே 18ஆம் நாள் மட்டுமல்ல எந்த நாளுமே போரில் உயிரிழந்த பொதுமக்களுக்கு நினைவேந்தல் நடத்த அனுமதிக்க முடியாது என்று தடுக்கையில் தமிழ் மக்களுக்கானஅரசு அது குறித்து மௌனமாக இருக்க முடியாது.

எனவே, அடுத்து வரும் அமர்வில், மே மாதம் முழுவதையும் படுகொலை மாதமாகப் பிரகடனப்படுத்தி, போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அந்த மாதத்தின் அனைத்துத் தினங்களிலும் பொது மக்களும், பொது அமைப்புகளும் நினைவேந்தல் நிகழ்வுகளையும் அதனுடன் தொடர்புடைய ஆக்கபூர்வமான நிகழ்வுகளையும் நடத்தவேண்டும் என்று உடனடியாக ஓர் அவசரத் தீர்மானத்தை வடக்கு மாகாண சபை நிறைவேற்ற வேண்டும். அதனை முன்னின்று முன்னுதாரணமாகச் செயற்படுத்தவும் வேண்டும். தமிழர்கள் என்று கூறிக்கொண்டு வாக்குக் கேட்ட மாகாண சபை உறுப்பினர்கள் அதனை உடன் செய்வார்கள் என்று நம்புகின்றோம்.



# இலங்கையில் மாற்றம் ஒன்றை மோடியின் அரசு ஏற்படுத்தும்

மௌபிம, லங்காதீப பத்திரிகைகளிலிருந்து தொகுத்து வழங்குபவர்: சரா

இலங்கையின் இன்றைய ஆட்சித் தரப்புக்கு மோடி தலைமையிலான புதிய அரசும் ஒரு கேள்விக்குறியாகவே மாறியுள்ளது. குறிப்பாக இந்தியத் தமிழர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ள மோடி மற்றும் அவரது அரசின் இலங்கை தொடர்பான நிலைப்பாடு தீர்மானம் மிக்கதொரு மாற்றத்துக்கு உள்ளாகலாமென சர்வதேச அரசியல் ஆய்வாளர்கள் ஆரூடம் கூறியுள்ளனர்.

அதாவது இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்துதல், மாகாண சபைகளுக்கு உரிய அதிகாரங்கள் வழங்குதல் மற்றும் அரசமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை மீளாய்வு செய்வதன் அவசியம் தொடர்பான அணுகுமுறை உள்ளிட்ட சில விடயங்கள் ஊடாக இந்தியா ஏற்கெனவே இலங்கைஅரசுக்குத் தீர்மானம் மிக்க அழுத்தங்களைக் கொடுத்து வந்துள்ளது. இலங்கை அரசு மோடிக்கு வாழ்த்துக் கூறி, கைகுலுக்கிக் கொள்வதற்கு முன்கூட்டியே 'ஐஸ்' வைத்திருந்தாலும், இலங்கையின் அமைச்சரொருவர் இந்தியாவுக்கு ராஜபக்ஷ ஒருவர் கிடைத்திருப்பதாக நரேந்திர மோடியின் தலையில் வெண்ணெய் வைத்து அவரைக் கைக்குள் போட்டுக் கொள்ள மனப்பால் குடித்தாலும், எதிர்காலத்தில் நரேந்திரமோடியின் ஆட்சியில் மேற்கூறப்பட்டுள்ள - இலங்கை தமிழர் நலன்காக்கும் அந்த முக்கிய விடயங்கள் தொடர்பாக அழுத்தங்கள் மேலும் இறுக்கமடையக் கூடுமென - சில வேளை கிடுக்கிப்பிடி கூடப் போடப் படக் கூடுமென்பதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். தேர்தலுக்கு முன்னர் இலங்கை சம்பந்தமாக மோடி வெளிப்படுத்தியிருந்த கருத்து வெளிப்பாடுகளைச் சுட்டிக் காட்டியுள்ள அரசியல் விமர்சகர்கள், இலங்கைத் தமிழர்கள் போன்றே அவர்களது தொப்புள்கொடி உறவுகளான இந்தியத் தமிழர்கள் விடயத்திலும் பாரதீய ஜனதாக் கட்சியின் நிலைப்பாடு சாதகமானதாகவே இருக்கலாமென்ற கோணத்திலும் ஆராய்கின்றனர்.

இன்னுமொரு
முக்கியமான குறி
யையும் இங்கு
தெளிவுபடுத்துவது
பொருந்தும், அதா
வது மோடி தமது
தேர்தல் பரப்புரை
யின்போது, அயல்
நாடுகளுக்குத்
தேவையான வித
தில் செயற்படுவ
தற்கு இடமளிக்க
இந்தியா இனி
மேலும் தயா



ரில்லை என்றும், இலங்கையின் தேசியப் பிரச்சினை விடயத்தில் தீர்மானங்களை மேற்கொள்ளும்போது இனிமேல் தமிழ் நாட்டு அரசின் கருத்துக்களையும் செவிமடுத்தே பெறுவதற்கு பாரதீய ஜனதாக் கட்சி செயற்படுமெனவும் தெரிவித்திருந்தார்.

மறுபுறத்தில் தமிழ்நாட்டு முதலமைச்சரான செல்வி ஜெயலலிதாவின் அ.தி.மு.க. இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் 37 தொகுதிகளைக் கைப்பற்றிக் கொண்டிருப்பதும் மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்குப் போதுமானதொரு எண்ணிக்கையே என்பதும் கூட இங்கு கவனத்தில் கொள்ளக் கூடியதாகும். இது ஒரு புறமிருக்க சோனியா காந்தி தலைமையிலான காங்கிரஸ் கட்சியைப் போன்று அல்லது கடுமையான தீர்மானங்களை எடுத்துவரும் பாரதீய ஜனதாக் கட்சி, இந்தியாவில் புதிய அரசொன்றை அமைப்பதானது இலங்கைக்கு குறிப்பிடத்தக்க அளவுக்குச் சாதகமாக இருக்க மாட்டாது என்பது இந்த விடயங்களில் இருந்து உறுதிப்படுவதாக வும் அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின் றனர்.

வடக்கு மாகாண சபை விடயத்தில் இந்தியா சற்றுக் கவன மெடுக்கும் அறிகுறிகள் முன்னரே தென்பட் டிருந்ததையும் ஆராய்ந்து பார்க் கும்போது, முதல மைச்சரான க.வி.விக் னேஸ்வரன் மோடியைச் சந்திப் பதற்கு விருப்பம் தெரிவித்திருப்பதால் அதற்கு விரைவில் நல்லதொரு வாய்ப்பு அமையக் கூடுமென எதிர்பார்க்கப்படுவ தாகவும் அந்த அரசியல் ஆய் வாளர்கள் ஆரூடம் கூறுகின்றனர்.

இத்தகைய கருத்துக்களை தெரிவிக்கும் அரசியல் நோக்கர்கள், இன்னொரு முக்கியமான விடயத்தையும் சுட்டிக் காட்டுகின்றனர். அதாவது பாரதீய ஜனதாக் கட்சியின் அண்மைக்கால வரலாற்றை நோக்கும் போது அது அமெரிக்காவுடன் நெருக்கமாக உறவாடி வந்திருப்பது குறித்தும் அவ தானிக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது இவ்வாறிருக்க வடக்கு மாகாண சபை விடயத்தில் இந்தியா சற்றுக் கவனமெடுக்கும் அறிகுறிகள் முன்னரே தென்பட்டிருந்ததையும் கவனத்தில் எடுக்கும்போது, முதலமைச்சரான க.வி. விக்னேஸ்வரன் மோடியைச் சந்திப்பதற்கு விருப்பம் தெரிவித்திருப்பதால் அதற்கு விரைவில் நல்லதொரு வாய்ப்பு அமையக் கூடுமென எதிர்பார்க்கப்படுவதாகவும் அந்த அரசியல் ஆய்வாளர்கள் ஆரூடம் கூறுகின்றனர்.

அதேவேளை, இலங்கையின் தேசிய பிரச்சினை உள்ளிட்ட பிரச்சினைகள் சம்பந்தமாக முன்னாள் பிரதமரான மன்மோகன் சிங் ஏனோ தானோ என்ற போக்கைக் கையாண்டு வந்திருந்ததா கவே அவர் மீது தொடர்ச்சியான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வந்திருந்தன. குறிப்பாக தமிழ் நாட்டில் இருந்தே இந்தக் குற்றச்சாட்டு தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டு வந்திருந்தது. இந்தக் காரணத்தை முன்னிட்டும் நரேந்திர மோடி தனது ஆட்சியின்போது இலங்கை சம்பந்தமாக நேரடியான தீர்மானங்களை எடுக்கக் கூடுமென்பதாகவும் அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர். சரி எதற்கும் பொறுத்திருந்து தான் பார்ப்போமே!.

# "உரை சொல்ல வந்தால் ஊரே திரளும்"

■ கே.எஸ்.சிவஞானராஜா



இறைவனின் தூதுவர்களாக காலத்துக்குக் காலம் இவ்வுலகிற்கு அனுப்பப்பட்ட திருவருட் செல்வர்கள் பலர்.

அந்த வகையில் கொக்குவில் த.குமாரசாமிப் புலவர் நாவலருக்குப் பின்பு எமக்கு வாய்த்த காவலராவார். கந்தபுராண கலாசாரத்தை பங்கமேற்படாத வண்ணம், பாங்குறவும், புனிதமுறவும், பிரவாகிக்கச் செய்த கைங்கரியத்தைப் புலவரவர்கள் நிறைவேற்றியுள்ளார்கள்.

1895 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 17 ஆம் திகதி பிறந்த இவர், மரவு வழியாக, தந்தையாரிடமும், தமிழ்நாடு திருவாவடுதுறை ஆதீனத்தின் அனுசரணையுடனும் பல்வேறு துறைகளையும் கற்றுத் தேர்ந்தார். இவர் நாவலர் ஆர்வம் காட்டிய அத்தனை துறைகளிலும் சிறந்து விளங்கினார்.

தேவாரங்களைப் பண்ணோடு பாடுவதே பக்தியின் வரப்பிரசாதமாகக் கருதிய புலவர், புராண படனத்தையும் நாவலர் காட்டிய வரையறைக்குள் நின்று உயிர் கொடுத்தவரெனலாம்.

அழகான சரீரமும், ஆழ்ந்த பண்பட்ட சாரீரமும் உடைய புலவர், கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற் புராணம், திருவாதவூரடிகள் புராணம் யாவற்றையும் அக்குவேறு ஆணி வேறாகக் கற்றுத் தேர்ந்தார். பதவுரை, பொழிப்புரை, விசேட உரை என்னும் ஒழுங்கிலே நயம்பட இவர் பயன் சொல்லும்போது, தேவையான மேற்கோள்களையும் காட்டி, இலக்கணமாகவும், இணக்கமாகவும் எளிதுற எடுத்தியம்புகின்ற திறமையைக் கொண்டிருந்தார். இத்தகு சைவ சமய விழுமியங்களை லயித்துக் கேட்பதற்காகவே ஊரெல்லாம் திரண்டு வரும். பெரும் பாலானவர்கள் கேள்வி ஞானமுடையவர்களாகவும், இசை ஞானம் உடையவர்களாகவும் இருந்ததனால் அதற்கு ஏற்றவாறு புலவர் இராகங் களைச் சுவைபட இசை சொட்டச் சொட்டத் தேனாகவும், தேனாக்கியும் ஆற்றுவாராயினர். இதனால் இவர், புராண வித்தகர் என்று அழைக்கப்படலானார். ஈழ நாட்டிற்கே சிறப்பாக உரித்தான கந்தபுராண கலாசார மகிமைக்கு யாழ்ப்பாண மண் நாவலராலும், புலவராலும் வரம்பெற்ற தெனலாம். புலவர் இசையால் மெருகூட்டினார்.

பெண்கள் புராணம் படிக்கின்ற ஆலயங்களைப் பார்க்கும் போது நாவலரையும் புலவர் ஐயாவையும் கையெடுத்து ஒருமுறை என்ன, பலமுறை கும்பிடலாம். ஆகம விதிப்படியமைந்த ஆலயங்களில் இப்போதும் புராணம் கேட்டு அனுபவிக்கின்ற ஊர்களைப் பார்த்து நாமும் வணங்குகின்றோம்.

போட்டிகளோடு மட்டும் நின்றுவிடாது இளைய தலைமுறைகளை ஈடுபட வைக்கக்கூடிய வாழ்வாதாரமான பொருளாதார ஊக்குவிப்புக்களை ஆலய வளங்களூடாக வழங்கக்கூடிய திட்டமிடலை, ஒவ்வொரு ஆலயங்களும் பின்பற்றுவார்களாயின் புராண படனம், பண்ணிசை, கதாப் பிரசங்கம், எழுத்தறிவித்தல் போன்ற யாவும் மீளெழுச்சி பெற்று, மீண்டும் ஊரே திரளும் வகையில் நாமே வழி சமைக்கலாம். யாழ்ப்பாணம் முழுமையாக கட்டடங்களாவும் கோயில்களாகவுமே நிறைந்திருப்பது முன்னோர் சொன்னதும் செய்ததுமான புண்ணியங்களேயாகும்.

இளையோர்களும், பெண்களும் வாசித்து பதவுரை கடினமெனின் பொழிப்புரையையாவது பார்த்து சொல்லக் கூடியதாக, எல்லாவற்றிற்கும் பிழையையே கண்டுபிடித்துச் சொல்லும் சம்பிரதாயத்தை சற்று சமாதானப்படுத்தி அவர்களை வெல்லவைக்க முனைந்தாலொழிய அடுத்து வரும் சந்ததிக்கென்று நாம் எதைத்தான் விட்டு வைக்கப் போகின்றோம்? நேரத்துக்கு வேலை, சம்பளத்துக்குச் சமயம் என்ற யுகத்தினில் அகப்பட்டு விட்டோம். சமூகங்களுக்குள்ளே சென்று கதைக்கவோ, பிரார்த்திக்கவோ, வழிபடவோ, உரையாற்றவோ, வாழ்த்தவோ எமது மனமும் மதமும் இறங்குமாயின் எமது சமயம் நல்லதோர் தலைமைத்துவத்தைச் சிரம் தாழ்த்தி வணங்கும். மூலை முடுக்கெல்லாம் ஊரே வந்து திரளும்.

## பேசாலை யோசவாஸ் வீதியில் வடக்கின் வசந்தம் வீசுமா?

வாசகர் திருமுகம்

மன்னார் மாவட்டத்தில் பேசாலைக் கிராமத்தில் யோசவாஸ் வீதியில் வசிக்கும் மக்கள் மின்சாரம் இன்மையால் பற்பல இடையூறுகளை அனுபவிக்கின்றனர்.

இந்த வீதி ஒதுக்குப்புறமான இடத்தில் இருப்பதால் இருள் சூழ்ந்த இடத்தில் அமைந்து உள்ளது. அது மட்டுமன்றி அரவங்கள் மிகுந்த பகுதியாக இருப்பதால் இரவு வேளையில் அரவத்தின் தீண்டலினால் பாதிப்புக்களும் உள்ளன. அதுமட்டுமன்றி புலமைப் பரிசில், க.பொ.த. சாதாரண தர, உயர்தர மாணவர்கள் கூட வசதிகள் அற்ற நிலையில் அல்லற்படுகின்றனர். இந்த மக்களின் குறை தனைக் கேட்டறிந்த மன்னார் மாவட்ட அரச அதிபர் மிகவும் இரக்க சிந்தையுடன் கூடிய விரைவில் துரிதப்படுத்தி இந்த மக்களின் நிலையினைப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்குமாறு மின்சார சபை நிர்வாகத்திடம் கடிதம் மூலம் பல தடவை எடுத்துக் கூறியுள்ளார். இதற்கு இந்த மக்கள் நன்றி கூறுவதுடன், மேலும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தை அமுலாக்கும் மின்சார சபையினர் துரிதகதியில் இந்த மக்களின் குறையினை நீக்குமாறு கேட்டு நிற்கின்றனர்.

*தொ. கிறிஸ்ரியன்.*

# கல்விச் செல்வம்



எல்லாச் செல்வங்களிலும் சிறந்த செல்வம் கல்வியே! கல்வியைத் திருடர்களால் திருட முடியாது. நெருப்பினால் எரிக்க முடியாது. ஏனையோருக்குக் கொடுக்கக் கொடுக்க குறைவுபடாது. கல்வியானது பெருகிக் கொண்டே செல்லுமன்றி ஒரு போதும் குறையாது. அரசனுக்கோ தன் நாட்டில் மட்டும் தான் சிறப்பு. ஆனால் கல்வி கற்றவனுக்கோ செல்லும் இடமெல்லாம் சிறப்புக் கிட்டும். இதனால் தான் மூதுரையைத் தந்த ஔவைப் பாட்டி பாடல்கள் மூலமாக கல்வியின் சிறப்பை நமக்கெல்லாம் சொல்லிப் போயுள்ளார்.

இப்பூவுலகில் உள்ள செல்வங்களிலெல்லாம் சிறந்த செல்வமான கல்விச் செல்வத்தை நாம் கருத்துடன் கற்றல் அவசியமாகும். கல்வியைத் தெளிவுடன் கற்கும்போது அறிவு வளர்ச்சி பெறுகின்றது. அறிவு வளர்ச்சி ஏற்பட ஏற்பட மனிதன் நாளுக்கு நாள் நவீன நுட்ப முறைகளைக் கண்டுபிடிக்கின்றான். புதிய புதிய சாதனைகளை நிலை நாட்டுகின்றான்.

கற்றவர், நன்மை எது, தீமை எது என்று ஆராய்ந்தறியும் ஆற்றலைக் கொண்டவர். அதனால் உலகப் பொது மறையை இவ்வுலகுக்கு உவந்தளித்த தெய்வப்புலவரும் கல்வியின் பெருமையை எடுத்துக் கூறியுள்ளார். எண்ணும் எழுத்தும் இரு கண்களைப் போன்றது. இத்தகைய உயர்வான கல்வியை நாம் இளமையிலேயே கற்றல் வேண்டும். இளமையில் கற்கும் கல்வியானது நன்கு மனதில் பதியும்.

கல்லில் செதுக்கிய சிற்பம் எவ்வாறு மறையாது இருக்கின்றதோ அது போன்றுதான் இளமையில் கற்கும் கல்வி நன்கு நினைவில் நிற்கும். கல்வியைச் சிறப்பாகக் கற்பதால் அத்தொழில் செய்யினும் சிறப்புடன் செய்து மேன்மை அடையலாம்.

இம்மண்ணுலகில் எத்தனை ஆய்வுகள் நடந்தாலும் அவை அத்தனைக்கும் மூலதனமாய் முதலிடம் பெறுவது கல்விச் செல்வம்தான். கல்வி என்ற அப்பெருஞ் செல்வம் இல்லாவிடின் ஏனைய அனைத்துமே பயன் தராமல் போய்விடும். செல்வத்துள் செல்வமான கல்விச் செல்வத்தை நாம் பெற்றோமானால் நாம் விரும்பும் எத்தொழிலையும் செய்யலாம். அறிவைத்தரும் ஆசானாகவோ சுகத்தைப் பேணும் வைத்தியனாகவோ நீதியை நிலை நிறுத்தும் நீதிவானாகவோ சேவையாற்றிச் சீரும் சிறப்பும் பெறலாம். எனவே, நாம் கடல் போன்ற கல்வியைக் கருத்தோடு கற்று நலம் பல பெற்று நல் வாழ்வு வாழ்வோமாக.

*இனியவள்*

# கணித ஆசான் தம்பு அப்புலிங்கம்

■ கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்,
யாழ்.பல்கலைக்கழகம்.

மானிப்பாய் இந்துக் கல்லூரியின் புகழ் பூத்த ஆசிரியர்களுள் சிறப்பிடம் வகிப்பவர் கணித பாட ஆசிரியரான தம்பு அப்புலிங்கம் என்றால் மிகையாகாது. 1970 களிலிருந்து எண்பதுகளின் நடுப்பகுதி வரை மானிப்பாய் இந்துவில் பதினைந்து வருடங்கள் மாணவர்கள் மனதில் நீங்கா இடம் பிடித்தவர். கணித பாடத்தை ஓர் ஒழுங்குமுறைப்பட்ட ரீதியில் கற்பித்ததோடு மட்டுமில்லாமல் ஒழுக்கமான மாணவ சமூகத்தையும் கட்டி எழுப்புவதற்கு நாளாந்தம் பாடுபட்டவர்.

அணிகின்ற ஆடை, வகுப்பறையில் மாணவருடன் பழகும் முறை, பாடசாலையில் ஆசிரியர்களுடன் உறவாடும் பண்பு, பெற்றோருடன் தொடர்புகள் பேணி மாணவர் உலகத்தைத் தமது கைக்குள் வைத்துக் கொள்ளும் நுட்பம் என்று பல உத்திகளை அவர் கையாண்டதை நாம் அவதானித்துள்ளோம்.

அன்னார் 1927 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி ஏழாலை மேற்கில் பிறந்தார். அவர் தனது ஆரம்பக் கல்வி, இடைநிலைக் கல்வி ஆகியவற்றை தெல்லிப்பழை யூனியன் கல்லூரியிலும் உயர்தர வகுப்புகளை யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியிலும் பெற்றுக் கொண்டார். இவர் பலாலி ஆசிரிய கலாசாலையில் கணிதத்துறையில் விசேட பயிற்சியைப் பெற்றுக் கொண்டார்.

இவர் 1965 ஆம் ஆண்டு மே மாதம் விசேட கணிதத் துறையில் பயிற்றப்பட்ட ஓர் ஆசிரியராக வவுனியா ஓமந்தை மகாவித்தியாலயத்தில் நியமிக்கப்பட்டார்.

அவரிடம் கணிதக் கல்வி பெற்ற பலர் பொறியியல் துறையில் புகழுடன் விளங்குகின்றார்கள். 'சமன்பாடுகள்' என்கின்ற அவரது கட்டுரை இலங்கை வித்தியாபதியினால் நடத்தப்பட்ட ஆசிரியர் தராதரப்பத்திரப் பரீட்சையில் விசேட சித்தியைப் பெற்றுக்கொடுத்தது. தூய கணிதம், பிரயோக கணிதம், கணித வரலாறு, புள்ளி விவரவியல், பயிற்றல் முறைகள் மற்றும் ஆங்கிலத்தில் சிறப்புச் சித்திகளை பலாலி ஆசிரிய கலாசாலையில் பெற்றுக் கொண்ட ஆசிரியர் தனது மாணவர்களும் அவ்விதமே கணிதத்துறையில் சிறந்தோங்க தனது பணியைச் செவ்வனே செய்து வந்தார்.

பின்னர் 1969 ஆம் ஆண்டு ஜூன்மாதம் முதலாம் திகதி முதல் மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு மாற்றலாகி வந்தார். அடுத்து வந்த பதினைந்து ஆண்டுகள் மானிப்பாய் இந்துக் கல்லூரி பல்வேறு சிறப்புக்களுடன் கணிதத்துறையில் விசேடத்துவம் பெற அன்னாரின் பெரும் உழைப்பு காரணமாக இருந்தது. இந்தக் காலத்தில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அதிபர் பேராயிரவரின் வழிகாட்டலில் உயர்வு பெற்ற காலமாகும். இன்று பொறியியல், வங்கியியல் மற்றும் கணக்கியல் துறைகளில் சிறப்புடன் ஈடுபடும் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் பழைய மாணவர்களில் பலர் அமரரின் மாணவர்களாய் இருப்பர். மாதம் ஒரு பரீட்சை; பரீட்சை முடிவுகளை தபாலட்டையில் பெற்றோருக்கு அனுப்பும் செயல் நேர்த்தி; வகுப்பறைக்கு வெளியே மாணவருக்குத் தரும் கனிவான பார்வை; அன்பான வார்த்தைகள் என்பனவெல்லாம் இன்றும் அவரை நீள நினைக்க வைக்கின்றன. அன்னார் கடந்த மார்ச் மாதம் 28 ஆம் திகதி இவ்வுலகை விட்டு நீங்கினாலும் அவர் புகழுடம்பு இந்த மண்ணில் நிலைத்திருக்கும். அன்னாரது ஆத்மா சாந்தி அடைவதாக.

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்**: தொழில், வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் கூடுதலாகப் பணியாற்ற வேண்டும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கவனமாகச் செயற்படுவது நல்லது. புதிய பதவிகள் தொடர்பான விடயங்கள் தாமதப்பட்டாலும் பொறுப்புகள் அதிகரிக்கும்.

**இடபம்**: குடும்பத்தில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வது நன்மை தரும். சிறிய விடயங்களுக்குக் கூடக் கோபம் வரலாம். அதனால் உறவினர்கள், நண்பர்களிடம் கவனமாகப் பேசுவது நல்லது. விபரீத ஆசைகள் ஏற்படலாம். கவனம் தேவை.

**மிதுனம்**: மேலதிகாரிகளிடம் நன்கு பழகி அவர்கள் நன்மதிப்பைப் பெறுவதுடன் பாடங்களில் இருக்கும் சந்தேகங்களையும் போக்கிக் கொள்வீர்கள். வாழ்க்கையில் பல்வகைச் சோதனைகளையும், தடைகளையும் தகர்த்தெறிவீர்கள்.

**கடகம்**: எதிலும் இலாபம் கிடைக்கும். நன்மை, தீமை பற்றிய கவலை இல்லாமல் தலை நிமிர்ந்து நடப்பீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பதவி உயர்வு பெறுவார்கள். இருப்பினும் வேலை விடயத்தில் எதிலும் மிகவும் கவனம் தேவை.

**சிங்கம்**: உத்தியோகத்தில் இடமாற்றம் ஏற்படலாம். செலவும் அதிகரிக்கும். மனதில் ஏதாவது ஒரு கவலை இருக்கும். வாகனங்களில் செல்லும் போதும், தீ, ஆயுதங்கள் போன்றவற்றைக் கையாளும் போதும் கவனம் தேவை. திடீர் மனஸ்தாபம் உண்டாகலாம்.

**கன்னி**: தொழிலில் எதிர்ப்புகள் அகலும். எல்லா நலன்களும் உண்டாகும். விரும்பியது கிடைக்க கூடுதல் முயற்சி தேவை. பயணம் மூலம் இலாபம் கிடைக்கப் பெறுவீர்கள். புதிய நபர்கள் நட்பு உண்டாகும்.

**துலாம்**: பல விதத்திலும் புகழ் கூடும். மற்றவர்கள் பிரச்சினைகளில் வாதாடி வெற்றி பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டிகள் விலகும். பழைய மிகுதிகள் கிடைக்கப்பெறும். வியாபாரம் விரிவாக்கம்செய்ய தேவையானபண உதவியும்கிடைக்கப் பெறுவீர்கள்.

**விருச்சிகம்**: உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு நிலுவையில் இருந்த பணம் வந்து சேரும். மேலதிகாரிகள் உதவி கிடைக்கும். சக ஊழியர் மத்தியில் இருந்து எதிர்ப்புகள் விலகும். உறவினர்கள் வருகை இருக்கும். திருமணம் போன்ற சுப காரியம் நடக்கும்.

**தனுசு**: கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். மனோபலம் கூடும். பெண்களுக்கு புதிய நபர்கள் அறிமுகமும் அவர்களால் உதவியும் கிடைக்கும். எதிலும் எச்சரிக்கை தேவை. பயணம் செல்ல வேண்டி இருக்கும்.

**மகரம்**: வீண் விவகாரங்களில் தலையிடாமல் ஒதுங்கிவிடுவதும் நன்மை தரும். காரியங்களில் வெற்றி பெற திட்டமிடுதலும் ஆலோசனை செய்வதும் நல்லது. தேவையற்ற பிரச்சினைகளில் தலையிடாமல் இருப்பதும் நல்லது.

**கும்பம்**: சகல கஷ்டங்களும் நீங்கி நிம்மதி உண்டாகும். எதிர்ப்புகள் அகலும். தொழில் வியாபாரத்தில் இருந்த போட்டிகள் விலகும். பங்குதாரர்களுடன் இருந்த பிரச்சினைகள் தீர்ந்து வியாபாரம் வளர்ச்சி பெறும்.

**மீனம்**: நீங்கள் எடுக்கும் முயற்சிகள் அனைத்தும் முன்னேற்றங்களைத் தரும். முயற்சிகள் சாதகமான பயன் தரும். ஆனால் வாகனங்களில் செல்லும் போதும் இயந்திரங்களைக் கையாளும் போதும் தீ, மின்சாரம் ஆகியவற்றிலும் மிகவும் கவனமாக இருப்பது நல்லது.

## நாளை

**வைகாசி-08 வியாழக்கிழமை | 22.05.2014**

திதி: அட்டமி மு.ப.08.24 வரை
நட்சத்திரம்: சதயம் மு.இ.08.27 வரை

சுபநேரம்: 07.22-08.52 வரை
இராகுகாலம்: 01.22-02.52 வரை

## விவேகானந்தர் சிந்தனையில் இருந்து....



### வேதாந்தத்தின் உண்மையும் ஆதிக்கமும்

வேதாந்தத் தத்துவம் என்று வழங்கப்படும் ஓர் இந்தியச் சமயத் தத்துவத்தின் பிரதிநிதியாகவே நான் இங்கே வந்தேன். இந்தச் சமயத் தத்துவம் மிக மிகப் பழைமையானது. வேதம் என்ற பெயரால் வழங்கப்படும் மிகப் பெரிய தொகுதியான ஆரியர்களின் இலக்கிய சாரமே இந்தத் தத்துவம். இந்தப் பெருந் தொகுதியான இலக்கியத்தில் காணப்படும் நம்பிக்கைகள், அனுபவங்கள், ஆராய்ச்சிகள் இவற்றின் அடிப்படையில் மலர்ந்த மலரே இந்தத் தத்துவம்; பல நூற்றாண்டுகளாக அவற்றிலிருந்து திரட்டிக் கடைந்தெடுக்கப்பட்ட தத்துவமே இது. இந்த வேதாந்தத் தத்துவத்துக்குச் சில தனிப்பண்புகள் உள்ளன. முதன் முதலாக இது மனிதச் சார்பற்றது; எந்த ஒரு மனிதனின் அல்லது மகானின் மூலமாக உபதேசிக்கப்பட்டதல்ல. ஒரு மனிதனை மையமாகக் கொண்டு எழுந்ததும் அல்ல. எனினும் இந்தத் தத்துவம் மனிதர்களை மையமாகக் கொண்டு எழுந்த சமயத் தத்துவங்களைக் குறை கூறுவதும் இல்லை. பிற்காலத்தில் இந்தியாவில் புத்த சமயம் போலவும், இன்று நாம் காணும் பல சமயங்கள் போலவும் மனிதர்களை மையமாகக் கொண்ட சமயத்தத்துவங்கள் தோன்றின. இத்தகைய மதம் ஒவ்வொன்றுக்கும், கிறிஸ்தவ முஸ்லிம் சமயங்களைப் போல ஒரு குரு அல்லது தலைவர் இருப்பார். அவரைத் தெய்வமாகவே அந்த மதத்தவர்கள் கருதுவார்கள். வேதாந்தத் தத்துவமோ, இந்த மதங்களுக்கெல்லாம் அடிப்படையாக, நிலைக்களமாக நிற்கிறது. வேதாந்தத் தத்துவத்துக்கும் உலகத்தின் வேறு எந்தச் சமயத்துக்கும் இடையில் சண்டையோ பகையோ இல்லவே இல்லை.

வேதாந்தம் ஓர் அடிப்படை உண்மையைச் சொல்கிறது. இந்த உண்மை, உலகின் சகல சமயங்களுக்கும் பொதுவானது என்றும் வேதாந்தம் சொல்கிறது. 'மனிதன் தெய்வத் தன்மை வாய்ந்தவன்; நாம் காணும் பிரபஞ்சம் முழுவதும் இந்தத் தெய்வீக அறிவின் விளைவாகத் தோன்றுவதுதான்', என்பதே அந்த உண்மை. மனிதனிடம் காணப்படும் வலிமையான, நல்ல, ஆற்றல் பொருந்திய அனைத்துமே இந்தத் தெய்வீகத்தின் பயனாக ஏற்பட்டவையே. இந்த தெய்வீகம் பலரிடம் மறைந்திருந்தாலும், உண்மையில் மனிதனுக்கும் மனிதனுக்கும் வேறுபாடு இல்லை;

## பன்மடங்கு வேகம் கொண்ட 5ஜி வலையமைப்பு வசதி

### 2022 ஆம் ஆண்டில் அறிமுகமாகும்




ஐக்கிய இராச்சியத்தில் வலையமைப்புச் சேவையை வழங்கி வரும் சிசி நிறுவனம் 2022 ஆம் ஆண்டளவில் ஐந்தாம் தலைமுறை இணைய வசதியை அறிமுகம் செய்யவுள்ளதாக அறிவித்துள்ளது. இந்த வலையமைப்பு தற்போது காணப்படும் 3ஜி, 4ஜி வலையமைப்புக்களை விடவும் 1000 தொடக்கம் 5000 மடங்கு வேகம் கொண்டதாக இருக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதாவது 10 மற்றும் 100 Gbps தரவுப்பரிமாற்ற வேகத்தைக் கொண்டிருக்கும்.

தற்போது ஐக்கிய இராச்சியத்தில் சிசி வலையமைப்பை மூன்று மில்லியன் மக்கள் பயன்படுத்தி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சுடோக்கு

### எண் விளையாட்டு

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 8 | | | | 5 | | | |
| | | | | 8 | | | 9 | 5 |
| 2 | | 5 | | | 6 | 3 | 8 | |
| | 1 | | 8 | | 4 | 6 | | 2 |
| 5 | 3 | | | | | | 4 | 9 |
| 6 | | 4 | 3 | | 1 | | 5 | |
| | 5 | 2 | 7 | | | 8 | | 4 |
| 7 | 4 | | | 1 | | | | |
| | | | 4 | | | | 7 | 6 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 7 | 1 | 9 | 8 | 6 | 5 | 4 | 3 |
| 8 | 3 | 5 | 7 | 2 | 4 | 1 | 9 | 6 |
| 6 | 9 | 4 | 5 | 1 | 3 | 8 | 2 | 7 |
| 3 | 8 | 7 | 6 | 5 | 2 | 9 | 1 | 4 |
| 1 | 6 | 2 | 3 | 4 | 9 | 7 | 8 | 5 |
| 4 | 5 | 9 | 1 | 7 | 8 | 6 | 3 | 2 |
| 5 | 4 | 8 | 2 | 6 | 1 | 3 | 7 | 9 |
| 7 | 2 | 3 | 8 | 9 | 5 | 4 | 6 | 1 |
| 9 | 1 | 6 | 4 | 3 | 7 | 2 | 5 | 8 |

# இரு கைகளுமின்றி மேசைப்பந்தாட்டத்தில் ஈடுபடும் நபர்

இரு கைகளும் இல்லை என்பதையே மறக்கடிக்கச் செய்யும் விதமாக எகிப்தைச் சேர்ந்த நபரொருவர் மேசைப் பந்தாட்டத்தில் கலக்குகிறார். எகிப்தைச் சேர்ந்த இப்றாஹிம் ஹமதோ என்பவர் 10 வயதில் விபத்தொன்றின்போது தனது இரு கைகளையும் இழந்திருந்தார். எனினும் தனது விருப்பத்துக்குரிய மேசைப் பந்தாட்டத்தை கைவிடாமல் பயிற்சி மேற்கொண்டு வந்துள்ளார். முயற்சி இருந்தால் எந்தத் தடையையும் வெற்றி கொள்ளலாம் என்பதற்கொப்ப பந்தைப் பரிமாற கால்களையும் துடுப்பை வாயினால் பிடித்துக்கொண்டும் மேசைப்பந்தாட்டத்தை அபாரமாக விளையாடுகிறார் இப்றாஹிம்.


இப்றாஹிம் ஹமதோ



# இரும்பு ஆணிகளை உட்கொள்ளும் சீனர்

சீனாவைச் சேர்ந்த சர்க்கஸ் கலைஞரொருவர் இரும்பு ஆணிகளை உட்கொள்ளும் விசித்திர பழக்கத்துக்கு அடிமையாகியுள்ளார். இவர் ஐந்து சென்ரிமீற்றர் நீளமான இரும்பு ஆணிகளை உணவாக உட்கொள்கிறார். கடந்த 30 வருடங்களாக இவர் ஆணியை உண்டு நீரை அருந்தி வருகிறார். அவர் உடைந்த கண்ணாடி மற்றும் பீங்கான் துண்டுகளையும் உட்கொள்வதாகத் தெரியவருகின்றது. இந்த நபர் தனது 17 ஆவது வயதிலிருந்து இந்தப் பழக்கத்துக்கு அடிமையாகியுள்ளார்.



# முந்திரிப்பழத்தில் அதிக மருத்துவ குணங்கள்

முந்திரிப் பருப்புகளை விரும்பிச் சாப்பிடும் அளவுக்கு மர முந்திரிப் பழங்களைப் பயன்படுத்துவது குறைவு. ஏனெனில் பழத்தில் உள்ள டானின் என்ற வேதிப்பொருளே காரணம். இதனால் பழம் சாப்பிடும்போது தொண்டையில் கரகரப்புத் தன்மை ஏற்படுகிறது. இதனைப் போக்க பழத்தை நீராவியில் பத்து நிமிடம் வேகவைத்து அல்லது உப்புநீரில் ஊறவைத்துச் சாப்பிடலாம்.

மா, பலா, தோடம்பழம் போன்று அதிக சத்துகள் நிறைந்தது மர முந்திரிப் பழம். முக்கியமாக விற்றமின் சி தோடம்பழத்தை விட, மர முந்திரிப்பழத்தில் ஐந்து மடங்கு அதிகமுள்ளது.

விற்றமின் 'சி' மனித உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை உருவாக்குகின்றது. ஈறுகளில் ஏற்படும் இரத்தக்கசிவு நோயைக் குணமாக்குகின்றது. பற்கள், நகங்களை உறுதிப்படுத்துகின்றது. ஸ்கேவி என்ற விற்றமின் சி குறைபாடு நோயை குணமாக்குகின்றது. மேலும், கிருமி நாசினியாகச் செயற்பட்டு தொற்று வியாதிகளைக் குணமாக்கவும் பயன்படுகின்றது. இவற்றில் புரதம், பீட்டோ கரோட்டின், நார்ச்சத்துகள் நிறைந்துள்ளன.

# செய்யக் கூடாத விடயங்கள்


புண்ணிய தீர்த்தங்களில் முதலில் காலை அலம்பக்கூடாது. முதலில் அந்த நீரைக் கைகளால் அள்ளித் தலையில் தெளித்துக் கொண்டு கால் அலம்ப வேண்டும்.
குளத்தில் கல்லைப் போடக்கூடாது.
பூசை வேளையில் தீபத்தை ஆடவர்கள் அணைக்கக் கூடாது. பூசணிக்காயை பெண்கள் உடைக்கக் கூடாது.
கோயிலை வேகமாக வலம் வருதல் கூடாது.
கோயிலில் வைத்து எவருடனும் வீண் வார்த்தைகள் பேசக்கூடாது.
தாம்பூலம் தரித்துக் கொண்டு கோயிலுக்குள் செல்லக்கூடாது. சுவாமிக்கு நிவேதனம் ஆகும் போது பார்த்தல் கூடாது.
இரவில் துணி துவைக்கக் கூடாது. குப்பையை வெளியே கொட்டக் கூடாது.
தீபாவளி தவிர ஏனைய நாள்களில் அதிகாலைப் பொழுதில் எண்ணெய் தேய்த்துக் கொள்ளக்கூடாது.
இடது கையால் நீர் அருந்தக்கூடாது.



# உடலைச் சீராக்கும் சீரகம்

நாம் தினமும் வீட்டில் சமையலுக்குப் பயன்படுத்தும் சீரகம் மருத்துவக் குணங்கள் அதிகம் கொண்டது. சீரகம் ஒரு மருத்துவ மூலிகையாகும். சீர் + அகம் = சீரகம் என்ற கருத்து. இதற்கு மிகவும் பொருத்தமாக இருக்கும். ஏனெனில் வயிற்றுப்பகுதியைச் சீரமைப்பதில் இது பெரும் பங்காற்றுகிறது.

இது கார்ப்பு, இனிப்பு சுவையும், குளிர்ச்சித் தன்மையும் கொண்டது. இதன் மணம், சுவை மற்றும் செரிமானத்தன்மைக்காக உணவுப்பொருள்களில் சேர்க்கப்படுகிறது.



மஞ்சள் வாழைப் பழத்துடன், சிறிது சீரகம் சேர்த்துச் சாப்பிட்டு வந்தால் உடல் எடை குறையும்.
கர்ப்பகாலத்தில் ஏற்படும் வாந்தியைக் குறைக்க எலுமிச்சம்பழச் சாற்றுடன் சீரக குடிதண்ணீரைச் சேர்த்துக் கொடுக்கலாம்.
ஓமத்துடன் சிறிது சீரகம் இட்டு கசாயம் செய்து, சாப்பிட்டால், அதிக பேதி போக்கு நிற்கும்.
சீரகம் தாய்மார்களுக்குப் பால் சுரப்பை அதிகரிக்கச் செய்யும்.
மோருடன் சீரகம், இஞ்சி, சிறிது உப்பு சேர்த்துப் பருகினால் வாயுத் தொல்லை நீங்கும். சீரகத்தை லேசாக வறுத்து, அதனுடன் கருப்பட்டி சேர்த்துச் சாப்பிட்டு வர, நரம்புகள் வலுப்பெறும். நரம்புத் தளர்ச்சி குணமாகும்.
வாய்ப்புண், உதட்டுப்புண் குணமாக சீரகத்துடன் சின்னவெங்காயத்தையும் லேசாக நெய்விட்டு வதக்கி உண்ணலாம்.
சீரகத்தை இஞ்சி, எலுமிச்சம் பழச்சாறில் கலந்து ஒருநாள் ஊறவைத்துக் கொள்ளவும். அதை, தினம் இருவேளை வீதம் மூன்று நாள்கள் சாப்பிட்டு வர, பித்தம் குணமாகும்.

**புலோலி பல நோக்குக் கூட்டுறவுச்சங்கம்**
**புலோலி கிழக்கு பருத்தித்துறை**
**சேவிஸ் நிலையம் குத்தகைக்கு வழங்கல்**

எமது சங்க சேவிஸ் நிலையம் குத்தகைக்கு வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விருப்பமுடையோர் மீளளிக்கத்தக்க வைப்புப்பணமாக ரூபா 1000.00 வைப்புச்செய்து இதற்கான விண்ணப்பப்பத்திரத்தை தலைமை அலுவலகத்தில் பெற்று அதனைப் பூர்த்தி செய்து ஒரு கடித உறையினுள் வைத்து ஒட்டி **04.06.2014** இற்கு முன்னர் **பொது முகாமையாளர், புலோலி பலநோக்குகூட்டுறவுச்சங்கம், புலோலி கிழக்கு பருத்தித்துறை** எனும் முகவரியிட்டு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கவும்.

**முக்கியகுறிப்பு:** கேள்வித்தொகை ரூபா 20000 (இருபதாயிரம்) இற்கு மேற்பட்டதாக இருத்தல் அவசியமாவது.

பொதுமுகாமையாளர். (கி/14020) (3.6.4)

**நன்றி நவிலல்**



**Dr.செல்வதுரை இந்திரராஜா**

எமது தந்தையின் பூவுலகப் பயணத்தின் முடிவு பற்றிய செய்தி கேட்டு எமக்கு ஆறுதல் கூறியோருக்கும், பல வழிகளில் ஒத்தாசை புரிந்தோருக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.
தனிப்பட்ட முறையில் எமது நன்றியறிதலை தெரிவிக்க முடியாததையிட்டு எமது வருத்தத்தைத் தெரிவிக்கின்றோம்.

**மகத்தான சேவை**

எமது தந்தை ஏப்ரல் மாதம் 10 நாள்கள் வரை யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று 21 ஆம் திகதி இயற்கை எய்திய காலம் வரை அவரின் வைத்திய நிபுணர் Dr.பேரானந்தராஜாவும் அவரின் குழாமும், கடமை, கண்ணியம், கட்டுப்பாட்டுடன் செய்த அளப்பரிய சேவையை எமது வாழ்நாள் உள்ளவரை மறக்க முடியாது.
அத்துடன் Dr.பார்த்திபன், Dr.சயந்தன், Dr.வேணி ஆகியோர் நாங்கள் சோதனையான காலகட்டத்தில் இருந்த பொழுது பல வழிகளிலும் செய்த உதவிகளை நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.
எல்லோருக்கும் இச்சந்தர்ப்பத்தில் எமது மனப்பூர்வமான நன்றிகளை அன்புடன் தெரிவிக்கின்றோம்.

**திருமதி இந்திரராஜா, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.** (48265)(3.6.4)

# குற்றச்செயல்கள் தொடர்பாக சந்தேக நபர்கள் 212 பேர் கைது

வலி.வடக்கு, மே 21

யாழ்.மாவட்ட பொலிஸ் நிலையங்களால் கடந்த ஒரு வார காலத்தில் பல்வேறு குற்றச் செயல்களுடனும் தொடர்புடையவர்கள் என்ற குற்றச்சாட்டில் 212 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றங்களில் முன்னிலை செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் விமலசேனா தெரிவித்துள்ளார்.

வாராந்த பொலிஸ் செய்தியாளர் சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் பொலிஸ் அத்தி யட்சகர் பிரிவுக்கு உட்பட்ட 09 பொலிஸ் நிலையங்களிலும் இந்த வாரம் 129 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மோசடிக் குற்றத்தில் 2 பேர், மதுபோதையில் வாகனம் செலுத்திய குற்றத்தில் 5 பேர், அடித்துக் காயப்படுத்திய குற்றத்தில் 24 பேர், சட்ட விரோதமான முறையில் மது விற்பனை செய்த சந்தேகத் தில் 27 பேர், சந்தேகத்தின் பெயரில் 11 பேர், பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்கள் 26 பேர், வீதி விபத்தை ஏற்படுத்திய குற்றத்தில் 3 பேர், வீட்டுக்குள் அத்துமீறிப் பிரவே சித்தமை தொடர் பாக 2 பேர், களவு தொடர்பில் 8 பேர், பொது மக் களுக்கு இடையூறு ஏற் படுத்தியமை தொடர்பில் 2 பேர், அனுமதிப்பத்திரம் இன்றி மாடு வெட்டிய குற்றத்தில் 5 பேர், சட்டவிரோதமான முறையில் மின்சாரம் பெற்ற குற்றத் தில் 9 பேர், பொது இடத்தில் மது அருந்திய குற்றத்தில் 3 பேர், சிறுவர் துஷ்பிரயோகக் குற்றச்சாட்டில் ஒருவரும் தடை விதிக்கப்பட்ட வலையைப் பயன்படுத்திய குற்றத்தில் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை பொலிஸ் அத்தியட்சகர் பிரிவில் பெரிய ளவிலான குற்றங்கள் தொடர் பில் 3 பேரும் சட்டவிரோத மது விற்பனை செய்த குற்றத்தில் 4 பேரும் பிடியாணை பிறப் பிக்கப்பட்டவர்கள் 22 பேரும் சந்தேகத்தின் பெயரில் 9 பேரும் மது போதையில் வாகனம் செலுத் திய குற்றத்தில் 5 பேரும் ஏனைய குற்றங்கள் தொடர்பாக 40 பேரு மாக 83 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-86)

## ஆவணங்களை சமர்ப்பிக்கவும்

யாழ்.உயர் தொழில் நுட்பவியல் நிறுவனம் இந்த வருட இறுதியில் பட்டமளிப்பு விழாவை நடத்தத் தீர்மானித்துள்ளதால் 2013 ஆம் ஆண்டில் முழுமையாக கற்கை நெறிகளைப் பூர்த்தி செய்ததகைமைஉடைய மாணவர்கள் அதற்கான ஆவணங்களை நிர்வாகப்பகுதியில்பெற்று அவற்றை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் உரிய வகையில் சமர்ப்பிக்குமாறு உயர் தொழில் நுட்பவியல் நிறுவனப் பணிப்பாளர் கோரியுள்ளார். (வ)

**மரண அறிவித்தல்**



**திருமதி பரமேஸ்வரி நடராஜா**
(புங்குடுதீவு - 11 - ஒட்டுமடம், யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு - 11ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம், ஒட்டுமடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட **திருமதி பரமேஸ்வரி நடராஜா** 18.05.2014 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் நடராஜா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு - கண்மணி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம் - சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மருமகளும், தமிழ்ச்செல்வன், செந்தமிழ்ச்செல்வி, காலஞ்சென்ற கலைச்செல்வி ஆகியோரின் அன்புத் தாயும், காலஞ்சென்ற சின்னத் துரை மற்றும் பரமேஸ்வரி, சிவசுப் பிரமணியம் ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான கனகாம்பிகை, சீவரட்ணம், சற்குணவதி மற்றும் தனலெட்சுமி, கமலாநிதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தாட்சாயினி (துளசி), விதுரன், கண்ணன், சங்கீதா, கோகுலன், நிவேதன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், ராகவன், ஐஸ்வரி, வச்சலா, மோகணன் ஆகியோரின் அன்புப் பூட்டியும், காலஞ்சென்றவர்களான நல்லையா, நடராசா, தம்பிராசா, சீவரட்ணம் மற்றும் சாரதாம்பாள், யோகரட்ணம், தையல்நாயகி ஆகியோரின் அன்பு மைத்துனியும், காலஞ்சென்ற சண்முகம் மற்றும் சரோஜினி ஆகியோரின் அன்புச் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.2014) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் யாழ். கோம்பயன் மணல் இந்து மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.189, மானிப்பாய் வீதி,
ஒட்டுமடம், யாழ்ப்பாணம்,
(48272) (45.3.6)
தகவல் : **கணவர்** - குடும்பத்தினர்
021 492 5189/077 904 1507

**10ஆம் ஆண்டு நினைவலைகள்**

தோற்றம் 29 . 05 . 1928



மறைவு 21 . 05 . 2004

**அமரர் இராசையா குமாரசாமி**
(முன்னாள் உரிமையாளர் இராசையா அன்சன், ஸ்ரான்லி வீதி - யாழ்ப்பாணம்)

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து
வாழும் வழியை எமக்குப் புகட்டி
தெய்வத்துள் தெய்வமாய் உறைந்து
செய்தவப் பயன் பெற்ற ஐயாவே!
ஆண்டுகள் பத்து அல்ல ஆயிரம் கடந்தாலும்
ஆறாது, உங்கள் பிரிவுத்துயர்
மழைக்கால மனவலியாய்
மனசெல்லாம் நிறைந்து நிற்கும் ஐயாவே!
மனதார இறைஞ்சுகின்றோம்.
உங்கள் ஆத்மா சாந்திபெற.

(46662)(12.3.6)

*நீங்காத நினைவுகளுடன்:*
**மனைவி, மக்கள், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

**31ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்**

தோற்றம் 06 . 02 . 1965



மறைவு 21 . 04 . 2014

**அமரர் வைத்திலிங்கம் முருகதாசன்**

கடந்த 21.04.2014 இறைபதம் எய்திய
அமரர் வைத்திலிங்கம் முருகதாசன் அவர்களின் பிரிவுச் செய்தி அறிந்து உடன் வந்து ஆறுதல் சொல்லியும் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டு, சகல வழிகளிலும் ஒத்தாசை புரிந்து அவரின் பிரிவுத் துயரில் பங்கு கொண்டவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியவர்களுக்கும் எம் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.
அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனை நாளை மறுதினம் (23.05. 2014) வெள்ளிக்கிழமை ந.ப.12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. அத்தருணம் தாங்கள் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
அழைப்புக் கிடைக்கப்பெறாதவர்கள் இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

பங்களாலேன், மல்லாகம். (48186)(12.3.6) **குடும்பத்தினர்.**

**31ஆம் நாள் நினைவஞ்சலி**

அமரர் **சுப்பிரமணியம் ஏரம்பமூர்த்தி** (கண்ணன்)



உதிப்பு
16.10.1968


உதிர்வு
21.04.2014

அன்பாலும் பண்பாலும் அரவணைத்து
எம்முடன் வாழ்ந்த கண்ணா மாமாவே
திங்கள் ஒன்று சென்றாலும் உங்கள்
மதிமுகம் மறையவில்லை மாமா
எங்கள் உயர்வுக்கு உறுதுணையாய் இருந்த
உங்கள் சிரித்த முகம் காண்பதற்கு தவிக்கின்றோம்.
எங்கள் மனதில் என்றும் நினைவுடன் இருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

(C7693)(10.6.3)

கச்சாய் தெற்கு, கொடிகாமம்.

**மருமகன்மார், அக்கா, அத்தான், பெறாமகன்மார். பேரப்பிள்ளைகள்.**



தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ச, கொழும்பு மாவட்ட பேராயர் மல்கம் ரஞ்ஜித் ஆண்டகையை அவரது இல்லத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சந்தித்துக் கலந்துரையாடியபோது, தான் முன்வைத்துள்ள கோரிக்கைகள் அடங்கிய ஆவணத்தையும் பேராயரிடம் கையளித்தார். (ச)

# அமைச்சுப் பதவிகளை துறக்க கடும் அழுத்தம்

## ஹக்கீம், பசீருக்கு கிழக்கிலிருந்து வருகிறது

கொழும்பு,மே 21
அரசில் வகித்து வரும் அமைச்சுப் பதவிகளைத் துறக்குமாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் அதி உயர் பீட உறுப்பினர் பசீர் சேகுதாவுத் ஆகியோருக்கு அழுத்தம் பிரயோகிக்கப்பட்டு வருகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

அரசு தொடர்ச்சியாக முஸ்லிம் காங்கிரஸைப் புறக்கணித்து வருகிறது. அதனை எதிர்க்கும் முதல் கட்டமாக அமைச்சுப் பதவிகளைத் துறக்க வேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

அண்மையில் அமைச்சர் ஹக்கீம் கிழக்கு மாகாணத்துக்குச் சென்றிருந்தார்.

அதன் போது கட்சி எடுக்க வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து கட்சியின் அதி உயர் பீடம் தீர்மானிக்கும் என்று ஹக்கீம் குறிப்பிட்டார்.

அரசின் அடக்குமுறைகளைத் தொடர்ந்தும் பொறுத்துக் கொண்டால் கட்சி உறுப்பினர்கள் கட்சியை கைவிட்டுவிடக் கூடும் என்று கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சிரேஸ்ட அரசியல்வாதிகள் ஹக்கீமிடம் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

முஸ்லிம் காங்கிரஸின் உதவியுடன் கிழக்கு மாகாணத்தில் அரசு ஆட்சி நடத்தி வருகிறது. முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஆதரவு இல்லாவிட்டால் அரசால் கிழக்கு மாகாண சபையை நிர்வாகம் செய்ய முடியாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# இலங்கைக்கு எண்ணெய் ஏற்றுமதி

## மீண்டும் ஆரம்பித்தது ஈரான்

**அணுவாயுதம் தொடர்பில் மேற்குலக நாடுகளுக்கும், ஈரானுக்கும் இடையிலான உடன்படிக்கை ஒன்று கைச்சாத்தானது.**

கொழும்பு,மே 21
இலங்கைக்கான எண்ணெய் ஏற்றுமதியை ஈரான் மீண்டும் ஆரம்பித்துள்ளது.

ஈரானுக்கு எதிராக அமெரிக்கா விதித்திருந்த பொருளாதாரத் தடையைத் தொடர்ந்து ஈரானின் எண்ணெய் ஏற்றுமதி வர்த்தகம் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

எனினும் ஜெனிவாவில் இடம் பெற்ற பேச்சுக்களின் பின்னர் அணுவாயுதம் தொடர்பில் மேற்குலக நாடுகளுக்கும், ஈரானுக்கும் இடையிலான உடன்படிக்கை ஒன்று கைச்சாத்தானது. இதனைத் தொடர்ந்து ஈரான் மீதான பொருளாதாரத் தடை தளர்த்தப்பட்ட நிலையில், ஈரான் மீண்டும் எண்ணெய் ஏற்றுமதியை ஆரம்பித்துள்ளது.

தென்னாபிரிக்காவுக்கும், இலங்கைக்குமான எண்ணெய் ஏற்றுமதியை ஈரான் மீண்டும் ஆரம்பித்துள்ளது என்று ஈரானின் சர்வதேச விவகாரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எண்ணெய் ஏற்றுமதி தொடர்பில் இலங்கையுடன் நீண்ட கால உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்திக் கொள்ளப்படும் என்றும் கூறப்படுகிறது. (ச)

# சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்கு விழிப்புணர்வு

மட்டக்களப்பு,மே 21
மட்டக்களப்பு மாவட்டத்தில் கிறிஸ்தவ வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுப்பதற்கான விழிப்புணர்வு நடமாடும் சேவை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கல்லடி பாலத்துக்கு அருகில் நடைபெற்றது.



விழிப்புணர்வில் ஈடுபட்டபோது

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியின் கீழ் மட்டக்களப்பு மாவட்ட செயலகம், மற்றும் மாவட்ட சிறுவர் அபிவிருத்திக் குழுவுடன் இணைந்து கிறிஸ்தவ வாலிபர் சங்கம் இந்த நடமாடும் சேவையை நடத்தியுள்ளது. (ச)

### அபிவிருத்தி குழுக் கூட்டம்

மட்டக்களப்பு,மே 21
மட்டக்களப்பு மாவட்டத்தில் முதல் தடவையாக மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு கொக்கட்டிச்சோலை கலாசார மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் எம்.எல். ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் தலைமையில் இடம் பெறவுள்ள இந்த மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத், மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் உட்பட்ட பலர் கலந்து கொள்வர். (ச)

முதல் முறையாக
3D தொழில்நுட்பத்தில்
யாழ் திரையரங்கில்
மே 23 முதல்!




MAJESTIC CINEMA - CARGILLS SQUARE
(Opposite Jaffna Teaching Hospital)
Platinum 3D
9.30am, 12.00noon, 2.30pm, 5.00pm 7.30pm
021-2227712

**திருமண அழைப்பிதழ்**
மலிவான விலையில் மனம் கவர்ந்த அழைப்பிதழ்களைப் பெற்றுக்கொள்ள விரைந்திடுங்கள்.
Evergreen Celebrations
இல.120/4, பலாலிறோட்,(இலுப்பையடி சந்திக்கு அருகில்)கந்தர்மடம்
(48283) (12.3.6)
077 775 0318/078 282 8388

**மதுரா அழகுக் கலைப் பயிற்சி நிலையம்**
(கோப்பாய் நாவலர் பாடசாலை அருகில்)



புதிய பிரிவுகள் 24.05.2014 அன்று ஆரம்பிக்கப்படவுள்ளன.
பயிற்சியில் இணைய விரும்புவோர்
24.05.2014 இற்கு முன் பதிவுகளை மேற்கொள்ளவும்
பயிற்சி விவரம் :
கிளீனப், பேசியல் 25, மேக்கப் 6, சாரி டிரெசிங் 10, திரெட்டிங், வக்சிங், பெடிகியூர், மெனிகியூர், நெயில் ஆட், ப்ளெண்டிங், ஸ்ரெயிட்டிங், பேர்மிங், கெயார் கட்டிங், மெசினரி பேசியல் 2, வன் டே அயனிங், பிம்பிள் ரீட்மென்ட், கொட் ஒயில் மசாஜ், கரும்புள்ளி வெள்ளைப்புள்ளி அகற்றுதல், காய்கள் அகற்றுதல், கேளிங், மெகந்தி டிசைனிங், ஸ்பாட்மென்ட் தையல், சாறிவேர்க், கேக் ஐசிங், கான்வேர்க் ஆகிய பயிற்சிகளும் உள்ளன.
Diploma பயிற்சிக் காலம் 3 மாதம்
பயிற்சிக் கட்டணம் 8000/= மட்டுமே
மகளிர் மட்டும்.
Professional Coure - 20000/=
பயிற்சி முடிவில் தரமான சான்றிதழ் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு: 077 936 2642
பழைய வீதி, கோப்பாய்.

**குறைந்த விலையில் உன்னதமான பயணம்**



உலகில் எந்தப்பகுதிக்கும் சென்றுவர விமான பயணச்சீட்டுக்களை குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். *Conditions apply

**ஹேலீஸ் டிரவல்ஸ் & டூர்ஸ்**
உங்கள்-உல்லாச பயணத்திற்கு ஒரே தெரிவு!
யாழ்ப்பாணக்கிளை: 275, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021 222 1878 மனை : 077 773 0818

# மரண அறிவித்தல்

## தில்லையம்பலம் வீரசிங்கம்



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் குமரகோட்டம் கோண்டாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் வீரசிங்கம் 17.05.2014 சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம்-செல்லாச்சி தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை-தங்கமுத்து தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், தயாபரன்(ஜேர்மனி) அவர்களின் அன்புத் தந்தையும், றஞ்சினிதேவியின் (ஜேர்மனி) அன்பு மாமனும்,றஜிதன் (ஜேர்மனி), நமியா(ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேரனும், தங்கம்மா (மலேசியா), காலஞ்சென்றவர்களான நல்லம்மா, இராசையா, முத்தம்மா, தேவராசா (மலேசியா),திலகராசா மற்றும் இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், சங்கரலிங்கம், காலஞ்சென்ற சரஸ்வதி ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(22.05.2014) வியாழக்கிழமை நடைபெற்று, மு.ப.11 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமரகோட்டம்,கோண்டாவில்.
ஜேர்மனி - 004 9202 2838 698
இலங்கை - 0094 214 900 190
தகவல்: தயாபரன் (மகன்)
(48281)(5.6.3)

# வடமராட்சி வலய விஞ்ஞான தினம்

வடமராட்சி, மே 21

வடமராட்சி கல்வி வலயம் நடத்தும் விஞ்ஞான தின நிகழ்வு இன்று புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை மண்டபத்தில் வடமராட்சி வலய விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஆர்.கருணேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராசேந்திரம் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார், வட மாகாண விஞ்ஞான உதவிக் கல்விப் பணிப் பாளர் ஏ.சிவனருள்ராஜா ஆகியோர் கலந்து கொள்வர்.

கௌரவ விருந்தினர்களாக நெல்லியடி, பருத்தித்துறை ஹற்றன் நஷனல் வங்கிக்கிளைகளின் முகாமையாளர்களான எஸ்.சத்தியசீலன், ஏ.யோகதாஸ் ஆகியோர் கலந்துகொள்வர். (வ-173)

# பரிசளிப்பு விழா இன்று

யாழ்ப்பாணம், மே 21

மானிப்பாய் சத்ய சாயி பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு வடமாகாண சபை முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

# ஆலய மகோற்சவம்

யாழ்ப்பாணம், மே 21

புங்குடுதீவு மேற்கு, இறுப்பிட்டி, பெரியபுலம் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை வியாழக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 29 ஆம் திகதி மாலை வேட்டைத் திருவிழாவும், இரவு சப்பரத்திருவிழாவும் இடம்பெற்று, 30 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன. (க)

# மரண அறிவித்தல்

## திருமதி தனலெட்சுமி (ராணி) தில்லைநாதன்



இணுவிலைப் பிறப்பிடமாகவும், நாவலப்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி தனலெட்சுமி தில்லைநாதன் 17.05.2014 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் தில்லைநாதன் (தனலெட்சுமி ஸ்ரோர் நாவலப்பிட்டி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அம்பலாவாணர் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சிவக்கொழுந்து தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான வேதவனம் - மதியாபரணம் (இராசாத்தி) தம்பதியரின் பெறாமகளும், சண்முகவதனி கிருஸ்ணகுமார் (ஆசிரியர், குப்பிளான் விக்கினேஸ்வரா வித்தியாலயம்), திருப்பதிநாதன் (Tilko Hotel, Jaffna), ஜெகநாதன் (Citi Bank, Canada) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கிருஸ்ணகுமார் (சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலகம், பிரதேச செயலகம், உடுவில்), சிவசக்தி திருப்பதிநாதன் (அபிவிருத்தி உத்தியோகஸ்தர், பிரதேசசெயலகம், பூநகரி), றொசானி ஜெகநாதன் (AAPS Pharmacology, Canada) ஆகியோரின் அன்பு மாமியும், சங்காரணி, கோலமயிலோன், பரிதிவாரணன், கஜனன், தக்சன்யா, தக்ஷியா ஆகியோரின் பேர்த்தியும், குகதாசன் (ஓய்வுபெற்ற பிராந்திய முகாமையாளர், மக்கள்வங்கி), சண்முகலிங்கம் (ஆசிரியர், யாழ் இந்துக்கல்லூரி), பரமேஸ்வரி (பிரான்ஸ்), சோதிலிங்கம் (ஜேர்மனி), சொர்ணலிங்கம் (ஆசிரியர், மல்வத்தை றோ.க.த.க. பாடசாலை, உடுவில்), கணேசதாசன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், கமலநாதன், அமிர்தாம்பிகை, அமிர்தகௌரி (சுவிஸ்), சிவசிதம்பரம் (அதிபர், கோண்டாவில் C.C.T.M School) ஸ்ரீரங்கநாதன் (சுவிஸ்), சண்முகமலர், செல்வரதி, சுந்தரேஸ்வரன் (பிரான்ஸ்), சிவதர்ஷினி (ஜேர்மனி), யசோதா (ஆசிரியர், சுன்னாகம் இராமநாதன் கல்லூரி), சிவதர்ஷினி (கனடா), சத்தியநாதன் (பாபு), திருநாவுக்கரசு (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும், இராசேஸ்வரி, ரேவதி (ஆசிரியர், கோண்டாவில் இந்துமகா வித்தியாலயம்), ரஞ்சலா (சுவிஸ்) ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.2014) புதன்கிழமை மு.ப.10 மணியளவில் அவரது இணுவில் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக இணுவில் காரைக்கால் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:
தில்லைநாதன் - 94778607718
சண்முகவதனி - 94774802994
திருப்பதிநாதன் - 94774192813
ஜெகநாதன் - 0016478752940

(48279) (12.6.3)

தகவல்: குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## கனகரத்தினம் இராஜகோபால்

(ஓய்வுபெற்ற நகராட்சி துணை மதிப்பீட்டாளர் - கொழும்பு மாநகரசபை)

யாழ்.அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் இராஜகோபால் 18.05.2014 ஞாயிற்றுக்கிழமை சிவபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் (கும்பளாவளை) - மீனாட்சி தம்பதியரின் அருமைப் புதல்வரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் - தவமணி (யாழ்/2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, நீராவியடி) தம்பதியரின் அன்பு மருமகனும், சிவகுமாரியின் (ஓய்வுபெற்ற சித்திர ஆசிரியை, யாழ்/உரும்பிராய் இந்துக் கல்லூரி) அன்புக் கணவரும், கர்ஜினியின் அன்புத் தந்தையும், இராஜேஸ்வரி, இராஜேந்திரம், இராஜரட்ணம், இராஜலட்சுமி, இராமச் சந்திரன், இரட்னேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும், இந்திரன், சிவசுப்பிரமணியம், சத்தியதேவி, வாசுகி, சுதர்சன், மடோனா, திருமதி.அப்பாத்துரை, சந்திரகாந்தன், தெய்வேந்திரகுமாரன், காலஞ்சென்ற மகேந்திரகுமாரன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (22.05.2014) வியாழக்கிழமை காலை.9.00 மணி தொடக்கம் பி.ப.ஒருமணிவரை கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 25.05.2014 ஞாயிற்றுக் கிழமை காலை.08.00 மணி தொடக்கம் கிரியைகள் நடைபெற்று, பூதவுடல் மு.ப.11.30 மணியளவில் தகனக்கிரியைக்காக கல்கிசை பொதுமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


பெரேரா ஒழுங்கை,
கொழும்பு - 06.

(சி14346) (12.6.3)

தகவல்: குடும்பத்தினர்.

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 1937 | 2013 |
| 12 | 06 |
| 06 | 01 |



திதி 21.05.2014

## அமரர் V. R வடிவேற்கரசன்

(பிரபல வர்த்தகரும்,முன்னாள் ஸ்ரீலங்கா ரயர் அசோசியேசன்ஸ் தலைவரும், யாழ் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் முன்னாள் தலைவரும், கிரீன்லேன்ஸ் ஹோட்டல் முன்னாள் தலைவர் / நிர்வாகப்பணிப்பாளரும், ஸ்ரீ பிரதர்ஸ், வி.ஆர்.வி. டிரவல்ஸ்,வி.ஆர்.வடிவேற்கரசன் நிறுவனங்களின் முன்னாள் தலைவரும்)

பாசத்தில் தந்தையாகி பரிவினிலே தாயுமாகி
நேசத்தில் குழந்தையாகியெம் நெஞ்சமெல்லாம் நிறைந்தவரே
பார் வியக்கவோர் நல்வாழ்வை சீர் சிறக்க வாழ்ந்திருந்து
ஓர் நொடியில் இவ்வுலகைவிட்டே ஓடிப்போனதென்ன?

கூட்டத்தில் தலைவனாகி கூடிநின்றால் நண்பனாகி
நாட்டம் கொண்ட கொள்கைக்கு நற்பெரும் தொண்டனாகி
மருந்துக்கு உணவென்ற மாற்றங்கள் புறந்தள்ளி
விருந்துக்கு விளக்கமாகி எம்மை வருந்தவிட்டுப் போனதெங்கே?

சினம் வந்தபோதும் பிறர் மனம்நொந்து போனதில்லை
தனம் கொண்டு வாழ்ந்தாலும் பெருங்கனம் கொண்டு வாழ்ந்ததில்லை
சிரம் போக நேர்ந்தாலும் அறம் காக்கத் தவறவில்லை – சிலர்
தரம் தாழ்ந்து போனாலுமவர் கரம் கோர்க்கத் தயங்கவில்லை

ஆண்டொன்று போனாலும் அழுது முடியவில்லை – நீங்கள்
மீண்டிங்கு வந்தாலன்றி மகிழ்விக்க யாருமில்லை !
அருள்மிகு சன்னதியான் அழைத்திட்ட இந்நாளில்
அடிபணிந்தோம் அவன் பாதம் உங்கள் ஆத்மா சாந்திபெற !!!

25, 27 ஆவது ஒழுங்கை,கொழும்பு-03 (C14345)(5.6.3) குடும்பத்தினர்


## மீண்டும் போர்க்களம்

- சாயம் பூசிய செங்கொடிகள்
- மீசைக்கார பாடகி
- ஆறாத வலிகள்

....... நல்லூர் ஆலயத்தை அண்மித்த போது சிவில் உடையிலும் சீருடையிலும் இராணுவத்தின் வாசனையை ஒவ்வொருவரும் உணரமுடிந்தது. சிலவேளைகளில் முள்ளிவாய்க்கால் தினத்தில் நல்லூர்க்கந்தன் இலங்கை இராணுவத்தின் மீது போர் தொடுக்கப்போகின்றார் என்று யாரும் தவறான தகவலைக் கொடுத்திருப்பார்களோ தெரியவில்லை. தாக்குதலுக்குத் தயாராக துப்பாக்கி விசையில் விரலை வைத்தபடி படைத்தரப்பு எல்லோரையும் சந்தேகக் கண் கொண்டு பார்த்துக்கொண்டிருந்தது. அவர்களின் பார்வைபட்டவர்களின் அடிவயிறு இனம்புரியாத பயத்தால் கலங்கியது. எதற்கு வீண் வம்பு என்ற அச்சத்தில் பலர் அன்றைக்கு..........

விற்பனையில்...



# ஐந்தாவது பிறந்ததின வாழ்த்து



21.05.2014 சிரஞ்ஜீவி

## ச.தேஜோவதனசர்மா

நயினை ஸ்ரீநாகபூஷணி,
சுதுமலை ஸ்ரீ புவனேஸ்வரி
அம்பிகையின் அருளினால்
இன்று (21.05.2014) புதன்கிழமை
ஐந்தாவது பிறந்ததின விழாவைக் கொண்டாடும்
சிவஸ்ரீ.ச.சர்வேஸ்வேரக் குருக்கள்
ஸ்ரீமதி ச.காதம்பரி தம்பதிகளின்
அன்புப் புத்திரன்
5 சிரஞ்ஜீவி ச.தேஜோவதனசர்மா
சகல செல்வங்களும் பெற்று, சிறந்த உயர்கல்வி பெற்று சீரும் சிறப்புமாக
நீடூழி வாழ வேண்டுமென மனதார வாழ்த்தி
எமது குலதெய்வ நாயகிகளை வேண்டி நிற்கின்றோம்.

திருவருளும் குருவருளும் கிடைப்பதாக வாழ்த்துவோர்:
தாத்தா, பாட்டி
சிவஸ்ரீ.ச.மஹேஸ்வரக்குருக்கள்
ஸ்ரீமதி ம.சீதாலக்ஷ்மி அம்மா தம்பதிகள்
மாமன்மார், மாமிமார்
பிரம்மஸ்ரீ.ம.நதிசுதசர்மா
ஸ்ரீமதி.ந.ஜெயந்தகலா தம்பதிகள்
கலாநிதி ம.பாலகைலாசநாதசர்மா
ஸ்ரீமதி.பா.மஹாலக்ஷ்மி தம்பதிகள்
மச்சாள்மார்
ந.மனஸ்வினி, ந.நிஷேலிதா
ஸ்ரீபுவனேஸ்வரி அம்பாள் கோயிலடி, சுதுமலை, மானிப்பாய்.
021 225 5641

Wish you a Happy Birthday

(7.53)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
அப்பாச்சாமி
மகாலச்சுமி
(இல்லம்மா) உடுப்பிட்டி
திதி : அட்டமி



ஆண்டு ஒன்று ஆனது அம்மா
உங்கள் முகம் பார்த்து
எந்நேரமும் உங்கள் நினைவு
நித்தம் நித்தம் கவலையுடன்
வாழும் பிள்ளைகள் மீண்டும்
பிறப்புடன் வருவீர்கள் என்று
எதிர்பார்க்கின்றோம்.

துவாலிவிதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி. (C/14043)(10)
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# கஞ்சாவுடன் பெண் கைது

கொழும்பு, மே 21
கஞ்சாவை உடலில் மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டில் கடந்த ஞாயிற்றுக்கிழமை பெண் ஒருவரை சீனன்குடா பொலிஸார் கைது செய்துள்ளனர். பொதுமக்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் மோப்ப நாயின் உதவியுடன் அந்தப் பெண்ணை தாம் கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர். அவரிடமிருந்து 3360 மில்லி கிராம் கஞ்சாவை கைப்பற்றியுள்ளதாகவும், கைதானவர் மாவட்ட நீதிமன்றில் கடந்த திங்கட்கிழமை முற்படுத்தப்பட்டபோது அவருக்கு 5000 ரூபா தண்டம் விதிக்கப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-10)

## விற்பனைக்கு

Pure German doberman breed
நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
021 221 7412 / 077 362 1136
(48233) (10) யாழ் நகரில்

## Chemisity Personal Classes

Therory (Organic, inorganic, physical and) 20 வருட கடந்தகால வினாக்கள் Tamil/ English medium வீடு வந்து ஆசிரியரால் B.Sc (Cey) M.Sc (Cey) Chemistry கற்பிக்கப்படும்.
தொடர்பு: 077 6038913

## காணி விற்பனை

பண்டத்தரிப்பு சித்தங்கேணி பிரதான வீதியில் இந்துக் கல்லூரிக்கு எதிரே 4 ½ பரப்புக் காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: 021 206 0920
(48285) (10)

## விற்பனைக்கு

ஐஸ்கிறீம் உற்பத்தி செய்யும் கொம்பிரசர், பார்த்தும், ஐஸ்கிறீம் வாகனம் மூன்று, இரண்டு வாகனம் பேக்கரி சிற்றுண்டி விற்பனைக்கு ஏற்றவாறு மாற்றக்கூடியது உடன் விற்பனைக்கு.
077 293 3915
(48289) (10)

## விநியோகஸ்தர் தேவை

20-30 வயதுக்குட்பட்ட துடிப்பான இளைஞர்கள் வாகன சாரதி அனுமதிப் பத்திரத்தை உடையவர்கள் உடனடியாக தேவை. தகுதி உடையவர்கள் கீழ்காணும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
தொடர்புகளுக்கு: 021 224 0514
(48287) (10)

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னம்மா பொன்னையா



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னம்மா பொன்னையா 20.05.2014 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி பொன்னையாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, பார்வதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற உமாமகேசன், சத்தியலட்சுமி, சரோஜினி, உமாதேவன் (சுவிஸ்), தில்லை நாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், கமலாதேவி, தர்மலிங்கம், சிவேஸ்வரன், அமிர்தராணி, சந்திரா ஆகியோரின் அன்பு மாமியும், சுரேஸ்-மீரா (சுவிஸ்), வைரவநாதன்-சுரனுதா (ஜேர்மன்), ரமேஸ், சதீஸ் (பிரான்ஸ்), ரமணி, சேயோன்-தாட்சாயினி, ஜகதீசன்-குணாளினி (சுவிஸ்), ராஜ்குமான் குணவதனி (கனடா), குணபரன்-கோவிகா, துஸயந்தன்-பானு, சுதர்சன்-நிரோஜினி, சிறிராம் சோபிதா, சுபா, திலிபன், துர்க்கா, குணாளன், (லண்டன்), விஜிதா ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.2014) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
இணுவில் கிழக்கு, வங்கியடி. (48286) (10) குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கிறிஸ்ரினம்மா சின்னராசா

(அக்கராயன்குளம், கிளிநொச்சி)




நாரந்தனையைப் பிறப்பிடமாகவும் அக்கராயனை வசிப்பிடமாகவும் கொண்ட கிறிஸ்ரினம்மா சின்னராசா 18.05.2014 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து சின்னராசாவின் அன்பு மனைவியும் சி. ஜெபநேசன் (கந்தபுரம்), ஜெ.மேரி சசிலா (அக்கராயன்), ற.மரியசுகிளா (ஜேர்மன்), எ. நேசபபிளா (அக்கராயன்), ஜெ.சகாயரூபிளா (அக்கராயன்), ச. தேவறஜிலா (அக்கராயன்), ர. நேசநந்தினி (நிர்வாக அலுவலர், கியூடெக் - கரித்தாஸ் வன்னி), சி. இன்பநேசன் (புதுக்குடியிருப்பு) ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.05.2014) புதன்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் நல்லடக்க ஆராதனைக்காக அவரது இல்லத்திலிருந்து புனித அந்தோனியார் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் கந்தபுரம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C/14040) (10) தகவல்: பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்



## ஆழ்வாப்பிள்ளை சுப்பிரமணியம்

(ஓய்வுபெற்ற அதிபர், யா/சிவகுருவித்தியாசாலை வல்வெட்டித்துறை)

நாவலடி வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும் ஊரிக்காடு வல்வெட்டித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட ஆழ்வாப்பிள்ளை சுப்பிரமணியம் (ஓய்வுபெற்ற அதிபர், யா/சிவகுரு வித்தியாசாலை வல்வெட்டித்துறை) 18.05.2014 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆழ்வாப்பிள்ளை-பொன்னம்மா தம்பதியரின் மூத்த மகனும், வள்ளியம்மா, தர்மலிங்கம் மற்றும் காலஞ்சென்றவர்களான பத்மேஸ்வரி, வேலுப்பிள்ளை ஆகியோரின் அருமைச் சகோதரனும், காலஞ்சென்ற இராசம்மாவின் அன்புக் கணவரும், இராசகுமார் (சுவிஸ்), நிர்மலா, ஸ்ரீ ரஞ்சினி (நோர்வே), மோகன் (கனடா), பிரபாகரன் (கனடா), ராஜினி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருப்பதி (சுவிஸ்), உதயரூபன் (அதிபர், யா/கெருடாவில் இ.த.க பாடசாலை), ஜெயரூபன், (நோர்வே) சிவதர்சினி (கனடா), புஸ்பரஞ்சினி (கனடா), திருச்செந்தூரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும், கௌசிகன் (சுவிஸ்), தர்ணிகா (சுவிஸ்), லதுஷ்ஷோபன் (யா/ஹாட்லிக் கல்லூரி), நம்ரிதா (யா/உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), காருண்யா (நோர்வே), காவ்யா (நோர்வே), கிஷான் (கனடா), மோனிஷன் (கனடா), கேசிகா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.05.2014) வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தொண்டமானாறு மயிலியதனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஊரிக்காடு, வல்வெட்டித்துறை,
021 226 5180, 077 8010212
(48291) (10)

தகவல்:
குடும்பத்தினர்.

# புலிகளை நினைவுகூர்ந்தோர் மீது கடும் சட்ட நடவடிக்கை வேண்டும்

## தேசிய சுதந்திர முன்னணி வலியுறுத்துகின்றது

கொழும்பு, மே 21
புலிப் பயங்கரவாதிகளை நினைவு கூர்ந்து நிகழ்வுகளை நடத்திய நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட நபர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது தேசிய சுதந்திர முன்னணி.
இதுகுறித்து அந்தக் கட்சி மேலும் கூறியுள்ளதாவது,
"கடந்த 18ஆம் திகதி மன்னார், முள்ளிவாய்க்கால், வவுனியா, யாழ்ப்பாணம் உள்ளிட்ட பகுதிகளில் நினைவுகூரல் நிகழ்வுகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஏற்பாடு செய்திருந்தது. அதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐவர் மற்றும் வடக்கு மாகாண சபையின் உறுப்பினர்கள் எனப் பலரும் கலந்து கொண்டுள்ளனர்.
இலங்கை அரசியல் யாப்பை மீறிப் பிரிவினைவாதத்தை வளர்க்கும் செயற்பாடுகளில் இவர்கள் ஈடுபடுவதுடன், இரகசிய ஆயுதக் குழுச் செயற்பாடுகளிலும் ஈடுபடுகின்றனர். இவர்கள் மீது கடும் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்"- என்று தெரிவித்துள்ளது. (ற)

# ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க. வேட்பாளர்?

கொழும்பு, மே 21
எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பாக வேட்பாளர் ஒருவரைப் போட்டியிடச் செய்வது குறித்து கவனம் செலுத்தப் படுகின்றது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.
மாதுலுவே சோபித தேரர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட மாட்டார் என எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க நேற்று ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்துள்ள நிலையிலே இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.
நேற்று ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க,
"மாதுலுவே சோபித தேரர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட மாட்டார். அரசுக்கு எதிராக நாடு தழுவிய ரீதியில் பெரியளவிலான போராட்டங்கள் முன்னெடுக்கப்பட உள்ளன. அரசு கசினோ சூதாட்ட மத்திய நிலையங்களை உருவாக்க முயல்கின்றது. தற்போது நாட்டில் ஐந்து கசினோ சூதாட்ட மையங்கள் இயங்கி வருகின்றன. இந்த நிலையங்களை ஒரே நிலையத்திற்கு மாற்றவும் நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றன. டி.ஆர். விஜேவர்தன மாவத்தையில் அமைக்கப்பட உள்ள விடுதிக்கு இந்த கசினோ சூதாட்ட மையங்கள் இடம் நகர்த்தப்பட உள்ளன"- என்று தெரிவித்திருந்தார்.
இந்தநிலையிலேயே ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பாக வேட்பாளரை நியமிக்கும் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன என்று தகவல்கள் வெளியாகியுள்ளன. (ற)

# நுவரெலியாவில் 4 சிறுவர்கள் மாயம்

கொழும்பு, மே 21
நுவரெலியா, வெஸ்டடோ தோட்டத்தைச் சேர்ந்த நான்கு சிறுவர்களைக் காண வில்லை என நுவரெலியா சிறு வர் குற்றத் தடுப்புப் பிரிவில் பெற்றோர்களால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று நுவரெலியா பொலிஸார் தெரி வித்துள்ளனர்.
குறித்த நான்கு சிறுவர்களும் நேற்றுமுன்தினம் வீட்டில் இருந்து காட்டுப் பகுதிக்கு சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது. இவர்கள் அந்தப் பகுதிக்கு செல்வதற்கு முன்பு பிஸ்கட் பொதிகள், குளிர்பானம் போன்றவற்றை கொள்வனவு செய்துள்ளனர்.
காணமல்போன நான்கு சிறுவர்களும் பஸ்ஸில் ஏறி வேறு எங்காவது சென்றி ருப்பர்களா என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது. ஆயினும் இதுவரை எந்த ஒரு தகவலும் கிடைக்கவில்லை என்று தெரியவருகின்றது.
இது தொடர்பில் நுவரெலியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பிரதேச செயலகங்கள் ஊடாக யாழ்.வணிகர்களின் உதவிகள்

யாழ்ப்பாணம், மே.21
வாழ்வாதார உதவிகள் கோரி வருவோருக்கு, யாழ்ப்பாண வர்த்தகர்களின் நிதிப் பங்களிப்புடன் அந்தந்தப் பிரதேச செயலகங்கள் ஊடாக உதவித் திட்டங்களை வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளோம் - என்று தெரிவித்துள்ளார் யாழ். வணிகர் கழகத் தலைவர் இ.ஜெயசேகரம்.
யாழ்ப்பாண வர்த்தகர் வி.வடிவேல்கரசனின் நிதிப் பங்களிப்புடன் வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு நேற்று யாழ். வணிகர் கழகத்தில் நடைபெற்றது. அதன்போது கருத்துத் தெரிவிக்கும்போதே கழகத் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,
"யாழ்ப்பாண வர்த்தகர்கள் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு போர்க்காலத்திலும் அதன் பின்னர் இயன்றளவு வாழ்வாதார உதவிகளை மக்களுக்காக வழங்கியுள்ளனர். யாழ்ப்பாண வணிகர்கள் கழகம் கடந்த காலங்களில் செய்து வரும் வாழ்வாதாரத் திட்ட உதவிகளைப் பார்த்து, பலரும் உதவிகள் கோரி எம்மிடம் விண்ணப்பித்துள்ளனர். யாழ்ப்பாண வர்த்தகர்களும் உ த வி த் தி ட் ட ங் க ளை வழங்குவதற்கு நிதிப்பங்களிப்பை வழங்க முன்வந்துள்ளனர்.
இந்த உதவி பயனாளிகளுக்கு பயனுடையதாக அமைய வேண்டும் என்ற காரணத்தால் எதிர்காலத்தில் வழங்கப் படுகின்ற உதவிகள் பிரதேச செயலகங்கள் ஊடாக உரிய பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான வாழ்வாதார உதவிகளை வழங்கவுள்ளோம்.
யாழ்ப்பாண வணிகர் கழகம் கடந்த வருடம் தனது செயற்திட்டத்தில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பாடசாலையில் இருந்து இடைவிலகிய மாணவர்களுக்கு கற்றலுக்கு தேவையான உபகரணங்களை வழங்கி மீண்டும் அவர்களை பாடசாலைகளில் இணைத்துள்ளது.
அதனால் யாழ்.மாவட்டத்தில் பாடசாலையில் இருந்து இடைவிலகி இருக்கும் மாணவர்களின் தொகை வீழ்ச்சியடைந்துள்ளது. இனிவரும் காலங்களிலும் உதவிகளை வழங்க வணிகர் கழகம் தயாராகவுள்ளது. அத்துடன் இந்த ஆண்டுத் திட்டத்தில் வரத்தகர்களின் அன்பளிப்புடன் வாழ்வாதார திட்ட உதவியாக மாடு வளர்ப்புக்கு முன்வரும் பயனாளிக்கு பிரதேச செயலகங்கள் ஊடாக உரிய பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு மாடுகள் வாங்கிக் கொடுப்பதற்கு திட்டமிட்டுள்ளோம்.
அதனடிப்படையில் முதல் பயனாளியாக கிளிநொச்சியைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட குடும்பத்தில் தாய் தந்தையை இழந்த இருமாணவர்களின் கல்விக்கான நிதி உதவியையும், அவர்களுக்கு பாதுகாவலராக உள்ள குடும்பத்தாரின் வாழ்வாதார தொழில் முயற்சிக்காக இரண்டு பசு மாடுகளையும் வரத்தகரின் அன்பளிப்புடன் வழங்கியுள்ளோம்"- என்று தெரிவித்தார்.
இந்த் உதவித்திட்டம் வழங்கும் நிகழ்வில் வணிகர் கழக உறுப்பினர்களும், வர்த்தகர்களும் கலந்து கொண்டிருந்தனர். (ற-14)

# கற்கோவளம் மக்களுடன் சுமந்திரன் கலந்துரையாடல்

## அங்குள்ள பிரச்சினைகள் குறித்துக் கேட்டறிந்தார்



யாழ்ப்பாணம், மே 21
கற்கோவளம் கடற்றொழிலாளர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அந்தப் பகுதி மீனவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன்.
கடந்த வியாழக்கிழமை குறித்த பகுதிக்குச் சென்ற நாடாளுமன்ற உறுப்பினர் தலைமையிலான குழுவினரே அங்குள்ள பிரச்சினைகள் குறித்து ஆராய்ந்தனர்.
அதன்போது, அண்மையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களால் தமது மீன்பிடிப் படகுகள் சேததடைந்துள்ளன என்றும், அவற்றை மீளத் திருத்தி அமைக்கப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அதற்குரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் மக்களிடம் உறுதியளித்தார்.
அதைத் தொடர்ந்து சக்கோட்டை சென்.சேவியர் விளையாட்டுக் கழக உறுப்பினர்களுடனும் நாடாளுமன்ற உறுப்பினரும் அவரது குழுவினரும் கலந்துரையாடினர்.
அதன்போது அந்தப் பகுதியில் விளையாட்டு மைதானம் ஒன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.
இந்தக் குழுவில், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வட மாகாண சபை உறுப்பினர் எஸ். சுகிர்தன் உட்படப் பலர் இணைந்திருந்திருந்தனர். (ற-400)

# மாணவர்களுக்கு மூலிகைக் கஞ்சி

## இன்று ஆரம்பம்

கொழும்பு,மே 21
மாணவர்கள் மத்தியில் போஷாக்கை அதிகரிக்க வைக்கும் நோக்குடன் மூலிகைக் கஞ்சி வழங்கும் திட்டத்தை கல்விச் சேவைகள் அமைச்சு நடை முறைப்படுத்தவுள்ளது.

> உணவுக் கலாசாரத்தைக் கட்டி எழுப்புதல் மூலம் சிறந்த நபரை உருவாக்கும் நோக் கில் இந்தத் திட்டம் நடைமுறைப் படுத்தப்படுகின்றது

அதன் அடிப்படையில் நாளாந் தம் மாணவர்களுக்கு ஒரு கோப்பை மூலிகைக் கஞ்சி வழங் கப்படும். போஷாக்குக் குறைபாட்டுப் பிரச்சினைகளைக் குறைத்தல், மாணவர் வரவை அதிகரித்தல், சிறந்த உணவுப் பழக்க வழக்கங்களையும், சுகாதாரப் பழக்கவழக்கங் களையும் உருவாக்குதல், உணவுக் கலாசாரத்தைக் கட்டி எழுப்புதல் மூலம் சிறந்த நபரை உருவாக்கும் நோக் கில் இந்தத் திட்டம் நடைமுறைக்கு கொண்டுவரப்படவுள்ளது.
இதன் ஆரம்ப நிகழ்வு கல்விச் சேவைகள் அமைச்சர் துமிந்த திசா நாயக்கா தலைமையில் இன்று புதன்கிழமை கல்விச் சேவைகள் அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற


## கண்ணீர் அஞ்சலி



கடந்த (17.05.2014) அன்று சிவபதமடைந்த
எமது சக பணியாளரான
தில்லைநாதன் திருப்பதிநாதன்
அவர்களின் அன்புத் தாயார்
திருமதி தனலெட்சுமி தில்லைநாதன்
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உரிமையாளரும், பணியாளரும்
Tilko Jaffna City Hotel
70/6, K.K.S. Road, Jaffna.

(C/14041) (10)

## கண்ணீர் அஞ்சலி



அமரர் கனகேஸ்வரி இரத்தினம்
எமது லயன்ஸ் கழகத்தின் சிரேஷ்ட உறுப்பினர்
சந்திராதேவி சுபாஸ் சந்திரன்
அவர்களின் தாயாரும்
எமது கழக உறுப்பினர் சுபாஸ்சந்திரன் துஸ்யந்தன் அவர்களின் அம்மம்மாவுமாகிய திருமதி கனகேஸ்வரி இரத்தினம் அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித் துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(48290) லயன்ஸ் கழகம் கோப்பாய்.

## மரண அறிவித்தல்

### முருகுப்பிள்ளை திருமுத்துராசா



வட்டு மேற்கு வட்டுக் கோட்டையை சேர்ந்த முருகுப்பிள்ளை திருமுத்துராசா நேற்று ( 20.05.2014) செவ்வாய்க் கிழமை காலமானார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.
021 2250 864, 0772726436

(48292)

தகவல்:-
மனைவி,
பிள்ளைகள்

# பாதிரியார்களைக் காதலிப்போர் பாப்பரசருக்கு குழுவாகக் கடிதம்

## பிரம்மச்சரிய சட்டக் கட்டுப்பாட்டை மீள் பரிசோதனை செய்யுமாறு கோரி

ரோம், மே 21

றோமன் கத்தோலிக்க பாதிரியார்கள் மீது காதல் வயப்பட்டிருக்கும் பெண்கள், குழுவாகப் பாப்பரசர் பிரான் சிஸுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர். அதில் கத்தோலிக்கத் திருச்சபையின் மதபோதகர்களுக்கான பிரம்மச்சரிய சட்டக் கட்டுப்பாட்டை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இத்தாலி மற்றும் வேறுசில நாடுகளைச் சேர்ந்த 26 பெண்கள், தாம் பாதிரியார்களுடன் காதல் வயப்பட்டவர்கள் என்றும் பாதிரியார்களுடன் இல்லற வாழ்வைத் தொடங்க விரும்புபவர்கள் என்றும் கூறியுள்ளனர். இதே மாதிரியான நிலையில் உள்ள ஏனைய பல பெண்களின் சார்பாகத் தாம் இந்தக் கடிதத்தை எழுதியுள்ளனர் என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தமது வாழ்க்கையை முழுமையாக வாழ முடியாதுள்ளமையின் வலியைப் பற்றியும் அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டுள்ள அவர்கள், அதுபற்றிப் பேசுவதற்காக பாப்பரசரைச் சந்திக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பிரம்மச்சரிய பாரம்பரியத்தை பாப்பரசர் பிரான்ஸிஸ் முன்னர் ஆதரித்து வந்திருக்கிறார். ஆனால் தனது நிலைப்பாடு மாறக்கூடியது என்று 2010 ஆம் ஆண்டில் எழுத்துமூலம் அவர் வெளிப்படுத்தியிருந்தார்.

அதேவேளை, நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் திருமணம் புரிவதற்காக தனது பதவியை துறந்த முன்னாள் ஆயர் ஜெரோ மினோ பொடெஸ்டாவின் விதவை- மனைவியை, அவர் கடந்த நவம்பரில் உயிரிழக்கும் வரை பாப்பரசர் சென்று பார்த்து வந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### நம்பிக்கையில்லா

எதிராக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியினால் கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாப் பிரேரணை மீது நாடாளுமன்றில் இன்று வாக்கெடுப்புநடைபெறவுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியினால் கொண்டு வரப்பட்ட இந்தப் பிரேரணையை ஆதரிப்பதா, எதிர்ப்பதா அல்லது நடுவு நிலைமை வகிப்பதா என்பது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுக் கூட்[illegible] நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரிப்பதென்று முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். (ற-5)

### இந்திய

விஜயகுணவர்தனவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், விசேட துப்பறியும் பிரிவினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை அநுராதபுரம் பகுதியில் தங்கியிருந்த நபர் ஒருவரைக் கைது செய்தனர்.

[illegible]த்த 44 வயதான சந்தேக நபர் இலங்கையில், ஹமாஸ் ஜமால்டீன் என்ற பெயரில் தங்கியிருந்துள்ளார். இந்தியாவில் கேரள மாநிலத்திலிருந்து 1995 ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்துள்ளார். அத்துடன் குறித்த நபர் போலிக் கடவுச்சீட்டுடன் வெளிநாடுகளுக்கும் பல தடவைகள் சென்று வந்துள்ளார். மேலும் கைது செய்யப்பட்ட நபர் தங்கியிருந்த இடத்தை சோதனையிட்ட பொலிஸார் பல்வேறு ஆவணங்களைக் கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட ஆவணங்கள், கைது செய்யப்பட்ட நபர் வழங்கிய வாக்கு மூலங்கள் என்பவற்றின் அடிப்படையில், குறித்த சந்தேகநபர் இந்திய புலனாய்வு முகவர் நிலையத்தின் புலனாய்வு அதிகாரியாக கடமையாற்றியிருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டிருந்தது.

இந்த நிலையில் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை பொலிஸார், அநுராதபுரம் பிரதான நீதிவான் மற்றும் மேலதிக மாவட்ட நீதிபதி யுரேசா டி சில்வா முன்னிலையில் முற்படுத்தினர். இதனையடுத்து எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ற-5)

### விரட்டி

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரியவருவதாவது,

கொக்குவில் மஞ்சவனப் பகுதியில், கே.கே.எஸ் பிர தான வீதியில் மோட்டார் சைக்கிளுடன் நின்ற கும்பலொன்று, ஓட்டோவில் சென்றவர்களைத் துரத்தியது. பிரதான வீதி வழியாக ஓட்டோவை இளைஞர்கள் வேகமாகச் செலுத்திய போதும் பூநாறிமடச் சந்திப் பகுதியில் வைத்து ஓட்டோவை மடக்கியது மோட்டார் சைக்கிளில் துரத்திய கும்பல். ஓட்டோ மீது கல்லெறிந்து ஓட்டோ கண்ணாடியையும் அடித்து நொருக்கியது.

ஓட்டோவை ஓட்டி வந்த இளைஞன் வேகமாக தப்பித்து ஓடினார். மற்றைய இளைஞன் காலில் ஏற்பட்டிருந்த காயம் காரணமாக ஓட முடியாத நிலையில் விரட்டி வந்த கும்பலால் மடக்கப்பட்டு தாக்கப்பட்டார். 6 மோட்டார் சைக்கிளில் விரட்டி வந்த 10 பேர் கொண்ட கும்பலே இந்தத் தாக்குதலை துணிகரமாக நடத்தியது.

ஓட முடியாத இளைஞனை மடக்கித் தாக்கியதில் அந்த இளைஞன் பிரதான வீதியிலேயே விழுந்து கத்தினார். அவரது அலறலைப் பொருட்படுத்தாத கும்பல் கொண்டு வந்த பொல்லுகளால் கடுமையாகத் தாக்கியதுடன், கைக் கோடாலியால் அவரது தோள் மூட்டுப் பகுதியில் வெட்டியது. தமது ஆத்திரம் தீர தாக்கிய கும்பல் இரண்டு நிமிடங்களிலேயே அங்கிருந்து மோட்டார் சைக்கிள்களில் பறந்தது.

வீதியில் இரத்த வெள்ளத்தில் கிடந்த இளைஞரை வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு யாரும் முன்வரவில்லை. வீதியால் போய் வரும் வாகனங்களை மறித்த போதும் எந்தவொரு வாகனச் சாரதியும் உதவ முன்வரவில்லை. இரத்தம் வீதியில் தொடர்ந்து போய்க் கொண்டிருந்ததால், இறுதியில் அங்கிருந்த சில இளைஞர்கள், தாக்கப்பட்ட ஓட்டோவிலேயே ஏற்றி வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.

இந்தச் சம்பவத்தில் இராசதுரை தீபன் (திலீப்) என்ற கொக்குவிலைச் சேர்ந்த இளைஞனே படுகாயமடைந்துள்ளார். செந்தீசன் (வயது-24) என்ற இளைஞனே ஓடித் தப் பியவராவார். அவரும் நேற்று இரவு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக கொண்டு சென்று சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தை நேரில் கண்ட அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கையில், இப்படியும் ஒருவரைக் கத்த கத்த வெட்டுவார்களா ? பார்க்கவே பயமாக இருந்ததாகத் தெரிவித்ததுடன், தாம் நேரில் பார்த்துக் கொண்டிருந்த போது தம் மீதும் வெட்ட கோடாலியைக் கொண்டு வர பயந்து ஓடிச் சென்று ஒளித்ததாகவும் தெரிவித்தனர்.

சம்பவம் இடம்பெற்று அரை மணி நேரம் கழித்து அந்த இடத்துக்கு வந்த பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர்.

வாகனத் தகராறு காரணமான பகைமையினாலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்ற போதும், காயமடைந்தவர்களுக்கும், வெட்டியவர்களுக்கும் இடையிலான பழைய பகைமையினால் இந்தச் சம்பவம் இடம்பெற்றதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை, வாள் வெட்டில் படுகாயமடைந்த செந்தீசன் ஆவா குழுவை சேர்ந்தவர்களே தம் மீது தாக்குதலை மேற்கொண்டதாக பொலிசாரிடம் வாய் மூல முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார்.

யாழில் நடைபெற்ற கொலை கொள்ளை வாள் வெட்டு சம்பவங்களுடன் தொடர்புடைய ஆவா குழு என்னும் குழுவை சேர்ந்த 13 பேரினை கடந்த 2ம் மாதம் பொலிசார் கைது செய்து நீதிமன்றில் முற்படுத்தி இருந்தனர் அவர்கள் அனைவரும் தற்போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அவ்வாறு பிணையில், விடுதலையாகியுள்ள அக் குழுவை சேர்ந்தவர்களே தம் மீது தாக்குதல் மேற்கொண்டதாகவும் அக்குழுவை சேர்ந்தவர்களும் தற்போது பிணையில் விடுதலையான இருவரின் பெயரையும் செந்தீசன் தம் மீது தாக்குதல் மேற்கொண்டவர்கள் என பொலிஸாரிடம் வாய் மூல முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். (ற-5-400)

### அச்சுறுத்தும்

ளர்கள் ஆலயத்தின் உள்ளே காணப்பட்டனர் என்றும், என்ன காரணத்துக்காக பூசைகள் நடைபெறுகின்றன என்பது குறித்த விவரங்களை அவர்கள் சேகரித்துக் கொண்டிருந்தனர் என்றும் பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. கும்பாபிஷேகம் முடிவடைந்த பின்னர் அவர்களும் வெளியேறினர். அதன் பின்னர் குறித்த துண்டுப் பிரசுரங்கள் குறித்துத் தெரியவந்தது என்று பல்கலைக்கழகத் தரப்பு தெரிவித்துள்ளது.

இறுதி எச்சரிக்கை என்ற தலைப்பில் தேசம் காக்கும் படை வெளியிட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டிருக்கும் அந்த துண்டுப்பிரசுரத்தில், "யாழ்ப்பா ணப்பல்கலைக்கழகத்தில் பயங்கரவாதத்தைவளர்க்க முற்படுவோர் தண்டிக்கப்படவுள்ளனர். பயங்கரவாதம் தோற்கடிக்கப்பட்ட பின்னர் அந்தப் பயங்கர வாதத்தை யாழ். பல்கலைக்கழகம் ஊடாக வளர்த்தெடுக்க முயற்சி செய்து வருகின்றனர்.

இவ்வாறு முயற்சி செய்யும் தேச விரோத சக்திகளை நாம் இனங்கண்டுள்ளோம். அவர்களில் யாழ். பல்கலைக்கழக பேராசிரியர்கள், பீடாதிபதிகள், மாணவர்கள் ஆகியோர் இனங்காணப்பட்டுள்ளனர். அவர்களுடன் சேர்ந்து சில பத்திரிகையாளர்களும் செயற்பட்டு வருவதாக எமக்குத் தகவல் கிடைத்துள்ளது.

இவர்களுக்கு பலமுறை எச்சரிக்கை கூறியிருந்தும் அவர்கள் திருந்துவதாக இல்லை. தொடர்ந்தும் மாணவர்களுடனும் ஆசிரியர்களுடனும் சேர்ந்து பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இது இவர்களுக்கு இறுதி எச்சரிக்கை ஆகும். இவர்கள் இனியும் திருந்தாவிட்டால் இறுதித் தீர்ப்பு மரணதண்டனையே. சிலருக்கு இறுதி நாளும் குறிக்கப்பட்டுவிட்டது. கடந்த எச்சரிக்கைகளைப் போல் இதனையும் சாதாரணமாகக் கருதிவிடவேண்டாம். உங்களுக்கு இவ்வுலகில் இருந்து விடுதலை நிச்சயம்."- என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் துண்டுப்பிரசுரங்களால் பல்கலைக்கழகத்தின் இயல்புநிலை மாறியுள்ளது என்றும், மாணவர்கள் மத்தியில் அச்சநிலை காணப்படுகின்றது என்றும் கூறப்படுகின்றது. (ற)

### பேராசிரியர்

இராசகுமாரன் விசாரணைக்கு அழைக்கப்பட்டுள்ளார்.

இந்த நிகழ்வை நடத்த வேண்டாம் என்று நேற்றுப் பகலில் ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளை அழைத்த இராணுவம் அறிவுறுத்தியிருந்தது. இதனைத் தொடர்ந்தே பயங்கரவாதத் தடுப்புப் பிரிவுப் பொலிஸாரின் அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

நேற்று மாலையே அழைப்பாணை அனுப்பப்பட்டதால் பேராசிரியர் மிகுந்த சிரமங்களுக்கு உள்ளானார். தனது 10 வயது தாயில்லாப் பிள்ளையைத் தனியே விட்டுவிட்டு உடன் வரமுடியாது என்ற அவரது காரணத்தை ஏற்க பொலிஸ் அதிகாரிகள் மறுத்து விட்டனர். எத்தகைய நிலையாயினும் உடனடியாக வரத்தான் வேண்டும் என்று இரக்கமற்ற வகையில் அவர்கள் பிடிவாதமாகத் தெரிவித்து விட்டனர். (உ-4)

### போர்க்குற்ற

பகத்தின் ஆசியப் பிராந்திய இயக்குநர் பிரட் அடம்ஸ் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இலங்கையிடம் இந்தக் கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அந்த அறிக்கையில், "இலங்கையில் போர் முடிந்து 5 ஆண்டுகள் கடந்த போதும், போரின் போது நடந்த கொடூரங்கள் பற்றி விசாரணை நடத்தி நீதி கொடுக்கும் விடயத்தில் இலங்கை தோல்வியடைந்து விட்டாலும் கூட, ஐ.நா மனித உரிமைகள் சபையில் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தையும் இலங்கை ஏற்க மறுத்து விட்டது. ஆனாலும் அவர்கள் கடைசியாக தீர்மானத்தை ஏற்றுத்தான் ஆக வேண்டும். போரின் போது நடைபெற்ற முழுமையான மீறல்கள் குறித்தும் இந்த விசாரணையினூடாக தீர்வுகள் கிட்டும் என்று சொல்ல முடியாவிட்டாலும், தற்போது இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மனிதஉரிமை மீறல்கள் நிறுத்த முடியும்"- என்று குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் 2009 ஆம் ஆண்டு முடிவுக்கு கொண்டு வரப்பட்ட போரில் பல்வேறு கொடூரங்கள் நடந்தேறியுள்ளன. அது தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்று பாதிக்கப்பட்ட தரப்புக்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைகளுக்கு அமைவாக ஐ.நா மனித உரிமைகள் சபையில் பிரேரணை நிறைவேற்றப்பட்டது.

போரின் போது நடைபெற்ற மனித உரிமை மீறல்கள் உள்ளிட்ட சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பில், ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் விசாரணைகள் நடத்த வேண்டும் என்று ஐ.நா மனித உரிமைகள் சபையில் கடந்த மார்ச் மாதம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது. அந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த வேண்டும் என்று மனிதஉரிமைகள் கண்காணிப்பகம் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றது. (ற-5)

### வெளிநாடு

அழைத்துச் சென்றனர். எனினும் சிறிது நேரத்தின் பின்னர் அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இந்த இருவரும் தங்களிடம் இருந்து சுமார் ஒன்றரைக் கோடி ரூபா பணத்தை மோசடி செய்துள்ளனர் என்று அங்கு கூடியிருந்தவர்கள் குற்றஞ்சாட்டினர். அத்துடன் அவர்களை வாயில் வந்தபடி திட்டித் தீர்த்தனர். பதிலுக்கு அந்த வீட்டில் இருந்த மூதாட்டியும் அவர்களைத் திட்டித் தீர்த்தார். ஒரு கட்டத்தில் அந்த மூதாட்டிக்கும் பணத்தைப் பறிகொடுத்த மூதாட்டி ஒருவருக்கும் இடையில் கைகலப்புக்கூட ஏற்பட்டது.

தங்களை லண்டனுக்கு அனுப்புவதாகத் தலா 16 லட்சம் ரூபா படி வாங்கிவிட்டுப் பின்னர் நடுத்தெருவில் விட்டுவிட்டனர் என்றும் ஏமாந்தவர்கள் குற்றஞ்சாட்டினர்.

"வடக்கு மாகாண சபைத் தேர்தல் காலத்தில் அதில் போட்டியிட்ட முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் கட்சியில் போட்டியிட்ட ஒருவரையும் தம்முடன் அழைத்து வந்த இவர்கள், ஆளுக்கு 16 லட்சம் ரூபா கொடுத்தால் எங்களை லண்டனுக்குக் கொண்டு சென்று விடுவார்கள் என்று கூறினார்கள். அதை நம்பி வீட்டை அடமானம் வைத்தும் நகைகளை விற்றும் பணத்தைக் கொடுத்தோம். அதையும்விட தேர்தலில் தமக்கு வாக்களித்தால் விரைவில் லண்டன் போகலாம் என்றுவேறு சொன்னார் பொன்சேகாவின் கட்சிக்காரர். ஒரு சிலரை மட்டும் அனுப்புவதாக இருந்தால் காலதாமதமாகும் என்பதால் பலரைச் சேர்த்துத் தருமாறு கேட்டனர். அதை நம்பித்தான் சேர்த்து விட்டேன். இரண்டு வருடமாகியும் ஒருவர்கூட லண்டனுக்குப் போகவில்லை. பணத்தையும் திரும்பித் தரவில்லை" என்றார் ஒருவர்.

தொலைபேசி அழைப்பெடுத்தால் தங்களைத் தேடிக் கொண்டிருக்கிறார்கள் என்றும் தம்முடன் பேசுபவர்களையும் தேடி வந்து விசாரிப்பார்கள் என்றும் கூறி மிரட்டி வந்தார்களாம். பொலிஸில் முறையிட்டும் பயனேதும் இல்லை என்பதால் இன்று தாம் அவர்களின் வீடு தேடி வந்திருக்கிறார்கள் என்றும் போராட்டம் நடத்தியவர்கள் தெரிவித்தனர். தமக்கு உடனடியாகத் தீர்வு ஒன்று கிடைக்கவில்லை என்றால் தீக்குளிக்கப் போகிறார்கள் என்றும் சத்தமிட்டனர். எனினும் அப்படி அசம்பாவிதங்கள் எவையும் நடக்கவில்லை.

இந்தக் குற்றச்சாட்டுக்களை அந்த வீட்டில் இருந்த இரு பெண்களும் முற்றாக மறுக்கின்றனர். தாங்கள் அவர்களிடம் இருந்து எந்தப் பணத்தையும் வாங்கவில்லை என்று கூறுகின்றனர். தங்களை அவமானப்படுத்த வேண்டும் என்பதற்காகவே இப்படி அவர்கள் நடந்துகொண்டார்கள் என்றும் தெரிவித்தனர்.

தமக்குப் பாதுகாப்புத் தரும்படி யாழ்ப்பாணம் பொலிஸாரிடம் தாங்கள் கேட்டதன் பேரிலேயே தங்களைப் பொலிஸார் வீட்டில் இருந்து அழைத்துச் சென்றனர் என்றும் மேலும் கூறினர். (உ-21)

### புதுப்பிக்கப்படு

யோகிக்கும் நடவடிக்கைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

சகல கிராம சேவையாளர்களும் ஒவ்வொரு வீடுகளுக்கும் நேரடியாகச் சென்று பி.சி. படிவத்தை விநியோகிக்க வேண்டும்.

குறித்த பி.சி. படிவத்தைப் பூரணப்படுத்தி கிராம சேவையாளரிடம் ஒப்படைப்பதன் ஊடாக வாக்காளராகப் பதிவு செய்து கொள்ள முடியும்.

அடுத்த மாதம் 16 ஆம் திகதியிலிருந்து கிராம சேவையாளர்களிடமிருந்து பூரணப்படுத்தப்பட்ட பி.சி படிவங்கள் தேர்தல்கள் திணைக்களத்தினால் மீளப் பெற்றுக் கொள்ளப்படும். வாக்காளராகப் பதிவு செய்யத் தகுதியான சகல இலங்கைப் பிரஜைகளும் இந்தப் பதிவு நடவடிக்கைகளில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும்"- என்று தெரிவித்தார். (ற-5)

# தெல்லிப்பழை கோட்டம் முதலிடம்

வலி.வடக்கு, மே 21

வலிகாமம் கல்வி வலயத்தின் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் தெல்லிப்பழை கல்விக் கோட்டம் 439 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் தடகள விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றன. இதனைத் தொடர்ந்து நேற்று முன்தினம் திங்கட் கிழமை பிற்பகல் நடைபெற்ற பரிசளிப்பு நிகழ்வில் வடக்கு மாகாண கல்வியமைச்சர் த.குருகுலராசா வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்களை வழங்கினார்.



முதலாம் இடத்தை 439 புள்ளிகளைப் பெற்று தெல்லிப்பழைக் கல்விக் கோட்டமும், இரண்டாம் இடத்தை 415 புள்ளிகளைப் பெற்று சண்டிலிப்பாய் கல்விக்கோட்டமும், மூன்றாம் இடத்தை 276 புள்ளிகளைப் பெற்று சங்கானை கல்விக் கோட்டமும், நான்காம் இடத்தை 183 புள்ளிகளைப் பெற்று உடுவில் கல்விக்கோட்டமும் பெற்றுக் கொண்டன. (த-86)

# இன்றைய ஆட்டங்கள்



யாழ்ப்பாணம், மே 21

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 9 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடரின் ஆட்டங்கள் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று புதன்கிழமை பி.ப.3.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் இமையாணன் மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து செஞ்சுடர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் திக்கம் விளையாட்டுக்கழக அணிய்ய எதிர்த்து சிவகுமாரன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், மே 21

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் அராலி ஏ.ஏல். விளையாட்டுக்கழகம் அராலி ஏ.ஏல். இளைஞர் கழகம் ஆகியவை இணைந்து நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அராலி ஏ.ஏல். விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அராலி ஜேம்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து காக்கைதீவு ஆதவன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (த-23)

* * *

யாழ்ப்பாணம், மே 21

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் அனுமதியுடன் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் மின்னொளியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

இதில் இன்று புதன்கிழமை இடம்பெறும் 'ஏ' பிரிவு அணிகளுக்கு இடையிலான ஆட்டத்தில் 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆனைக்கோட்டை பிரதீப் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது.

இரவு 9 மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி நவஜீவன்ஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது. (த-23)

# எறிபந்துப் போட்டி நாளை ஆரம்பம்



வலி. வடக்கு, மே 21

வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களத்தினால் மாவட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்படும் இரண்டாம் கட்டப் பெரு விளையாட்டுப் போட்டிகள் தொடரில் பெண்களுக்கான எறிபந்துப் போட்டி நாளையும், நாளைமறுதினமும் திகதிகளில் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

போட்டியில் நாளை வியாழக் கிழமை மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

வவுனியா கனகராயன்குளம் - மகா வித்தியாலம் எதிர் முல்லைத்தீவு கோட்டை கட்டிய குளம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.

மன்னார் தூய ஜோசப் வாஸ் மகா வித்தியாலயம் எதிர் வவுனியா பூந்தோட்டம் மகா வித்தியாலயம்.

முல்லைத்தீவு அலம்பில் றோமன் கத்தோலிக்க மகா வித்தியாலயம் எதிர் மன்னார் சென்.சேவியர் பெண்கள் கல்லூரி.

யாழ்ப்பாணம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி எதிர் முல்லைத்தீவு வற்றாப்பளை மகா வித்தியாலயம்.

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி எதிர் முல்லைத்தீவு கோட்டைகட்டிய அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயம் எதிர் யாழ்ப்பாணம் உடுப்பிட்டி பெண்கள் கல்லூரி.

இரண்டாம் சுற்றில் இருந்து வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம் மோதவுள்ளது. (த-86)



யாழ். மாவட்ட பிரதேச இளைஞர் சேவைகள் மன்றங்களின் ஆண்களுக்கு இடையிலான கபடிப் போட்டியில் வெற்றி பெற்ற பருத்தித்துறை பிரதேச இளைஞர் கழக சம்மேளன அணி பயிற்றுநர் மற்றும் இளைஞர் சேவைகள் மன்ற அதிகாரிகளுடன். (த-23)

# காலிறுதி ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகள்

யாழ்ப்பாணம், மே 21

யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் அனுமதியுடன் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்ட ரீதியாக நடத்தும் மின்னொளியிலான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன.

'பி' பிரிவு அணிகளுக்கு இடையிலான காலிறுதியாட் டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு.

முதலாவது காலிறுதியாட்டத்தில் இளவாலை மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் இளவாலை மத்திய விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

2ஆவது காலிறுதியாட்டத்தில் புத்தூர் சோமஸ்கந்த விளையாட்டுக்கழகஅணியைஎதிர்த்து உடுப்பிட்டி சிவகுமரன் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் புத்தூர் சோமஸ்கந்த விளையாட்டுக்கழக அணி 2:1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றுள்ளது.

3ஆவது காலிறுதியாட்டத்தில் மல்லாகம் ஸ்ரீமுருகன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக்கொண்டது.

இதில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. (த-23)

# ஆட்டங்களில் வென்ற அணிகள்

யாழ்ப்பாணம், மே 21

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் 9 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டங்கள் கொற்றாவத்தை சிவானந்தா விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன.

கடந்த சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் இடம்பெற்ற ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரங்கள் வருமாறு:-

சனிக்கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் நியூட்டன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் உடுப்பிட்டி யுத் விளையாட்டுக் கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்ற முதலாவது ஆட்டத்தில் மணற்காடு சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.

இதில் உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

2 ஆவது ஆட்டத்தில் ஸ்ரீ அம்பாள் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கரவைச் சுடர் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இதில் கரவைச் சுடர் விளையாட்டுக் கழக அணி 5:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (த-23)

# அரையிறுதியாட்டங்கள் இன்று

மாங்குளம் மே 21

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான எல்லே போட்டியின் பெண்களின் இறுதியாட்டமும் ஆண்களின் அரையிறுதியாட்டங்களும் இன்று முல்லைத் தீவில் நடைபெறவுள்ளன.

இதேவேளை, முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரி மைதானத்தில் நேற்று நடைபெற்ற பெண்களுக்கான அரையிறுதியாட்டத்தில் யா/மணற்காடு றோ.க. த. பாடசாலையை எதிர்த்து வ/சித்திவிநாயா அணி மோதியது. இதில்மணற்காடு றோ.க.த. பாடசாலை 1:0 என்ற ஓட்டத்தில் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது. அடுத்த அரையிறுதியாட்டத்தில் மு/குமுழமுனை மகா வித்தியாலயத்தை எதிர்த்து வ/பூவரசங்குளம் மகா வித்தியாலய அணி மோதியது. இதில் குமுழமுனை மகாவித்தியாலயம் 5:4 என்ற ஓட்டங்களால் வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து இடம்பெற்ற ஆண்களுக்கான முதலாவது காலிறுதியாட்டத்தில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரி அணி மோதியது. இதில் சாவகச்சேரி இந்துக் கல்லூரிஅணி 7:6 என்ற ஓட்டங்களால் வெற்றி பெற்று அரையிறுதி யாட்டத்திற்குத் தகுதிபெற்றுள்ளது. அடுத்தகாலிறுதியாட்டத்தில் பளை மத்திய கல்லூரி அணியை எதிர்த்து வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலய அணி மோதியது.

இதில் வவுனியா புதுக்குளம் மகா வித்தியாலய அணி 13:1என்ற ஓட்டங்களால் வெற்றி பெற்று அரையிறுதி யாட்டத்திற்குத் தகுதி பெற்றது. அடுத்த காலிறுதியாட்டத்தில் நெல்லியடி மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மன்னார் ரிசாட் பதியுதீன் மகாவித்தியாலய அணிமோதியது. இதில் நெல்லியடி மத்தியகல்லூரி அணி 10:3 என்ற ஓட்டங்கள் அடிப்படையில் வெற்றி பெற்று அரையிறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றது. இறுதியாக இடம் பெற்ற காலிறுதி ஆட்டத் தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி வவுனியா இந்துக் கல்லூரி அணி மோதியது. இதில் ஹாட்லிக் கல்லூரி அணி 8:0 என்ற அடிப்படையில் வெற்றி பெற்று அரையிறு திக்கு தகுதி பெற்றது.

இன்றுநடைபெறவிருக்கும் அரையிறுதியாட்டத்தில் சாவகச்சேரி இந்துக்கல்லூரிஅணியை எதிர்த்து வவுனியா புதுக்குளம் மகாவித்தியாலய அணிமோதவுள்ளதுடன் அடுத்த அரையிறுதியாட்டத்தில் நெல்லியடி மத்தியகல்லூரி அணியை எதிர்த்து ஹாட்லிக் கல்லூரி அணி மோதவுள்ளதாக வடமாகாண உடற் கல்விஉதவிக் கல்விப் பணிப்பாளா சத்திய பாலன் அறிவித்துள்ளார். (த-400)



# பிரேசிலுக்கு தான் உலகக் கிண்ணம்

உலகக்கிண்ண உதைபந்தாட்டத் தொடரில் பிரேசில் அணி தான் கிண்ணத்தை ஆறாவது முறையாக வெல்லும் என இப்ராகிமோவிச் தெரிவித்துள்ளார்.
சுவீடன் உதைபந்தாட்ட அணியின் தலைவராக இப்ராகிமோவிச் உள்ளார். ஆனால் பிரேசிலில் நடக்கும் உலகக் கிண்ணத் தொடருக்கு இந்த அணி தகுதிபெறவில்லை.
உலகக் கிண்ணப் போட்டியில் தகுதி பெறாதது பற்றி இப்ராகிமோவிச் கூறுகையில், சொந்த மண்ணில் களமிறங்கும் பிரேசில் அணிக்கு சம்பியன் பட்டம் வெல்ல அதிக வாய்ப்புள்ளது. இந்த அணி ஆறாவது முறையாக கிண்ணத்தை வென்று வரலாறு படைக்கும்.
ஏனென்றால் பிரேசிலில் நடக்கும் உலகக் கிண்ண தொடரில் பங்கேற்கும் ஐரோப்பிய அணிகளுக்கு, அங்குள்ள வானிலை உட்பட பல சூழ் நிலைகள் கடினமாக இருக்கும். எனவே இதற்கு ஏற்ப தங்களை மாற்றிக் கொள்வது சிரமம். இந்த காரணங்களால் பிரேசில் அணிக்கு வெற்றி வாய்ப்பு அதிகரிக்கும்.
மேலும் இந்த உலகக் கிண்ண தொடரில் பங்கேற்க முடியாமல் போனது எங்களுக்கு மிகுந்த வருத்தம் தான். தகுதிச் சுற்றுப் போட்டிகளில் எங் களால் முடிந்தவரை சிறப்பாகத் தான் போராடினோம்.
ஆனால் கடைசியில் முடியாமல் போய்விட்டது. அடுத்த தொடரில் இன்னும் வலிமையாக மீண்டு வருவோம் என்று கூறியுள்ளார். (த)

# பாக். கிரிக்கெட் சபைக்கு ஸாகா அஷ்ரப் தலைவர்



பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைவராக ஸாகா அஷ்ரப் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.
பிரதமர் நவாஸ் ஷெரீப்பினால் நியமிக்கப்பட்ட நஜம் சேத்தி தலைமையிலான பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் முகாமைத்துவக் குழுவை இஸ்லாமாபாத் மேல் நீதிமன்றம் நீக்கியதுடன் ஸாஸா அஷ்ரப்பைப் புதிய தலைவராக நியமித்துள்ளது.
நஜம் சேத்தியினால் பதவி நீக்கப்பட்ட 25 பேரின் மனுக்களை விசாரித்தலையடுத்தே நீதிமன்றம் இந்தத் தீர்ப்பை அளித்துள்ளது.
பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் தலைமைத்துவம் தொடர்பான நீண்டகால இழுபறிகளுக்கு மத்தியில் ஒரு வருடகாலத்தில் 3 ஆவது தடவையாக ஸாகா அஷ்ரப் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.
நீதிமன்ற தீர்ப்பின்படி நஜம் சேத்தி தலைமையிலான இடைக்கால நிர்வாகக் குழுவின் சகல தீர்மானங்களும் செல்லுபடியற்றதாகியுள்ளன. பாகிஸ்தான் அணியின் தலைமைப் பயிற்றுநராக வக்கார் யூனிஸையும் துடுப்பாட்ட பயிற்றுநராக கிராண்ட் பிளவரையும் நியமித்தமையும் இவற்றில் அடங்கும். (த)

# பெங்களூரில் இறுதிப்போட்டி




இந்திய கிரிக்கெட் சபைச் செயலாளர் சஞ்சய் பட்டேல், மாற்றம் செய்யப் பட்ட படி இறுதிப்போட்டி பெங்களூ ரில் நடைபெறும் என்று தெரிவித் துள்ளார்.
ஐ.பி.எல். 7ஆவது கிரிக்கெட் போட்டி யின் இறுதி ஆட்டம் மும்பையில் ஜூன் முதலாம் திகதி நடைபெறும் என்று முதலில் அறிவிக்கப்பட்டிருந் தது.
ஆனால் மும்பை கிரிக்கெட் சங்க நிர்வாகத்துக்கும், ஐ.பி.எல். நிர் வா கிகளுக்கும் இடையிலான பேச்சில் பிரச்சினை ஏற்பட்டதால் இறுதிப் போட்டி பெங்களூருக்கு திடீரென மாற்றப்பட்டது.
அதன் பின்னர் இந்திய கிரிக்கெட் சபையின் எல்லா நிபந்தனைகளை யும் ஏற்க தயார் என்றும், இறுதிப் போட்டியை மும்பையில் நடத்த வேண்டும் எனவும் மும்பை கிரிக் கெட் சங்கம் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.
ஆனால் இதனை ஏற்க ஐ.பி.எல். நிர்வாகக் குழு மறுத்துவிட்டதால் ஐ.பி.எல் இறுதிப்போட்டி பெங்களூ ரில் நடைபெறும். (த)

# கம்பீருக்கு அபராதம்



ஹைதராபாத் அணிக்கெதிரான ஆட்டத்தில் நடுவரின் முடிவுக்கு அதிருப்தி தெரிவித்த கொல்கத்தா அணி யின் தலைவர் கம்பீருக்கு அபராதம் விதிக்கப் பட்டுள்ளது.
ஐ.பி.எல் தொடரில் ஐதராபாத்தில் கடந்த ஞாயிற்றுக் கிழமை நடந்த ஆட்டத்தில் கொல்கத்தா- ஹைதரா பாத் அணிகள் மோதின.
இதில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 7 இலக்குகள் வித்தியாசத்தில் ஹைதராபாத் சன் ரைசர்ஸ் அணியை வீழ்த்தி 6ஆவது வெற்றியை பெற்றது.
இந்தப் போட்டியில் ஹைதராபாத் அணியின் பந்து வீச்சாளர் ஸ்ரெய்ன் பந்து வீசிய போது கொல்கத்தா அணித் தலைவர் கௌதம் கம்பீர் ஆட்டம் இழந்ததாக நடுவரால் அறிவிக்கப்பட்டது.
ஆனால் ,கம்பீர் நடுவரின் முடிவுக்கு அதிருப்தி தெரிவித்தபடி வெளியேறினார். இது குறித்து விசாரணை நடத்திய போட்டி நடுவர், கம்பீருக்குப் போட்டி கட்டணத்தில் 15 சதவீதத்தை அபராதமாக விதித்துள்ளார். (த)

# எவ். ஏ. கிண்ணத்தை வென்றது ஆர்சனல்




ஹல் சிற்றி கழகத்துக்கு எதிரான, ஆங்கிலேய எவ். ஏ. கிண்ண இறுதி ஆட்டத்தின் மேலதிக நேரத்தின்போது ராம்சே போட்ட கோல், 9 வருடங் களின் பின்னர் ஆர்சனல் கழகத்துக் குச் சம்பியன் பட்டம் ஒன்றைப் பெற்றுக்கொடுத்தது.
வெம்ப்ளி விளையாட்டரங்கில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற இப் போட்டியின் 8ஆவது நிமிடத்தில் 2 கோல்கள் பின்னிலையில் இருந்த ஆர்சனல் கழகம், 17ஆவது, 71ஆவது, 109ஆவது நிமிடங்களில் கோல்க ளைப் போட்டு அபார வெற்றியீட்டியது.
இது ஆர்சனல் கழகம் வென்றெடுத்த 11ஆவது எவ். ஏ. கிண்ண சம்பியன் பட்டமாகும். இதன் மூலம் அதிக தடவைகள் எவ். ஏ. கிண்ணத்தை வென்றெடுத்த கழகம் என்ற சாத னையை மன்செஸ்ரர் யுனைட்டட் கழகத்துடன் ஆர்சனல் கழகம் பகிர்ந்துகொண்டுள்ளது.
இப் போட்டியில் வெற்றி பெற்று சம்பியனாகக் கூடிய அணி என முன்கூட்டியே அனுமானிக்கப்பட்டிருந்த ஆர்சனல் கழகத்துக்கு அதிர்ச்சி காத்திருந்தது.
போட்டி ஆரம்பித்த நான்காவது நிமிடத்தில் கிடைக்கப்பெற்ற மூலை உதையை அடுத்து டொம் ஹட்ல்ஸ்டோன் பரிமாறிய பந்தை ஜேம்ஸ் செஸ்டர் கோலாக்கி ஹல் சிற்றிக்கு உற்சாகத்தை ஏற்படுத்தினார்.
மேலும் நான்கு நிமிடங்கள் கழித்து ஆர்சனல் கோல் எல்லையில் ஏற்பட்ட தடுமாற்றத்தை நன்கு பயன்படுத்திக்கொண்ட கோர்ட்டிஸ் டேவிஸ், கோலிலிருந்து 6 யார் தூரத்திலிருந்து ஓங்கி உதைத்து ஹல்சிற்றி கழகத்தின் இரண்டாவது கோலைப் போட்டு ஆர்சனல் கழகத்தை அதிர்ச்சியில் ஆழ்த்தினார்.
எவ்வாறாயினும் போட்டியின் 17ஆவது நிமிடத்தில் சுமார் 20 யார் தூரத்திலிருந்து கிடைத்த நேரடி உதை மூலம் அலாதியான கோல் ஒன்றை ஆர்சனல் வீரர் சன்டியாகோ கஸோர்லா போட்டார்.
71ஆவது நிமிடத்தில் மூலை உதையின் உதவியுடன் கோலுக்கு மிக அருகாமையிலிருந்தவாறு ஆர்சனல் வீரர் லொரென் கொஸீல்னி கோல் நிலையை 2 : 2 எனச் சமப்படுத்தினார்.
நிர்ணயிக்கப்பட் 90 நிமிட நேரத்தில் கோல் எண்ணிக்கை 2:2 விகிதத்தில் சமமாக இருந்ததால் மேலதிக நேரம் வழங்கப்பட்டது.
போட்டியின் 109ஆவது நிமிடத்தில் ஒலிவியர் கிரூட் பரிமாற்றிய பந்தை ஆரோன் ராம்சே கோலினுள் செலுத்த இறுதியில் அதுவே ஆர்சன்ல் கழகத்தின் எவ். ஏ. கிண்ண வெற்றியைத் தீர்மானிக்கும் கோலாகவும் அமைந்தது. (த)

# பங்களாதேஷ் அணியின் பயிற்றுநராக ஹத்துருசிங்க



இலங்கை கிரிக்கெட் அணியின் தலைமைப் பயிற்றுநராவதற்கு விரும்பு வதாக சில தினங்களுக்கு முன்னர் தெரிவித்த இலங்கை அணியின் முன்னாள் கிரிக்கட் வீரர் சந்திக்க ஹத்துருசிங்க பங்களாதேஷ் அணியின் பயிற்றுநராகின்றார். இதனை முன்னிட்டு நியூ சௌத் வேல்ஸ் பிராந்திய அணியின் உதவித் தலைவர் பதவியைச் சந்திக்க ஹத்துருசிங்க துறந்துள்ளார்.
சர்வதேச கிரிக்கெட் அணி ஒன்றின் பயிற்றுநர் பதவியை அவர் பொறுப்பேற்பது இதுவே முதல் தடவையாகும்.
உலக 20/20 கிரிக்கெட் போட்டிகளின்போது ஷேன் ஜேர்ஜென் செனின் பயிற்றுநர் பதவி குறித்து பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அதிருப்தி கொண்டிருந்தது. இந்நிலையில் பயிற்றுநர் பதவியை ஜேர்ஜென்சென் துறந்தார்.
இந்தியாவுக்கு எதிராக அடுத்த மாதம் கிரிக்கெட் தொடர் நடைபெறவுள்ளதால் பயிற்றுநர் பதவிக்காக ஹத்துருசிங்க உட்பட மற்றும் சில மனுதாரர்களுடன் பங்களாதேஷ் கிரிக்கட் சபை பேச்சு நடத்தி வந்தது. உள்ளூர் கிரிக்கெட் போட்டிகளில் நியூ சௌத் வேல்ஸ், சிட்னி தண்டர் ஆகிய அணிகளின் வெற்றிகரப் பயிற்றுநராக சந்திக்க ஹத்துருசிங்க கடமையாற்றியுள்ளார்.
அவரது பயிற்றுவிப்பின் கீழ் 2012 - 13 கிரிக்கெட் பருவகாலத்தில் ஷெஃவீல்ட் ஷீல்ட் கிண்ணக் கிரிக்கெட் போட்டியில் நியூ சௌத் வேல்ஸ் சம்பியனானது. 2008 க்குப் பின்னர் அவ்வணி வென்ற முதலாவது உள்ளூர் சம்பியன் பட்டம் இதுவாகும்.
சந்திக்க ஹத்துருசிங்கவின் பங்களிப்பை நியூ சௌத் வேல்ஸ் அணியின் பிரதம நிறைவேற்று அதிகாரி அண்ட்றூ ஜோன்ஸ் பாராட்டினார்.
சந்திக்க போன்ற ஆற்றல்மிக்க ஒருவரை இழப்பது எமக்கு கவலை அளிக்கின்றது. எனினும் இது அவருக்குக் கிடைத்த மிகப் பெரிய சந்தர்ப்பமாகும். அத்துடன் அவரிடம் உள்ள ஆற்றல்கள் மற்றும் தராதரம் ஆகியவற்றுக்கு கிடைத்த அங்கீகாரமாகும். அவர் நியூ சௌத் வேல்ஸ் அணிக்காகவும் தண்டர் அணிக்காகவும் அற்புத சேவையை ஆற்றியுள்ளார். அவரது ஆற்றல்களுக்கு உலகளாவிய ரீதியில் உரிய இடம் கிடைக்கும் என நான் நம்புகின்றேன்' என அண்ட்றூ ஜோன்ஸ் மேலும் தெரிவித்தார்.
சந்திக்க ஹத்துருசிங்க, 1991 முதல் 1999 வரையான காலப்பகுதியில் 26 டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் 1274 ஓட்டங்களைப் பெற்றதுடன் 17 இலக்குகளையும் கைப்பற்றியிருந்தார்.
35 சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் 669 ஓட்டங்களைப் பெற்ற அவர், 14 இலக்குகளையும் கைப்பற்றினார். (த)

# மலிங்கவின் இழப்பு அணிக்கு நெருக்கடி



ஐ.பி.எல் தொடரில் மும்பை அணி அடுத்த சுற்றுக்கு செல்ல இன்னும் வாய்ப்பிருப்பதாக அந்த அணியின் அசத்தல் வீரர் மைக் ஹசி கூறியுள்ளார்.
நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் மும்பை ராஜஸ்தான் அணிகள் மோதின. இதில் தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய மைக் ஹசி 56 ஓட்டங்களும், சிம்மோன்ஸ் 62 ஓட்டங்களும் எடுத்தனர்.
இவர்களின் சிறப்பான தொடக்கத்தால் மும்பை அணி 25 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இதன் மூலம் மும்பை 11 ஆட்டத்தில் 4 வெற்றி பெற்று 8 புள்ளிகளுடன் 6ஆவது இடத்தில் இருக்கிறது.
இந்த வெற்றி குறித்து மைக் ஹசி கூறுகையில், மும்பை அணி பிளேஓப் சுற்று வாய்ப்பில் இருந்து இன்னும் வெளி யேறவில்லை. நாங்கள் வாய்ப்பில் நீடித்து கொண்டிருக் கிறோம். மீதமுள்ள 3 ஆட்டங்களிலும் வெல்ல வேண்டும். மேலும் சர்வதேசப் போட்டிக்காகச் சென்றுள்ள மலிங்கவின் இடத்தை நிரப்புவது கடினம். ஆடுகளம் துடுப்பாட்டம் செய்ய கடினமாக இருந்தது. ஆனாலும் நானும், சிம்மோன்ஸும் நல்ல தொடக்கத்தை ஏற்படுத்தினோம் என்று கூறி யுள்ளார். (த)

# தவான், வோர்னர் காட்டினர் அதிரடி ஹைதராபாத்திடம் வீழ்ந்தது பெங்களூர்


டேவிட் வோர்ணர்

டேவிட் வோர்ணர், ஷிகர் தவான் ஆகியோரின் அதிரடியில் பெங்களூர் அணியை 7 இலக்குகளால் தோற்கடித்தது ஹைதராபாத் அணி.

ஏழாவது ஐ.பி.எல். கிரிக்கெட் சுற்றுப் போட்டி இந்தியாவில் இடம்பெற்று வருகின்றது. இதில் நேற்று இடம்பெற்ற 46 ஆவது ஆட்டத்தில் ஹைதராபாத் சன்ரைசர்ஸ் அணியும், பெங்களூர்ரோயல்சலஞ்சர்ஸ்அணியும்மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பெங்களூர் அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது. அதனடிப்படையில் அவ்வணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக பார்த்தீவ் பட்டேலும், கிறிஸ்கெய்லும் களமிறங்கி இருவரும் ஹைதராபாத்தின் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாது திணறினர். புவனேஸ்வகுமார் வீசிய முதலாவது பந்திலேயே 4 ஓட்டங்களுடன் நடையைக் கட்டினார் பட்டேல். அடுத்து இரண்டாவது இலக்குக்காக களமிறங்கிய விராட் ஹோக்லி அடித்தாடினாலும் கெய்ல் மந்தமான ஆட்டத்தை வெளிப்படுத்தி 14 ஓட்டங்களுடன் அரங்கு திரும்பினார்.

அடுத்து ஹோக்லியுடன் இணைந்தார் யுவராஜ் சிங் இருவரும் ஹைதராபாத் பந்து வீச்சாளர்களுக்கு நெருக்கடியைக் கொடுத்து அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய போதும் 12.2 பந்துப்பரிமாற்றங்களில் பெங்களூர் 80 ஓட்டங்கள் பெற்றிருந்த போது யுவராஜ் சிங் 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து களம்புகுந்த டீ - வில்லியர்ஸ் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தி ஓட்டங்களைச் சேர்த்தார். இச் சூழ்நிலையில் 41 பந்துகளில் 4 ஆறு ஓட்டங்கள், 4 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 67 ஓட்டங்கள் பெற்ற ஹோக்லியும் ஆட்டமிழக்க பெங்களூரின் ஓட்ட வேகம் குறைந் தது. இதனால் 20 பந்துப்பரிமாற்றங்களின் நிறைவில் 6 இலக்குகளை இழந்து 160 ஓட்டங்களையே பெங்களூர் அணியால் பெறமுடிந்தது.

பந்துவீச்சில் புவனேஸ்வர குமார் 2 இலக்குகளையும், பர்வேஸ் ரசூல், கரன் சர்மா மற்றும் இர்பான்பதான் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் வீழ்த்தினர். இதனை அடுத்து 161 என்ற வெற்றி இலக்குடன் களமிறங்கிய ஹைதராபாத் அணிக்கு ஷிகர் தவான், டேவிட் வோர்ணர் ஜோடி நல்ல அடித்தளம் இட்டுக் கொடுத்தது. ஆரம்பம் முதல் பெங்களூர் பந்து வீச்சாளர்களை மிரட்டிய இந்த ஜோடி 12.3 பந்துப்பரிமாற்றங்களில் 100 ஓட்டங்களைத் தாண்டிய போது 39 பந்துகளில் 7 நான்கு ஓட்டங்கள், ஒரு ஆறு ஓட்டம் அடங்கலாக 50 ஓட்டங்கள் பெற்று தவான் ஆட்டமிழந்து வெளியேறினார். அவர் வெளியேறிய சில நிமிடங்களில் வோர்ணர் பவிலியன் திரும்பினார். இவர் 46 பந்துகளில் 3 நான்கு ஓட்டங்கள், 4 ஆறு ஓட்டங்கள் அடங்கலாக 59 ஓட்டங்களை விளாசினார். அடுத்து நாமன் ஓஜா 24 ஓட்டங்களுடன் வெளியேறி போது அடுத்து இணைந்த ஆரோன் பிஞ்ச், டெரன் சமி ஆகியோர் மேலதிக இலக்குகள் இழப்பின்றி 19.4 பந்துப்பரிமாற்றங்களில் 161 ஓட்டங்கள் பெற்று அணியை வெற்றி பெறச் செய்தனர். களத்தில் ஆரோன் பிஞ்ச் 11 ஓட்டங்களுடனும், சமி 10 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது இருந்தனர்.

பந்து வீச்சில் வருண் ஆரோன் 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

போட்டியின் ஆட்டநாயகனாக டேவிட் வோர்ணர் தெரிவு செய்யப்பட்டார். (400)

# மண்டியிட்டது சென்னை



ரொபின் உத்தப்பாவின் அதிரடியான அரைச்சதம் கைகொடுக்க சென்னை சுப்பர் கிங்ஸ் அணியை 8 இலக்குகளால் வீழ்த்தியது கொல்கத்தா நைற்றைடர்ஸ் அணி.

ஐ.பி.எல். கிரிக்கெட் தொடரின் நேற்று ஈடன்கார்டன் மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் கொல்கத்தா நைற்றைடர்ஸ்-சென்னை சுப்பர்கிங்ஸ்அணிகள்மோதின. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கொல்கத்தா அணி முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தது.

இதனை அடுத்து முதலில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 4 இலக்குகளை மட்டும் இழந்து 154 ஓட்டங்களைப் பெற்றது.

அவ்வணி சார்பாக அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய சுரேஸ் ரெய்னா 5 ஆறு ஓட்டங்கள், 3 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 65 ஓட்டங்களையும் பிரண்டம் மக்கலம் 28 ஓட்டங்களையும், டியூ பிளசர்ஸ் 23 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்ததோடு அணித்தலைவர் டோனி ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களையும் பெற்றார்.

பந்து வீச்சில் பற் சும்மின்ஸ், சுனில் நரைன் மற்றும் பியூஸ் சௌலா ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர்.

அடுத்து 155 என்ற இலக்குடன் களமிறங்கிய கொல்கத்தா அணி 18 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 2 இலக்குகளை இழந்து 156 ஓட்டங்களைப் பெற்று 8 இலக்குகளால் வெற்றி பெற்றது.

அவ்வணி சார்பாக கௌதம் கம்பீர் 21 ஓட்டங்களையும் ரொபின் உத்தப்பா 67 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழந்ததோடு சொகைப் அல் ஹசன் 46 ஓட்டங்களையும் மனிஸ் பாண்டி 18 ஓட்டங்களையும் பெற்று ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

பந்து வீச்சில் ஈஸ்வர் பாண்டி,ரவீந்திர ஜடேஜா ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக ரொபின் உத்தப்பா தெரிவு செய்யப்பட்டார். (400)


புதிய முறையிலான
தேசிய ஆங்கில டிப்ளோமா




அடிப்படை ஆங்கில அறிவற்றவர்களும் ஆங்கிலத்தை முழுமையாக பேசக் கற்கும் வகையில் ஷாம்சனினால் உருவாக்கப்பட்ட 24 புத்தகங்களைக்கொண்ட இப் பயிற்சியில் இப்போது வயது வேறுபாடின்றி எவரும் இணையமுடியும்!

வீட்டிலிருந்தே 20 புத்தகங்களையும் கற்று ஒவ்வொன்றிலுமுள்ள 200 பயிற்சிகளையும் செய்து எம்மிடம் ஒப்படைத்தல் வேண்டும் பயிற்சிநெறி முடிவில் உங்களாலும் சரளமாக ஆங்கிலம் பேசமுடியும்.

SAAMSON 279,ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர். 021 320 33 13 077 621 4567

## கடந்த கால வினாத்தாள்கள், விடைகளுடன் விற்பனை

தரம்- 5 புலமைப்பரிசில் G.C.E O/L, G.C.E A/L பரீட்சைகளுக்குத் தோற்றும் மாணவர்களுக்கான கடந்த கால வினாவிடைகள் (2013 உட்பட) எதிர்பார்க்கை மாதிரி வினாவிடை, வழிகாட்டி நூல்கள் விலைக்கழிவுடன் விற்பனையாகின்றன.

இடம்:- " யாழ். மத்திய கல்லூரி Romain Hall
காலம்:- 2014 மே 23, 24
நேரம்:- காலை 9 மணி- 5 மணி
அனைவரையும் அன்புடன் வரவேற்கின்றோம்.
தொடர்புகட்கு:- 077 6992917, 021 2222573
ஸ்ரீலங்கா புத்தக சாலை
இல. 234, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம். T.P021 222 2573
(C/14023)

## INFORMATION TECHNOLOGY PARK
Jaffna, Sri Lanka.
Under the purview of the
Ministry of Telecommunication & Information Technology

MPCS Building, 127, K.K.S.Road, Jaffna, SriLanka.
Office : 021 222 3641
Fax No : 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

JUNE BATCH
- Dip.in Microsoft Office
- Dip.in Desktop Publishing
- Dip.in Information Technology
- Dip.in Computer Programming

Online Course
- Dip.in PC Application & Office Management

Languages
- VB.Net
- PHP
- C Sharp
- Java

Workshops
- Internet & e-mail
- Webpage Designing & Development

விண்ணப்பப் படிவங்களை யாழ். பிரதம தபாலகத்திற்கு முன்னால் உள்ள எமது நிறுவனத்தில் இன்று முதல் பெற்றுக் கொள்ளலாம்.

வார இறுதி நாள் வகுப்புக்கள் ஆரம்பம் 21-06-14
வார நாள் வகுப்புக்கள் ஆரம்பம் 20-06-14

CENTRE FOR INFORMATION TECHNOLOGY
-Executive Officer-

## வெளிவந்து விட்டது

கா.பொ.த. சாதரண தர கடந்த கால வினாத் தாள்கள் விஷேட விலைக் கழிவுடன் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

அம்பிகை புத்தக நிலையம்
இல. 246 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
(சத்திர சந்திக்கு அருகில்)
(48282) 077 8875357

## வெளிவந்து விட்டது

G.C.E O/L Past Paper
2013 ஆம் ஆண்டு இணைக்கப்பட்டது.
சகல பாடங்களும்
அஸ்ரன் வெளியீடு-
லோயல் வெளியீடு-
லங்கா வெளியீடு-
சகானியா வெள்ளியீடு-
விசேட விலைக் கழிவு வழங்கப்படும்
பெற்றுக் கொள்ளும் இடம்
அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம்.021 222 9881
(C/14038)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

af பிரெஞ்சு மொழி af Alliance française de Jaffna

கற்பதற்கு (யாழில் 1976 முதல்) FRENCH EMBASSY இன் கீழ் இயங்கும் உலகின் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. 136 நாடுகளில் 1040+ கிளைகள். உயர் தகுதியுடைய ஆசிரியர் குழு. அங்கீகரிக்கப்பட்ட CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS

விரையுங்கள்... வடமாகாணத்தில் ஒரே முகவரி தான்
61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் 021 222 8093

## பணியாளர் தேவை

சாவகச்சேரி வைத்தியசாலைக்கு அருகில் அமைந்துள்ள ஸ்ரார் ஹோட்டலுக்கு றொட்டி வேலை, பிறைட் றைஸ்,கொத்து தயாரிக்க கூடியவர்களும் உணவு பரிமாறக்கூடிய பணியாளர்களும் உடன் தேவை. தகுதியுடையோர் கீழ் வரும் முகவரிக்கு நேரில் வருகை தரவும்.

ஸ்ரார் ஹோட்டல்
வைத்தியசாலை அருகாமை
சாவகச்சேரி.
T.P. 077 6491027, 077 9400963

## தற்போது அமோக விற்பனையில்

ஐரோப்பிய நாடுகளுக்கான செங்கன் விசா வெறும் 14 இலட்சங்களுடன்

100 % சட்ட ரீதியான பயண ஆலோசனை

இத்தாலி, ஜேர்மனி, சுவிஸ், பிரான்ஸ்.... போன்ற நாடுகளுக்கான விசா வெறும் 14 இலட்சங்களுடன்

இன்னும் 7பேருக்கே அரியவாய்ப்பு !
7 நாள்களும் திறந்திருப்போம்

திசைகாட்டி (பிறைவேற்) லிமிற்
175, பருத்தித்துறை வீதி,
ஆனைப்பந்தி யாழ்ப்பாணம்.
021 221 9016, 021 568 9090



## வெளிவந்து விற்பனையாகிறது

O/L past paper - 2013 வரையும்
தனி தனி பாடங்களும், 5 பாடங்கள் சேர்ந்ததும், விற்பனையாகிறது.
* Astan publication
* Loyal publication
* Islamic Publication
* Sagania Publication
(C/14047)

பூபாலசிங்கம் புத்தகசாலை
இல.4, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.021 222 6693

பூபாலசிங்கம் புத்தகசாலை
வேம்படிச் சந்தி யாழ்ப்பாணம்.
021 222 1637

NORTH LEAD Computer & Accessories Wholesaler, Computer Repairing & Services
Computer & Language Classes, Computer Printing & Designing

இலவச கணினி வகுப்புகள் புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன (யாழ் மற்றும் கிளிநொச்சி நகரில்)

Diploma in Microsoft Office, Diploma in Graphic Designing, Diploma in Web Designing, Diploma in Video Production, Certificate in Internet & E-Mail, Certificate in Programming,
பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்கள், அரச, தனியார் ஊழியர்கள் அனைவருக்குமான புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. (Condition Apply)

பரீட்சை முடிவின் பின் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்
ஒரு பிரிவில் 10மாணவர்களே அனுமதிக்கப்படுவர் பதிவுகளுக்கு முந்துங்கள்

No: 328, Stanley Road, Jaffna. (Near to Ariyakulam Junction) Tel: 021-222 4459, 0774192275
Branch: No:12, Kanagapuram Road, Kilinochchi (Near to Barathi Hotel) Tel/Fax: 021-206 0909, 0772533390


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.05.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

மனிதன் எவ்வளவுக்கெவ்வளவு தன்னைச் சுற்றியுள்ள வற்றுக்கு அடிமைப்பட்டிருக்கிறானோ, எவ்வளவுக்கெவ்வளவு தன் ஜம்பத்துக்கு அடிமைப்பட்டிருக்கிறானோ அவ்வளவுக்கவ்வளவு அவன் தன் நெறியை வகைப்படுத்திக் கொண்டவனாகிறான்.
-இங்கர்சால்

# புதன் பொய்கை

A

உதயன் | மே 21 2014 | புதன்கிழமை | பக்கங்கள்: எட்டு


ராஜராஜன்

# உழைப்போம் உயர்வோம்

வாழ்க்கையில் உயர்ந்த நிலைக்குச்செல்லவேண்டுமானால் ஒவ்வொருவரும் கடுமையாக உழைக்க வேண்டும். உழைப்பதற்கு விருப்பமில்லாமல் வீணே சோம்பிக் கிடக்கும் எவரும் வாழ்க்கையில் முன்னேறியதாகச் சரித்திரமேஇல்லை. ஆகவே உழைப்பு என்கின்ற தாரக மந்திரமே எம்மை வாழ்வில் உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்லும்.

இந்தியாவின் புதிய பிரதமராகப் பதவிப் பொறுப்புக்களை ஏற்கவிருக்கும் நரேந்திர மோடிகூட சும்மா இருந்துவிட்டு இந்த உயர்பதவிக்கான தகுதியைப் பெற்றுவிடவில்லை. மிகவும் ஏழ்மையான குடும்பத்தைச் சேர்ந்த அவர் தமது சிறுவயதிலிருந்தே கடுமையாக உழைக்க ஆரம்பித்தார். அவரது உழைப்பின் பயனாகவே இன்று உயர்ந்த நிலையை அடைந்துள்ளார். இன்று எம்மிடையே படித்தவர்களும் சரி, படிக்காதவர்களும் சரி வேலை கிடைக்கவில்லையே எனப் புலம்புகின்றனர். இவர்கள் தமக்குப் பொருத்தமான வேலைகளை மட்டுமே தேடித் திரிவதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளது. வேலை என்பதில் உயர்ந்தது தாழ்ந்தது என ஒன்றுமே இல்லை. நாம் ஈடுபாட்டுடன் உழைக்கும் போது எல்லா வேலையுமே உயர்வானதாகவே காணப்படும். எமது நாட்டிலே சில வேலைகளைப் புரிவதற்கு சிலரே பொருத்தமானவர்களாகக் காணப்படுகின்றனர். ஏனையவர்கள் அந்த வேலைகளில் ஈடுபடுவது தமக்குப் பெருமைக் குறைவென எண்ணுகின்றனர். ஆனால் வெளிநாடுகளில் வசிக்கும் எமது நாட்டைச் சேர்ந்தவர்கள் அங்கு கிடைக்கும் வேலைகள் எல்லாவற்றையும் மன நிறைவுடன் செய்கின்றனர். அதிக பணத்தைச் சம்பாதித்து தமது குடும்பங்களைச் செழிப்புடன் பராமரித்து வருகின்றனர். ஆகவே உழைப்பு என்பதற்கு தொழில் வேறுபாடு எதுவுமில்லை. நாம் முழு ஆர்வத்துடன் எந்தத் தொழிலில் ஈடுபட்டாலும் அதற்குரிய பயன் கிடைத்தே தீரும்.

மேலும், சிலர் கனவு காண்பது போன்று ஒரே நாளிலேயே உயர்ந்த இடத்தை அடைந்துவிட முடியாது. சிறுகச் சிறுக உழைக்கும் பயன்கள் ஒன்று சேரும் போதே உயர்ந்த இடத்தைப் பிடிக்க முடியும். சிலர் பல வருடங்களின் பின்னரே தாம் நினைத்த இலக்கை அடைகின்றனர். இதற்கு மாறாகச் சிலர் குறுகிய காலத்தினுள் அதனை அடைந்து விடுகின்றனர். இதற்கு அவர்களின் கடும் உழைப்பும், வாய்ப்புக்களும் காரணமாக அமைந்து விடுகின்றன. தமது பரம்பரைச் செழிப்பின் உதவியுடன் மேலும் செழிப்படைந்த பலரைக் காண்கின்றோம். இவர்கள் தமது உழைப்பை ஒரு போதுமே கைவிட்டதில்லை. ஏனென்றால் இவர்களின் சோம்பல் தன்மை வீழ்ச்சிக்கே இட்டுச் சென்றுவிடும். மாணவர்கள் சிலரைப் பார்க்கும்போது ஆரம்ப வகுப்புகளில் அவ்வளவாகத் திறமையைக் காட்டியிருக்கமாட்டார்கள். ஆனால் உயர்தர வகுப்புக்களில் கற்கும்போது கடுமையாக உழைத்துப் படிக்க ஆரம்பித்து விடுவார்கள். பரீட்சை முடிவுகள் வரும் போது ஏனையவர்கள் மூக்கில் விரலை வைக்கும் அளவுக்குச் சிறந்த பெறுபேறுகளை இவர்கள் பெற்றிருப்பார்கள். ஆகவே எந்தக் கால கட்டத்திலும் உழைத்து முன்னேற முடியும் என்பதற்கு இதுவொரு சான்றாக உள்ளது. சில நிறுவனங்களை எடுத்துக் கொண்டால் கூட சிலர் குறுகிய காலத்தினுள் உயர்ந்த பதவிக்கு வந்துவிடுவார்கள். சிலர் பல ஆண்டுகளாகவே ஆரம்பத்தில் இருந்த நிலையிலேயே இருப்பார்கள். வேறுசிலர் உயர் பதவியில் இருந்துவிட்டு பதவி இறக்கம் செய்யப்பட்டாலும் கிடைத்த போதும் என்ற மனப்பான்மையுடன் காணப்படுவார்கள். இவர்கள் இரு சாராரையும் ஆராய்ந்து பார்த்தால் உழைப்பின் வேறுபாடு தெளிவாகத் தெரியும். ஆகவே எமது உடல் இயல்புக்கு ஏற்றவகையில் நாம் உழைத்தே ஆக வேண்டும். ஏனென்றால் உழைப்பு இன்றேல் பிழைப்பு இல்லை என்பதை நாம் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

அண்மையில் ஒருவர் ஊக்கமுள்ள உழைப்பின் சிறப்புக்கு ஒரு உதாரணத்தை எடுத்துக் கூறினார். வெளிநாடொன்றிலிருந்து வந்த ஒருவர் பெரியளவில் திராட்சைப் பண்ணையொன்றை ஆரம்பித்தார். இதற்கு நிறையவே அவர் செலவிட்டிருந்தார். ஆனால் போதிய அனுபவமும், எந்த வேளையில் எதைச் செய்ய வேண்டுமென்ற அறிவும் அவரிடம் இருந்திருக்கவில்லை. இதனால் திராட்சைத் தோட்டத்தில் அவரால் அதிகளவில் உழைக்கவும் முடியவில்லை. இதன் பயனாக அவருக்கு அதிக விளைச்சல் கிடைக்கவில்லை. இதனால் மனம் நொந்து போன அவர் தமது தோட்டத்தை வேறு ஒருவரிடம் ஒப்படைத்தார். அந்தத் தோட்டத்தைப் பொறுப்பேற்றவர் உரிய முறைகளைக் கையாண்டு கடுமையாக உழைத்தார். முன் அனுபவமும் அவருக்குக் கைகொடுத்தது. இதன் பயனும் விரைவில் தெரிய ஆரம்பித்தது.

அந்தத் தோட்ட உரிமையாளர் ஒருதடவை அங்கு தற்செயலாகச் சென்று பார்த்தபோது திரட்சியான திராட்சைக் குலைகள் தொங்குவது அவரது கண்களில் தென்பட்டது. அவரது கண்களை அவரால் நம்ப முடியவில்லை. உழைப்பின் பயன் அங்கு துலாம்பரமாகத் தெரிந்தது.

ஆகவே எந்தத் துறையாக இருந்தாலும் அங்கு கடும் உழைப்பு இருந்தாலே முன்னேற்றத்தைக் காண முடியும். ஓரறிவு உள்ள சிறிய உயிர்கள் கூட கடுமையாக உழைப் பதற்குத் தயங்குவதில்லை. சிறிய எறும்புகள் சில வேளைகளில் தம்மிலும் பார்க்க பெரிய அளவான உணவுகளை மிகவும் கஷ்டப்பட்டுத் தமது இருப் பிடங்களுக்கு எடுத்துச் செல்வதைக் காண்கின்றோம். அவை ஒருபோதுமே சோம்பி இருப்பதுமில்லை. ஆகவே மனிதர்கள் இவற்றைப் பார்த்தாவது உழைப்பதற்குக் கற்றுக் கொள்ள வேண்டும்.

சில குடும்பங்கள் கடுமையான வறுமையில் உழன்று வருவதைக் காண்கின்றோம். இதற்கான காரணத்தை அறிந்து பார்க்கும்போது அந்தக் குடும்பங்களின் தலைவர்கள் உழைப்பதற்குச் சோம்பல் உடையவர்களாக விளங்குவது தெரியவரும். அவர்களது சோம்பலும் உழைப்பின்மையும் அந்த முழுக் குடும்பத்தையே அவலத்தினுள் தள்ளிவிட்டுள்ளது. ஆகவே நாம் பொறுப்புணர்ந்து நடக்கும் போதுதான் எமது குடும்பமும் மகிழ்ச்சியுடன் இருக்க முடியும்.

சின்னஞ்சிறிய சிலந்திப் பூச்சியொன்று வலை நெய்வதை நாம் கண்டிருக்கின்றோம். ஒரு முனையிலிருந்து மறுமுனைக்கு அது பல முறை தாவுவதும் வலையை நெய்வதுமாகத் தனது காரியத்தில் கண்ணாகவே இருக்கும். அந்தச் சிலந்தியினால் நெய்யப்படும் வலையில் சிக்கிக் கொள்ளும் சிறு பூச்சிகளே அதற்கு உணவாகின்றன. ஓரறிவு கூட இதற்கு முழுமையாக இருக்குமா என்பது சந்தேகமே. ஆனால் அந்தச் சின்னஞ் சிறிய பூச்சி உழைக்கிறது உழைக்கிறது ஓயாமல் உழைக்கிறது.

ஆகவே நாம் இவற்றை முன் உதாரணமாகக் கொண்டாவது உழைக்க ஆரம்பிப்போம். எமது வாழ்வில் உயர்வதற்கான முதல் படியைத் தாண்டுவோம். உழைப்பு இல்லாதவனுக்கு இவ்வுலகில் இடமில்லை. வாழ்க்கையிலும் முன்னேறுவதற்கான சந்தர்ப்பம் கிடைக்கவே கிடைக்காது. ஆகவே உழைப்போம். உயர்ந்த இடத்தை எட்டுவோம்.



# வொயுனிச் கையெழுத்துப் பிரதியின் மர்மம்

'வொயுனிச்' ஆச்சரியங்களை உள்ளடக்கிய 600 வருட பழைமையான படங்களுடன் கூடிய கையெழுத்து புத்தகம். 240 பக்கங்கள் கொண்ட இதில், உள்ளவைகளை இன்ன தென்றே புரிந்து கொள்ள முடியாத மர்மம் மிக மிக நீண்ட ஆண்டுகளாக இருந்தது (இருந்து வருகிறது !)

பெட்ஃபோர்ட்ஷயர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மொழி யியல் பேராசிரியரால் இப் புத்தகத்தில் உள்ள சில குறிப்புகள் விடுவிக்கப்பட்டது என்று சொல்லலாம். (இன்ன மும் முழு மையாக அறியப்படவில்லை !! ). 2012 இல் பி.பி.சியில் வெளியான செய்தியின் பின்னே புத்தகத்திலுள்ள வற்றை தெரிந்து கொள்ளும் ஆர்வம் ஏற்பட்டதாக அவர் தெரிவித்தார். வொயுனிச் கையெழுத்து புத்தகம் என இது அழைக்கப் பட்டாலும் இதை எழுதியவர் யார் ? இந்த புத்தக எழுத் தாளரின் பெயரை விடுவிக்கவே பல வருடங்கள் ஆகி யிருக்கிறது. இறுதியாக அறியப்படும் புத்தக பரிமாற்றத்தின் படி, இப்புத்தகம் வில்ஃப்ரெட் வொயுனிச் ( Wilfrid Voynich) எனும் புத்தக வியாபாரியால் 1912 இல் விலைக்கு வாங்கப்பட்டது. ஒரு பெரிய டிரங் பெட்டியில் கொண்டு வரப் பட்ட புத்தகங்களில் ஒன்று இந்த புத்தகம், தென் இத்தாலி யில் எழு தப்பட்டிருக்கலாம் என நம்பப்படு கிறது. மேலும், இத்தாலியின் மறு மலர்ச்சி காலத்தைச் சேர்ந்ததாக இது இருக்கும் என்பது ( 1400 ) கார்பன் சோதனையில் உறுதிப்படுத்தப்பட்டது. வொயுனிச் மறைவு வரைக்கும் இப்புத் தகத்தின் எழுத்துக்களும் தகவல்களும் அவரால் தெரிந்து கொள்ள முடியவில்லை என்பது கூடுதல் தகவல். இந்த புத்தகத்தில் அப்படி என்னதான் இரகசியங்கள் இருக்கக்கூடும் ?

நட்சத்திரங்கள், கோள்களைப் பற்றிய தகவல்களும், தாவரங்கள் பூக்கள் பற்றிய விவரங்களும், மனித உடல் கூறு (அனாடமி) சம்பந்தமான தகவல்களும், விண்ணியல், இந்த பிரபஞ்சம், பல்வேறு மூலிகைகள், மருத்துவம், மருந்துகள், ரெசிபிகள் பற்றிய தகவல்கள் இந்தப் புத்தகத்தில் உள்ளன. இப்புத்தகத்தில் இருக்கும் சில விளக்கப்படங்கள் அனு மானதில் இல்லாமல் பார்த்து வரையப்பட்டிருக் கின்றன. உதாரணமாக மைக்ரோ பயாலா ஜிகல் சம்பந்தமான படங்கள் (மைக்ராஸ் கோப் பில் மட்டுமே பார்க்கக் கூடிய இமேஜ்கள்) இந்த புத்தகத்தில் உள்ளன. அப் படியாயின் இப் புத்தகம் எழுதிய உலகப்போர் காலந்தொட்டு இப் புத்தக குறியீடுகளை விடுவிக்க பல ஆண்டுகள் பல்வேறு தரப்பு ஆய்வுகள் மேற் கொள்ளப்பட்டன. இறுதியில் மொழியியல் வல்லுநர் (Stephen Bax) ஸ்டீபன் பக்ஸ் இப்புத்தக மர்மம் துலங்கப்பட்டதாக அறிவித்தார்.

முக்கியமாக அந்தமொழி எழுத்துக்களை தம்மால் படிக்க முடிந்ததாக தெரிவித்தார். இவர் மட்டுமே புத்தக இரகசியத்தை விடுவித்தார் என்று சொல்வதற்கு இல்லை அவருக்கு முன் பல ஆராய்ச்சியாளர்கள் புத்தக இரகசியத்தை விடுவிக்கப் பாடுபட்டனர். க்ளிப் என்று சொல்லக்கூடிய. 1.7 0.000 குறி யீட்டுப் படங்கள் இந்தப்புத்தகத்தில் நிறைந் துள்ளது. (Hieroglyphs) எகிப்திய உருவ (வடிவ) எழுத்துகளைக கொண்டிருந்ததன.

பல தகவல்களை உள்ளடக் கிய ஒரே குறியீடு ( குழு குறி யீடு) என்ற வகை பயன்படுத்தப் பட்டு உள்ளது. உதாரணமாக Centaurea என்ற மலர் வழி Ntairon என்ற பெயரால் ஒரு குறி யீடாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதிலுள்ள மலர்களை பற்றிய விவரங் களே இதை எழுதியவர் உலகின் பல பகுதிகளுக்கும் சென்று இருப்பார் என்பது தெளிவு. ஒரு மலர் என்றால் அதை மேலோட் டமாக மட்டும் அல்லாமல் அதன் குறுக்கு வெட்டு தோற்றம் அதன் உள்ளீட்டின் செல் பகுப்பாய்வு வரை விவ ரங்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். இன்றைக்கு ஒப்புநோக்கி பிரதி எடுக்கப்படும் புத்தகங்களே தப்பும் தவறுகளுமாயிருக்க கையால் எழுதப்பட்ட இந்த புத்தகத்தில் தவறுகள் இல்லை (அடித்தல் திருத்தல் கூட) என்பது ஆச்சரியமானது. இதில் பயன்படுத்தி இருக்கும் வண்ணங்கள் நிறம் மங்காமல் இருப் பது. பெரிய படங்கள் இப்புத்தகத்தில் பல சீரான மடிப்புகளுடன் இணைக்கப்பட்டு காட்சி அளிக்கிறது. இன்னும் இப்புத்தகத்தின் இரகசியங்களை விடுவிக்க பல்வேறு துறை நிபுணர்களின் உதவியும் தேவைப் படுவ தாக குறிப்பிடுகிறார் ஸ்டீபன் பக்ஸ் (Code Remained uncracked !!).

மேலும், சில தகவல்கள் புத்தகத்தை எழுதியவர் (Roger Bacon) ரோஜர் பெகான் காலம் 1214 - 1292 பிரத்தியேகமான மென்மையான ஆட்டு தோல் பேப்பர்போல பயன்படுத்தப் பட்டுள்ளது. 1586 இல் ரோமானிய பேரரசர் ருடால்ஃப் ஹோஹோ இதை ரோஜர் பெகான் இடம் இருந்து 600 ட்யூகேட்ஸ் (சுமார் 2 லட்சம் பவுண்டுகள் அப் போதைய மதிப்பு ? ) கொடுத்து பெற்றுக் கொண்டார். 1912 இல் நியூயோர்க்கைச் சேர்ந்த புத்தக டீலர் வில்ஃப்ரெட் வொயுனிச் கைக்கு வந்தது. அதன் பின் இத்தாலிய புத்தக காப்பகத்தில் மிக பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. 1921 இல் பென்சில்வேனியா பல்கலைக்கழக பேரா சிரியர் இப்புத்தகம் வேற்று மொழியில் இருந்து மொழி பெயர்க்கப் பெற்ற பக் கங்களும் படங்களும் இருப்பதாக கண் டறிந்து சொன்னார். 1978 இல் இப் புத்தகத்தில் இருந்து போட்டோ நகல் வடி வில் The Voynich Manuscript: An Elegant Enigma எனும் பெயரில் Mary D'Imperio என்பவரால் (அல்லது குழுமத்தால்) பிரதி உருவாக்கப் பட்டது.. 2013 இல் மருத்துவர் ரக் (Dr. Gordon Rugg of Keele University) என்பவர் புத்தகம் பற்றிய தனது ஆய்வுகளை வெளியிட்டார்.





> முக்கியமாக அந்தமொழி எழுத்துக்களை தம்மால் படிக்க முடிந்ததாக தெரிவித்தார். இவர் மட்டுமே புத்தக ரகசியத்தை விடுவித்தார் என்று சொல் வதற்கு இல்லை அவருக்கு முன் பல ஆராய்சியாளர்கள் புத்தக ரகசியத்தை விடு விக்கப்பாடுபட்டனர். க்ளிப் என்று சொல்லக்கூடிய. 1.7 0.000 குறியீட்டுப் படங்கள் இந்தப்புத்தகத்தில் நிறைந் துள்ளது. (hieroglyphs) எகிப்திய உருவ (வடிவ) எழுத்து களை கொண்டிருந்ததன.





கால கட் டத்தில் மைக் ராஸ் கோப்புகள் கண்டுபிடிக்கப்பட்டிருந்ததா? கூட்டு நுண்ணோக் கியானது கலிலியோவால் 1625 இல் கண்டுபிடிக்கப்பட்டது. ஏழு நட்சத்திர கூட்டம் Pleiades cluster முதலாம்

---

சில தலைமுறைகள் முன்னர் வரையில், குழந்தைகளுக்குக் கதைகள் ஏராளமாக எளிதாகச் சென்றடைந்தன. தினமும் கதைகள் கேட்பார்கள், சுவையான, சுவாரஸ்யமான கதைகள். விடுமுறை நாள்களின் மாலைகளும் இரவுகளும் பாட்டி சொல்லும் கதைகளால் நிரம்பி இருக்கும். பாட்டியின் வழியே கதை கேட்க அத்தனை ஆர்வமாக இருப்பார்கள் பேரன் பேர்த்திகள். உணவு உண்ணும் பொழுதில் இருந்து ஆரம்பித்து விடும் இந்தக் கூற்று, நிலாவைக்காட்டி தூங்க வைப்பது வரையில் தொடரும். கதை கேட்பது பெரும்பாலும் கூட்டாகவே நிகழும்.

கூட்டுக்குடும்ப வாழ்வின் மிக முக்கியமான அம்சம் பாட்டிமார்கள் வழியே கடத்தப்பட்ட கதைகள்தான். பெரியப்பா பிள்ளைகள், சித்தப்பா மற்றும் மாமன் பிள்ளைகள், பக்கத்துவீட்டுப் பையன்கள் என்று பாட்டி அருகே அமர்ந்து கதைக் கேட்கும் காட்சியே ஒரு கவிதை தான். பெரும்பாலும் நீதிபோதனைக் கதைகள், ஆன்மிகக் கதைகள், கடவுள் பக்தி வளர்க்கும் சின்னக் சின்னக் கதைகள், இரா மாயணம் மகாபாரதக் கதைகள், வீரபராக்கிரமக் கதைகள், பேய்க் கதைகள், நல்லதங்காள் கதை, இவர்கள் வசிக்கும் நிலப் பரப்பில் நிலவும் கதைகள், வரலாறு, நாடோடிக்கதைகள், மேலும் பாட்டிகளின் கற் பனைக்கு ஏற்றவாறு கதைகள் அமையும்.

குழந்தைகளுக்குப் பாட்டிகள் என்றால் கொள் ளைப்பிரியம். தாயிடம் கூட சில சமயம் கண்டிப்புகள் நிகழும். ஆனால் பாட்டிகளிடம் கண்டிப்பு வெளிப் படுவது அபூர்வம். எதையும் மன்னித்து விடுவார்கள், மிகப் பாசமாக இருப்பார்கள், பிடித்த பலகாரங்களைச் செய்துகொடுப்பார்கள். இதனால் பாட்டிகளிடம் எல்லாக் குழந்தைகளுக்கும் நெருக்கம் அதிகமாக இருக்கும். இவர்கள் வழியே கதைக் கேட்பது அவர் களுக்குப் பேரானந் தத்தைக் கொடுத்து இருந்தது. மாறிவிட்ட சமூகச் சூழ்நிலைகளால் கூட்டுக் குடும்பம் சிதைந்தது போலவே குழந்தை களுக்கான கதைகேட்டாலும் சிதைந்து போய்விட்டது. மாற்றத்தை குறை சொன்னால் முன்னேற்றம் இருக்காது. தனிக் குடும்பம் - இந்தச் சூழலில் அவர்களுக்கு கதைகள் எப்படிச் சொல்வது என்று சிந்திக்க வேண்டும்.



# உறவுகளால் காயமடைந்த மனதை சரிசெய்ய சுலபமான வழிகள்!

வலியுடன் வாழ்வது சுலபமல்ல. அன்றாடம் வலியுடன் நாட்களை கடப்பது, நரகத்தில் வாழ்வதை போன்றதாகும். அதனால் உங்கள் வாழ்க்கை சிறப்பாக நடைபோட, உங்கள் துணையால் ஏற்பட்டுள்ள காயங்களை மறந்து விடுங்கள்.



தூங்க செல்லும் போது சண்டையை மறந்து விடுங்கள்
உங்கள் சண்டைகள் மற்றும் தவறான புரிதல்களை தூங்கச் செல்லும் போது மறந்துவிடுங்கள். காலையில் விழிக்கும் போது, பிரச்சினைகளின் மீதான உங்கள் பார்வை தெளிவாகி விடும். அதனால் காயங்களையும் வலிகளையும் தூங் கும் போது மறந்து விடுவதும், ஒரு சிறந்த வழியாகும்.

காலம் பலவற்றையும் ஆற்றும். உடைந்த இதயங்கள் மீண்டு வருவதற்கு சிறிது காலம் தேவைப்படும். அதனால் உங்களுக்கும் உங்கள் துணைக்கும் போதிய நேரத்தை அளித்திடுங்கள். இந்த நேரத்தை ஒன்றாகவோ அல்லது தனித்தனியாகவோ கழிக்கலாம்.

**தவறுகளை மீண்டும் செய்யாதீர்கள்**
உங்கள் துணையை ஒரு குறிப்பிட்ட தவறுக்காக நீங்கள் காயப்படுத்தியிருந்தால், அந்த தவறைமீண்டும் செய்யாதீர்கள். காயங்களை எப்படி ஆற்ற வேண்டும் என்பதை நீங்கள் அறிய வேண்டுமானால், உங்கள் தவறுகளை நீங்கள் மீண்டும் செய்யக்கூடாது.

**மன்னிப்பு கேளுங்கள்**
மன்னிப்பு கேட்பது என்பது சுலபமே. ஆனால் அதை உணர்ந்து கேட்பது தான் கடினம். அதனால் நீங்கள் மனதார உணர்ந்தால் மட்டுமே மன்னிப்பு கேளுங்கள். மன்னிப்பு கேட்கும் போது எந்தவொரு ஈகோவும் இல்லாமல் இருங்கள். மன்னிப்பு கேட்பதால் ஒன்றும் நீங்கள் குறைந்து போய் விட மாட்டீர்கள்.

**மன்னிப்பதற்கு கால தாமதம் எடுத்துக் கொள்ளாதீர்கள்**
ஒருவரை மன்னிப்பதற்கு நீண்ட காலம் எடுத்துக் கொள்ளாதீர்கள். காரணம் அவரை மன்னிக்க நீங்கள் நீண்ட காலம் எடுக்கும் வேளையில், அவரை முழுமையாக வெறுக்க தொடங்கி விடுவீர்கள்.

**சுறுசுறுப்பாக வேலையைப் பாருங்கள்**
உங்கள் மனம் சரியில்லாமல் இருக்கும் நேரத்தில், மனதை நிலைப்படுத்த, சுறுசுறுப்புடன் வேலையைப் பாருங்கள். உறவுகளில் ஏற்பட்டுள்ள காயங்களை சரிசெய்ய, சில நேரங்களில் இதுவும் முக்கியமானதாக உள்ளது.

**அவசரப்படாதீர்கள்**
காயம் ஏற்பட்டு அது ஆறாமல் இருக்கும் நேரத்தில், உடனடியாக அவசரப்பட்டு தவறான முடிவுகளை எடுக்காதீர்கள். இது நிலைமையை இன்னும் மோசமடைய தான் செய்யும். காயங்களை ஆற்ற நீங்கள் மெதுவாக பொறுமையாக தான் செயற்பட வேண்டும்.

**கண்ணியத்தை காத்திடுங்கள்**
என்ன நடந்தாலும் சரி, உங்கள் கண்ணியத்தை காப்பது முக்கியமான ஒன்றாகும். எந்த ஒரு கஷ்டமான சூழ்நிலையிலும் உங்கள் சுயமரியாதையை இழந்து விடாதீர்கள்.

**வலியை கடந்து செல்வோம்**
வலியுடன் வாழ்வது சுலபமல்ல. அன்றாடம் வலியுடன் நாள்களைக் கடப்பது, நரகத்தில் வாழ்வதை போன்ற தாகும். அதனால் உங்கள் வாழ்க்கை சிறப்பாக நடை போட, உங்கள் துணையால் ஏற்பட்டுள்ள காயங்களை மறந்து விடுங்கள்.

**மற்றவர்கள் காயங்களை ஆற்றுவதற்கு முன்பாக உங்கள் காயங்களை ஆற்றுங்கள்**
நீங்களே ஏதோ காரணத்தினால் காயப்பட்டிருந்தால், நீங்கள் எப்படி அடுத்தவர்களின் காயத்தை ஆற்ற முடியும். அதனால் முதலில் உங்கள் காயங்களை நிவர்த்தி செய்யுங்கள். அதன் பின் உங்கள் உறவில் ஏற்பட்டுள்ள காயங்களை சரி செய்யலாம்.

CW

# குறித்த சில நாடுகளில் மட்டும் இணையவேகம் இவ்வளவுதான்


எம்மில் பலர் தகவல் தொழில்நுட்ப சாதனங்களையே பெரிதும் சார்ந்திருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. தெரியாத இடங்கள் மற்றும் வீதிகளைத் தேடுவதற்கும், பலதரப்பட்ட சமூக வலைத்தளங்களில் தங்களை இணைத்துக் கொள்ளவும், தேவையான தகவல்களைத் விரல்நுனியில் தேடவும் இன்றைய தொலைத்தொடர்பு சாதனங்கள் பயன்படுகின்றன. தங்கள் மடிக்கணினி, கைத்தொலைப்பேசி உட்பட பலதரப்பட்ட கெட்ஜெட்டுகள் வழி இணைய வசதியை ஏற்படுத்திக் கொள்ள குறிப்பிட்ட தொலைத்தொடர்பு நிறுவனங்களிடம் மாதந் தோறும் குறிப்பிட்ட தொகையைச் செலுத்த வேண்டியுள்ளது.
ஆனால், இவ்வாறு பணம்கட்டி இணையச் சேவையைப் பெற்றாலும், ஆபத்து அவசர நேரங்களில் பயன்படுத்துவதற்குள் பலரையும் பெரும் அவஸ்தைக்குள்ளாக்கி விடுகிறது இணையம். ஆமை வேகத்தில் லோட் ஆவதற்குள் எம்மில் பலர் கோபத்தின் உச்சத்துக்கே சென்றுவிடுகிறோம்.
பலர் இதனாலேயே மன அழுத்தத்துக்குள்ளாகின்றனர். உண்மையிலேயே எம் நாட்டில் மட்டும் தான் இப்படியா? அல்லது மற்ற நாடுகளில் இணையத்தின் வேகம் எப்படி என்பதே பலரையும் குடைந்து கொண்டிருக்கும் கேள்வி.
எந்தெந்த நாடுகளில் இணையம் எவ்வளவு வேகம் என்ற கணக்கெடுப்பில் ஹொங்காங் முதலிடம் வகிக்கிறது. மற்ற நாடுகளில் என்ன நிலை என்பதை கீழ்க்கண்ட பட்டியலில் காணலாம்:

ஹாங்காங்: 78.3 Mbps
சிங்கப்பூர் : 66.6 Mbps
ஜப்பான்: 41.5 Mbps
தைவான்: 39.3 Mbps
சீனா: 19.5 Mbps
தாய்லாந்து: 18.9 Mbps
வியட்நாம்: 14.2 Mbps
கம்போடியா: 5.9 Mbps
புருணை: 5.51 Mbps
மலேசியா: 5.48 Mbps
மியன்மார்: 5.0 Mbps
லாவோஸ்:4.5 Mbps
இந்தோனேஷியா: 4.3 Mbps
பிலிப்பைன்ஸ்: 3.5 Mbps



# அவலநிலையில் வடகொரிய மக்கள்

வடகொரிய மக்களின் வாழ்க்கை நிலையை எரிக் லாப்ரிக் (ERIC LAFFRGUE) என்ற புகைப்படக்காரர் அந்நாட்டுக்குச் சென்று புகைப்படம் எடுத்துள்ளார்.
இந்த புகைப்படங்களால் வடகொரிய மக்களின் அவலநிலை அம்பலமாகியுள்ளது.
அங்குள்ள மக்களின் ஏழ்மைநிலை, சாப்பாட்டுக்கு படும்பாடு, பஞ்சநிலை, குழந்தை பணியாளர்களின் கஷ்டம், பசியின் கொடுமையைத் தீர்த்துக்கொள்ள புற்களைத் தின்னும் ஏழை மக்கள் போன்ற காட்சிகளை அவர் புகைப்படம் எடுத்துள்ளார்.
இந்த விடயமானது, வடகொரிய சுப்ரீம் லீடர் கிம் ஜாங் அன் (KIM d JONG dUN) அரசுக்குத் தெரியவந்து விடவே இந்த புகைப்படங்கள் எல்லாவற்றையும் அவரிடம் இருந்து வாங்கி படையினர் அழித்துவிட்டனர்.
ஆயினும், எரிக்கின் டிஜிட்டல் கமெராவில் மெமரி கார்டில் இருந்த புகைப்படங்களை படையினர் கவனிக்கவில்லை. அந்த புகைப்படங்களை அவர் தற்போது வெளியிட்டுள்ளார்.
அவரது புகைப்படங்கள் வடகொரிய மக்களின் வாழ்வாதார நிலையை விளக்குகின்றன.
பட்டினியால் வாடும் எலும்பும், தோலுமான மக்கள்.
குழந்தை வேலையாள்கள் புல்லைத் தின்று பசியைப் போக்கிக் கொள்ளும் பரிதாப நிலை. இராணுவ வீரர்கள், சாதாரண கூலியாள்களின் வேலையைச் செய்யும் பரிதாபநிலை.
குழந்தைகள் பள்ளிக்குச் செல்லாமல் கடின வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டிருத்தல், விவசாயம் மற்றும் கடின வேலைகளைச் செய்யும் சிறுவர்களின் பரிதாப நிலை.
தெவோரங்களில் விழுந்து சிதறி கிடக்கும் தானியங்களை சேகரித்து வயிறு வளர்க்கும் பரிதாபநிலை.
போன்ற காட்சிகள் இதில் இடம்பெற்றுள்ளன.








# குழந்தைகள் மனதை அறிவோம்

யதீ எஸ். பாலசுந்தரராஜ்





பொதுவாக வீட்டுக்கு வெளி மனிதர்கள் யாராவது வந்தால் ஓடி ஒளிவது தான் பெரும்பாலான குழந்தைகளின் பழக்கம். இந்நிலையில் வீட்டுக்குவருபவர்களைவாங்கோ என்று அன்புடன் அந்தக் குழந்தை அழைப்பதைப் பார்த்ததும் எனக்கு சந்தோஷமாக இருந்தது. நண்பரிடம் இது பற்றி கேட்டேன். குழந்தைகளுக்கு இது போன்ற சின்னச்சின்ன பழக்கங்களை பழக்கிவைக்க வேண்டும் என்று எனது பெற்றோர்கள் கூறியுள்ளார்கள். அதன்படி, குழந்தைகளை பழக்கி வைத்திருக்கிறேன்' என்றார்.

இதுபோல அனைவரும் குழந்தைகளுக்கு சின்னச்சின்ன நல்ல பழக்கங்களை கற்றுத்தந்தால் நன்றாக இருக்கும். சிறு குழந்தைகள் மனதில் பதியும் நல்ல பழக்கம், தொடர்ந்து அடுத்த தலைமுறைக்கும் செல்லும். ஆனால், சிலர் தங்கள் குழந்தைகளை அருகில் உள்ள கடைக்குச் சென்று ஏதேனும் பொருள் வாங்கிவரச் சொல்வார்கள். குழந்தைகள் மறுத்தால், 'உனக்கு ஒரு இனிப்பு வாங்கிக்கொள்' எனக் கூறுவார்கள். இங்கு குழந்தைகளுக்கு ஓர் எதிர்பார்ப்பு உண்டாகி விடுகிறது. அப்படிக் கூறாமல் "எம் வீட்டுக்கு நீ வாங்கிவராமல் வேறு யார் வாங்கி வருவார்கள்' என்று குழந்தைகளிடம் கூற வேண்டும்.

பல வீடுகளில் குழந்தைகளுக்கு அளவுக்கு அதிகமாகச் செல்லம் கொடுத்து விடுகிறார்கள். அவர்கள் என்ன செய்தாலும் கண்டிப்பதில்லை. இதனால் அக்குழந்தைகள் .வேறு வீட்டிற்கு சென்றால் அங்கும் சேட்டை செய்வதை நிறுத்துவதில்லை. குழந்தைகள் என்றால் சேட்டை செய்யத்தான் செய்யும். ஆனால், அதுவே அளவுக்கு அதிகமாகும் போது தர்மசங்கடமாகி விடுமல்லவா?

பிள்ளைகளுக்குப் புத்தகம் மற்றும் பத்திரிகைகள் படிக்கும் பழக்கத்தை தொடக்கத்திலேயே ஏற்படுத்திவிட வேண்டும். நமது வீட்டுக்கு வரும் தினசரிப் பத்திரிகைகளைக் கொடுத்து, இதனைப் படித்துப் பார் எனக் கூற வேண்டும். இப்படியே தொடர்ந்து செய்தால் பிள்ளைகளுக்கு வாசிக்கும் ஆர்வம் வந்துவிடும்.

பிள்ளைகள் பாடங்களை படிக்கும்போது, பெற்றோர் டி.வி. பார்க்கக் கூடாது. இதனால் குழந்தைகளின் கவனம் சிதறும். எந்த ஒரு பழக்கத்தையும் குழந்தைகளாக இருக்கும்போதே கொண்டு வந்து விட் டால், பிற்காலத்தில் நிச்சயம் உதவும். எனது உறவினர் ஒருவர் வீட்டுக்குச் சென்றிருந்தேன். அங்கிருந்த நான்கு வயது குழந்தை போல்பாயின்ட் பேனாவால், தனது கையில் ஏதோ கிறுக்கியது. அங்கிருந்தவர்கள் குழந்தையை அடிக்கவில்லை, கடிந்து கொள்ளவில்லை. உனது கையில் கத்தரிக்காய்படம்தானே போட்டாய்'ன்றே அந்தக் குழந்தையின் தாய் கேட்டார். அக்குழந்தை சிரித்தபடியே, கையை விரித்துக் காட்டியது. உண்மையில் அது வெறும் கிறுக்கலாக இருந்தது. ஆனால் அந்தத் தாய், இது என்ன படம் என்பது தெரியவில்லை. நீ எது வரைந்தாலும் காகிதத்தில்தான் வரைய வேண்டும்' என அன்போடு கூறினார்கள். இதுபோன்று குழந்தைகள் விடயத்தில் நாம் சற்று மாற்றி யோசித்தால் நல்லது.

ஐந்தாம் வகுப்பு படிக்கும் சிறுவன் ஒருவன் ஓவியம் வரைவதில் ஆர்வமாக இருந்தான். இதனைக் கவனித்த பெற்றோர், அவனுக்கு மேல்நிலைப் பாடசாலையில் ஓவியத்தை தனிப் பாடமாக எடுத்து பயிற்றுவித்தார்கள். இப்போது அவர் ஒரு சிறந்த ஓவியராக உள்ளார். எனவே, குழந்தைகளிடம் உள்ள விளையாட்டுத் திறமை, கல்வித் திறமை மேலும் எதில் ஆர்வம் உள்ளதுஎன கவனித்துபெற்றோர்கள் செயல்பட்டால் குழந்தைகளின் எதிர்காலம் சிறப்பாக அமையும்.

ஒரு நண்பரின் தோட்டத்துக்கு சென்றிருந்தேன். அந்த நண்பர் ஒரு மரத்தைக் காட்டி, இங்கே எல்லா மரங்களும் காய்க்கின்றன. இந்த ஒரு மரம் மட்டும் காய்ப்பதில்லை. எனவே இதனை வெட்டிவிடப் போகிறேன்' என்றார். அந்த நண்பரின் தந்தை அந்த மரத்தைத் தடவிக் கொடுத்தார். அந்த மரத்துடன் அவர் பேசினார். நீ அழகான மரம், பூக்க வேண்டாமா, காய்க்க வேண்டாமா' எனப் பேசி அன்புடன் தடவிக் கொடுத்தார். ஓராண்டு பொறு. இந்த மரம் நிச்சயமாக காய்க்கும்' என்று நம்பிக்கை தெரிவித்தார்.

தந்தை கூறியது போலவே அடுத்த ஆண்டு அந்த மரம் அமோகமாக பூத்தது, காய்த்தது. நண்பருக்கோ வியப்பு.

இதுபோலத்தான் குழந்தைகளும். அவர்கள் மீது நீங்கள் நம்பிக்கை வையுங்கள். தோல்வி வரலாம். அதை அன்புடன் அணுகுங்கள். பேசுங்கள், வெற்றி வார்த்தைகளைப் பயன்படுத்துங்கள். உற்சாகமாக உறவாடுங்கள்.

# கொலம்பஸ் பயணித்த சாந்தா மரியா கப்பல் சிதைவுகள் கண்டுபிடிப்பு?

அமெரிக்கக் கண்டத்தைக் கண்டு பிடித்த கப்பலோட்டி கிறிஸ் தோபர் கொலம்பஸ் பயணித்த சாந்தா மரியா என்ற வரலாற்றுச் சிறப்பு மிக்க பாய்மரக் கப்பலின் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கலாம் என்று உறுதிப்படுத்தப் படாத தகவல்கள் வெளி யாகியுள்ளன.

வடக்கு ஹைட்டியின் கடற்பகுதியில் கப்பல் பாகம் ஒன்று கொலம்பஸ் பயணித்த தலைமைக் கப்பல் சாந்தா மரியா ஆக இருக்கலாம் என்று ஒரு ஆய்வாளர் தெரிவித்துள்ள போதும் இக் கப்பல் பாகம் மேலும் பரிசோதிக்கப்பட்ட பின்னரே சாந்த மரியாவா என நிரூபிக்க முடியும் என்று நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

15 ஆம் நூற்றாண்டில் அதாவது கி.பி 1492 கிறிஸ்துமஸ் தினத்தில் மூழ்கடிக்கப்பட்டதாக வரலாற்றில் கூறப்பட்டிருக்கும் சாந்தா மரியா கப்பலில் ஸ்பெயின் அல்லது போர்த்துக்கல்லில் இருந்து கொண்டு வரப்பட்ட நிலைப்படுத்தும் கற்கல் மற்றும் 15 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது எனக் கருதப் படும் பீரங்கியின் சேதம் ஆகியவை குறித்த கடற் பகுதியில் கிடைக்கப் பெற் றுள்ளன.

தற்போது இதனைக் கண்டுபிடித்த க்லிஃபோர்ட் என்பவர் ஹிஸ்டரி சேன லின் (History) ஆதரவுடன் குறித்த சேதங்கள் கிடைத்த பகுதியைப் பாது காக்க ஹைட்டி அரசை வலியுறுத்தி யுள்ளார். இதேவேளை சுமார் 500 வருடங்களாக மரத்தால் செய்யப்பட்ட இந்தக்கப்பலின் பாகங்கள் சேத மடையாது இருப்பது மிக அரிது என்ற கருத்தும் எழுந்துள்ளது குறிப்பிடத் தக்கது.

31 ஆம் நாள் நினைவஞ்சலி

அருணாசலம் கனகம்மா
(ஓய்வுபெற்ற ஆசிரியை)

மலர்வு
14.08.1937



உதிர்வு
21.04.2014

அன்பின் திருவுருவாய் அமைதியின் உறைவிடமாய்
பண்பின் சிகரமாய் அறிவிலே ஆசானாய்
வாழ்ந்த எம் அன்னையே!
வார்த்தைகள் இல்லையம்மா
இவ்வையகத்தில் உங்களைப் போற்ற
நாள்கள் முப்பத்தொன்று ஆனாலும்
காலங்கள் பல கடந்தாலும் அழியாது
உங்கள் நினைவுகள்.

(48231)(7763)

பாலாவி தெற்கு.

என்றும் உங்கள் நினைவுடன்
குடும்பத்தினர்



எழுதுவது உங்கள் மனதை சற்று அமைதிப்படுத்துவதுடன், உங்கள் மனதில் உள்ள உளைச்சல்கள் மற்றும் உணர்ச்சிகளை வெளியேற்றவும் உதவும்.



# இயற்கையான உறக்கத்துக்கு சில வழிகள்

உறக்கம் மனிதனுக்கு மிகவும் அவசியம். போதிய அளவு உறக்கம் இல்லாதபோது உங்களது இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படுவதுடன் தேவையில்லாத மன அழுத்தங்கள் போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு இது காரணமாக அமையலாம் என்று மருத்துவ ஆய்வு முடிவுகள் தெரிவித்துள்ளன.

ஆழ்ந்த உறக்கமானது உங்களின் ஆரோக்கியமான பழக்கங்களில் ஒன்றாக இருக்க வேண்டும். நல்ல உறக்கம் உடல் மற்றும் மன நிலைகள் உள்ளிட்ட பல பிரச்சினைகளுக்கு நல்ல மருந்தாகப் பயன்படும். சில சமயம் நமக்கு நல்ல உறக்கம் தேவைப்பட்டு உறங்க வேண்டும் என்று நினைத்தாலும், உங்களால் உறங்க இயலாது.

எனவே நல்ல உறக்கம் பெறுவதற்கான சில இயற்கையான வழிகள் கீழே தரப்பட்டுள்ளது.

மெலடோனின் என்ற ஹார்மோன் நமக்கு உறக்கத்தைக் கொடுப்பதுடன் நம் உடம்பில் இயற்கையாகவே சுரப்பதுடன் மாத்திரையாகவும் கிடைக்கிறது. பொதுவாக 3 முதல் 5 மிகி மெலடோனின் ஒரு நாள் இரவு உறக்கத்துக்குப் போதுமானதாக இருக்கும். இது உடலில் இயற்கையாக சுரப்பதை பாதிப்பதால் உறக்கம் வருவதும் தடைப்படுகின்றது.

எனினும் மெலடோனின் மாத்திரைகளை மிகவும் அவசியம் ஏற்படும் நேரங்களில் மட்டும் எடுத்துக் கொள்வது உகந்தது. இந்த இயற்கை கூட்டு மருந்து ஜெட்லாக் எனப்படும் விமானக் களைப்பைப் போக்கவும், சத்தம் அதிகமுள்ள அல்லது வசதி குறைவான பஸ் பயணம், விமானப் பயணம் அல்லது வெளியில் தங்குதல் ஆகியவற்றின் போது தூக்கத்தைப் பெற மிகவும் சக்தி வாய்ந்தது.

உடற்பயிற்சி சாதாரண விடயம் என்று நீங்கள் கருதலாம். ஆனால் பலர் உடற்பயிற்சிக்கும் தூக்கத்துக்கும் உள்ள தொடர்பை உணர்வதில்லை. தெளிவாகச் சொன்னால், ஒரு நாளில் உடம்பை நல்ல உழைப்பில் ஈடுபடுத்தினால், மாலையில் சோர்வடைவதுடன் சில தருணங்களில் உறக்கம் வருவதுடன் ஆழ்ந்த உறக்கத்துக்கும் வழி வகுக்கும்.

தொடர்ந்து மேற்கொள்ளும் உடற்பயிற்சி உடல் நலத்தையும், உடல் எடையையும் சரிப்படுத்துவதுடன் இந்த இரண்டும் நம்முடைய தூக்கத்துடனும் தொடர்புடையவை.

படித்தல் மற்றும் எழுதுதல் என்பன தூக்கத்தை இயற்கையாகவே வரவழைப்பதற்கான வழிமுறையாக சொல்லப்படுகின்றது. இதற்கான அறிவியல் பூர்வமான ஆதாரங்கள் எதுவும் இல்லையென்றாலும், பெரும்பாலானோர் உறங்குவதற்கு முன் படிப்பது அல்லது எழுதுவது சற்று இளைப்பாற உதவுவதாகக் கருதுகின்றனர்.

எழுதுவது உங்கள் மனதை சற்று அமைதிப்படுத்துவதுடன், உங்கள் மனதில் உள்ள உளைச்சல்கள் மற்றும் உணர்ச்சிகளை வெளியேற்றவும் உதவும். இதை முயற்சி செய்ய தினமும் உறங்கும் முன் இரு வாரத்துக்கு படிக்கவும் எழுதவும் செய்யுங்கள். இதற்காக அரை மணி முதல் ஒரு மணி வரை மட்டும் செய்வதோடு அதிகமாகவும் அதைச் செய்யாதீர்கள்.



உடற்பயிற்சி உடல் நலத்தையும், உடல் எடையையும் சரிப்படுத்துவதுடன் இந்த இரண்டும் நம்முடைய தூக்கத்துடனும் தொடர்புடையவை.

# ஆரோக்கியம் தரும் கிராம்பு

சமையல்களுக்கு சுவை தருவதோடு மட்டுமல்லாமல் மனிதனுக்கும் எண்ணற்ற மருத்துவ நலன்களை அள்ளித் தருகிறது கிராம்பு.

கிராம்பில் காபோவைதரேற்று ஈரப்பதம், புரதம், வாலடைல் எண்ணெய், கொழுப்பு, நார்ப்பொருள், மினரல், ஹைட்ரோகுளோரிக் அமிலச் சாம்பல்கள், கல்சியம், பொஸ்பரஸ், தயமின், ரிபோ பிளேவின், நயாசின், விற்றமின் 'சி' மற்றும் 'ஏ' போன்றவை உள்ளன.

கிராம்பின் மொட்டு, இலை, தண்டு போன்றவற்றிலிருந்து எண்ணெய் எடுக்கப்படுகிறது. கிராம்பில் பலவித மருத்துவ குணாங்கள் உள்ளன. இவை பெரும்பாலும் ஊக்குவித்தல், தூண்டுதல் உண்டாக்கும் பொருளாக உள்ளது. பல் வலிகளைப் போக்குவதுடன் வயிற்றுப் பொருமல் போன்றவற்றுக்கும் மிகச் சிறந்த நிவாரணி.

உடலைப் பருமனடையச் செய்யவும், இரத்த ஓட்டத்தை முறைப்படுத்தவும் இது பலன் அளிக்கிறது.

கிராம்புப் பொடியை வறுத்து அரை கிராம் தேனில் குழைத்து சாப்பிட்டால் வாந்தி நிற்கும். சிறிது சமையல் உப்புடன் கிராம்பை சப்பிச் சாப்பிட்டால் தொண்டை எரிச்சல், கரகரப்பு நீங்கி தொண்டை சரியாகும். தொண்டை அடைப்பால் ஏற்படும் எரிச்சலைத் தவிர்க்க, சுட்ட கிராம்பு மிகச் சிறந்தது. கிராம்புப் பொடியை பற்பொடியுடன் கலந்து பயன்படுத்தி வர, வாய் நாற்றம், ஈறு வீக்கம், பல்வலி ஆகியவை குணமாகும். கிராம்பு எண்ணெய்யை பாதிக்கப்பட்ட ஈறுகளில் தடவிவர குணம் கிடைக்கும்.

கிராம்பு மற்றும் உப்பை பசும்பாலில் அரைத்து அந்தப் பசையைத் தடவினால் தலைவலி நீங்கிவிடும். தலையிலுள்ள நீரை உப்பு உறிஞ்சி எடுப்பதால் தலைப்பாரம் குறைந்து குணம் கிடைக்கிறது.

கண் இமைகளில் ஏற்படக்கூடிய அழற்சிகளை போக்க கிராம்பை நீரில் உரசி அந்த நீரைப் பயன்படுத்தினால் நன்மை கிடைக்கும்.

தொண்டை அடைப்பால் ஏற்படும் எரிச்சலைத் தவிர்க்க, சுட்ட கிராம்பு மிகச் சிறந்தது. கிராம்புப் பொடியை பற்பொடியுடன் கலந்து பயன்படுத்தி வர, வாய் நாற்றம், ஈறு வீக்கம், பல்வலி ஆகியவை குணமாகும்.



# வேடனும் முனிவரும்



வால்மீகி முனிவராக இராமாயண மகா காவியத்தை எழுதுவதற்கு முன்னால் அவர் ஒரு வேடனாக இருந்தார் என்று கர்ணபரம்பரைக் கதை ஒன்று உள்ளது. வேடன், காட்டில் வேட்டையாடிக் கொண்டிருந்தபோது, அவ்வழியே சப்தரிஷிகள் சென்றார்கள். வேடனின் அம்பு பட்டுத் துடிக்கும் விலங்குகளை அவர்கள் கண்டு, வேடனை அருகில் அழைத்தார்கள் வேடனே! கொலைத் தொழில் புரிவது பாவம். இத்தகைய பாவத்தை ஏன் செய்கிறாய்? என்றனர்.

என் மனைவி, குழந்தைகளைக் காப்பாற்றுவதற்காக இதைச் செய்கிறேன். இதைத் தவிர எனக்கு வேறு எதுவும் தெரியாது என்று வேடன் பதில் அளித்தான்.

சரி! நீ செய்கிற தொழில் உன் குடும்பத்தாருக்காக என்கிறாய். உனக்கு ஏற்படுகிற பாவத்தை அவர்கள் பகிர்ந்து கொள்வார்களா என்று கேட்டுக்கொண்டு வா என்று ரிஷிகள் கூறியதும் வேடன் குடிசைக்குச் சென்றான். சற்று நேரத்தில் திரும்பி வந்தான். என்ன சொன்னார்கள்? என்று ரிஷிகள் வினவினார்கள். சம்பாதித்துக் காப்பாற்ற வேண்டியது என்னுடைய கடமை என்றும் அதனால் ஏற்படுகிற பாவத்தில் அவர்களுக்குப் பங்கு இல்லை என்றும் சொல்லிவிட்டார்கள் என்றான் வேடன்.

பின்பு ரிஷிகள் வேடனுக்கு வாழ்க்கையின் பயனைக் கூறி ராமநாமத்தை ஜபம் செய்யுமாறு உபதேசம் செய்தார்கள், ராம ராம என்று வேடனால் கூற முடியாததால், மரா மரா என்று கூறுமாறும், அவர்கள் திரும்பி வரும்வரை அதையே ஜபம் செய்யச் சொல்லிக் கொண்டிருக்கும் படியும் சொல்லிச் சென்றனர்.

வேடனும் கண்மூடி அமர்ந்து மரா மரா என்று ஜபம் செய்து கொண்டிருந்தான். காலம் ஓடிக்கொண்டிருந்தது. வேடனின் உடல் மீது புற்று எழும்பி அவனை மறைத்த போதும் அவன் தியானத்தில் ஆழ்ந்திருந்தான். ரிஷிகள் அவ்வழியே திரும்பி வந்தபோது, வேடனின் தியானத்தைக் கலைத்தனர். வேடன் பாவங்கள் அகன்றவனாக, ஞானம் மிகுந்தவனாக ஆனான். வால்மீகம் என்று கூறப்படுகிற புற்றிலிருந்து வெளிப்பட்டதால் வால்மீகி என்ற பெயர் ஏற்றார். நாரதர் இராமாயண சுருக்கத்தை வால்மீகிக்கு உரைத்தார். வால்மீகி இராமபிரானின் குணநலன்களால் ஈர்க்கப்பெற்று அதனை வடமொழியில் காவியமாக்கினார்.

நாரதர் கூறிய இராமாயணக் கதையில் ஆழ்ந்தபடியே வால்மீகி முனிவர், சிஷ்யருடன் தமசா நதிக்குச் சென்றார். அருகில் ஒரு பெரிய காடு இருந்தது. கிரௌஞ்ச பட்சிகள் மகிழ்வோடு கூவிக்கொண்டிருக்கும் போது, வேடுவன் ஒருவன் எய்த அம்பால் ஆண் பறவை அடிபட்டு விழ, பெண் பறவை, சுற்றி வந்து கதறியது. அதைப் பார்த்த வால்மீகி முனிவர், அவ்வாறு செய்த வேடனைச் சபித்தார்.

மா நிஷாத ப்ரதிஷ்டாம் த்வம்
அகம ஸாஸ்வதீ ஸமா:
யத் க்ரௌஞ்ச மிதுனாத் ஏகம்
அவதீ காம மோஹிதம்.

என்று கூறியது ஒரு சுலோகம் போலவே அமைந்தது. அடடா, பறவைக்காக வேடனைச் சபித்து விட்டோமே என்று முனிவர் மனம் வருந்தினார்.

அப்போது அங்கு வந்த பிரம்மதேவர் முனி சிரேஷ்டரே! நீர் கூறியது சாபமல்ல; சுலோகமே. என் உத்தரவால் சரஸ்வதிதேவி உம் நாவில் தோன்றி இவ்வாறு கூற வைத்தார். ஸ்ரீஇராமரின் திவ்ய சரித்திரத்தை இயற்றுவீராக என்று ஆசிர்வாதம் அளித்தார்.

அனுஷ்டுப் சந்தஸ் எனப்படும் பாட்டு வகையில் முதலில் தோன்றிய சுலோகத்தை வைத்து வால்மீகி இராமகாவியத்தைப் படைத்தார். வடமொழியில் இயற்றப்பட்ட ஆதிகாவியம் அதுவே.

ஆதிகவியான வால்மீகி இயற்றிய காவியம் சதுர் விம்சதி சாஹஸ்ரீ 24,000 சுலோகங்களைக் கொண்டது. இராமாயணத்தின் சிறப்புக்கு அதன் நாயகியான சீதாதேவியே காரணம் என்பதால், வால்மீகி இராமகாவியத்துக்கு சீதாயாஸ் சரிதம் மஹத் என்றே பெயரிட்டு அழைத்தார்.

காயத்ரீ மந்திரத்தில் மொத்தம் 24 எழுத்துகள் உள்ளன. இராம காவியத்தில் வால்மீகி முனிவர் ஒவ்வோர் ஆயிரம் சுலோகத்துக்கு ஒன்றாக முதல் சுலோகத்தின் முதல் எழுத்தாக இயற்றியுள்ளார். அவ்வாறு அமைந்த 24 சுலோகங்களையும் காயத்ரீ இராமாயணமாக பாராயணம் செய்து வருகிறார்கள்.

வால்மீகி முனிவர் ஆச்சிரமத்துக்கு, கர்ப்பிணியான சீதாதேவி வந்து வசித்தான். அங்குதான் அவளுக்கு லவ-குசன் பிறந்தார்கள். வால்மீகி தாம் இயற்றிய இராம காவியத்தை பாலகர்களான லவ-குசன்களுக்குக் கற்றுத் தந்தார்.

அக்குழந்தைகள் இருவரும் ஸ்ரீஇராமபிரான் நிகழ்த்திய அஸ்வமேத யாகத்தின் போது, யாகசாலையில் இராமகாவியத்தை அரங்கேற்றினர். பட்டாபிஷேகம் முடியும் வரை தொடர்ந்து பல நாள்கள் குழந்தைகள் கானமிசைத்ததைக் கேட்டு, அங்கு கூடியிருந்தவர்கள் மிகுந்த ஆனந்தமடைந்து பாராட்டினார்கள். இராமபிரான், அக்குழந்தைகள், தம்முடைய குமாரர்களே என்று அறிந்து பேருவகை கொண்டு அவர்களை ஏற்றுக் கொண்டார்.

வால்மீகி முனிவர் எழுதிய இராமாயண இதிகாசமே வடமொழியில் எழுதப் பெற்ற பழைமை வாய்ந்த இலக்கியமாகும்.

# பொது அறிவு

- உலகின் மிகப் பெரிய தவளையின் பெயர் என்ன?
  கோலியாத்
- பூனை இரவில் ஒளியைப் பார்ப்பதற்கு உதவும் கண்ணில் உள்ள படலம் எது?
  டபீட்டம் லூசியம்
- பப்பாசிப் பழத்தின் தாயகம் எது?
  மெக்சிக்கோ
- உலகில் அதிகம் தேங்காய் விளையும் பெரிய நாடு எது?
  பிலிப்பைன்ஸ்
- கண் மூடாமல் நித்திரை செய்வது எது?
  மீன்
- ஆசியாவின் ஆங்கிலேயர் ஆட்சிக்கு வித்திட்டவர் யார்?
  ரொபர்ட் கிளைவ்
- இராஜஇராஜேஸ்வரம் என அழைக்கப்பட்ட பகுதி இன்று எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
  தாராநகரம்
- காகித வீடு என அழைக்கப்படும் நாடு எது?
  ஜப்பான்
- முதன் முதலில் எய்ட்ஸ் நோயைக் கண்டு பிடித்தவர் யார்?
  வொக்மொனிட்டர்
- வேடர்களது வழிபாட்டு நடனம் எது?
  கிரிகொரங்க

*சு. மேனகா, தரம்- 10ஏ.*
*சங்கானை சிவப்பிரகாசம் மகாவித்தியாலயம்.*



# பாடும் பறவை

இசையை முணு முணுத்தபடியே இருக்கும் பறவைக்கு "ஹம்" பறவைகள் எனப் பெயர். இவை இசைப்பதால் இவற்றுக்கு இந்தப் பெயர் வந்தது. இவை பூச்சிகளையும், பூக்களையும் தின்று வாழுகின்றன. இவற்றின் அலகு நீண்டு கூர்மையான சட்டை போல் இருக்கும். பூக்களில் அமர்ந்து இந்த நீண்ட அலகை பூவுக்குள் நீட்டி பூவிலுள்ள தேனை உறிஞ்சி எடுக்கும். இந்த ஹம் பறவைகளுள் காற்றின் தன்மையை அறிந்து கொள்ளும். அபூர்வ ஆற்றல் இதற்கு உண்டு. இதற்குப் பின்புறமாகப் பறக்கும் சக்தியும் உண்டு. பாடும் பறவைகளின் "ஹம்" கேட்கக் கேட்க இனிமை தெவிட்டாமல் இனிக்கும்.

*ஸ்ரீ. சுகிர்தன், தரம்- 10.*
*கிளிநொச்சி இந்துக் கல்லூரி.*

# சர்வதேச நாடுகளின் நாணயங்கள்

ஆஸ்திரேலியா - ஆஸ்திரேலியா டொலர்
ஆப்கானிஸ்தான் - ஆப்கானி
இந்தியா - ரூபா
இலங்கை - ரூபா
ஈரான் -ரியால்
கட்டார் - ரியால்
கனடா - டொலர்
சிங்கப்பூர் - டொலர்
சிம்பாப்வே - டொலர்
சீனா - யென்
தாய்லாந்து - பாசு
நியூசிலாந்து - டொலர்
பிரிட்டன் -ஸ்ரேலிங் பவுன்
பிரான்ஸ் - யூரோ
மலேசியா -ரிங்கிட்
மாலைதீவுகள் - ரூபியா
மொஸாம்பிக் - மெட்டிக்கல்
ஜேர்மன் -ரியால்
ரஷ்யா - குபிள்
லிபியா - லிபியன் தினார்
வெனிசுலா- பொலிவர்
ஜப்பான் - யென்
ஜேர்மனி - யூரோ
ஜோர்தான் - ஜோர்கான்தினார்
ஸ்லோவேனியா - டொலர்

**வி.யசோதரன்**, தரம்-8ஏ
ஸ்கந்தவரோதயா கல்லூரி



# வாழ்வில் சிக்கலே இல்லை...

நிமிடத்துக்கு நூறு எஸ்.எம்.எஸ்.கள் அனுப்பித் திரியும் காதலர்கள் கூட திருமணத்துக்குப் பின் பாம்பும் கீரியுமாகி விடுகிறார்கள். சிரிப்பும், சில்மிஷமுமாய் நடக்கும் அவர்களின் திருமண வாழ்க்கை கனவுகளின் பல்லக்கில் சில மாதங்கள் ஓடும். அவ்வளவு தான். திடீரென ஒரு நாள் யூடர்ன் அடித்துத் திரும்பும் வண்டி போல திசை மாறி நிற்கும். மேட் பார் ஈச் அதர் போல அசத்தலாய் சில மாதம் ஓடிய வாழ்க்கை எப்படி சட்டென உடைந்து வீழ்கிறது ?

எவரெஸ்டின் உச்சியில் கட்டி வைக்கும் எதிர்பார்ப்புக் கூடு கலைவது தான் பெரும்பாலான சிக்கல்களின் துவக்கம். காதல் காலத்தில் அடித்துத் தள்ளும் எஸ்.எம்.எஸ்களும், வாங்கிக் குவிக்கும் பரிசுகளும், சிரிப்புகளும், சீண்டலும் திருமணத்துக்குப் பின் கொஞ்சம் கொஞ்சமாய்க் காய்ந்து போகிறது. அது தான் பெரும்பாலான பிரச்சினைகளின் ஊற்றுக் கண். தான் வேண்டா விருந்தாளியாகி விட்டோமோ எனும் பதற்றம் தம்பதியரிடையே எழுகிறது. அந்த நினைப்பே எரிச்சல், கோபம், மன அழுத்தம் என உருமாறி உருமாறி ஆளை விடுங்க சாமி எனும் நிலைக்குத் தள்ளி விடுகிறது.

திருமணத்தின் முதல் ஏழு வருடங்களைச் சந்தோஷமாகக் கடப்பதில் இருக்கிறது குடும்ப வாழ்வின் அத்திபாரம். அதிலும் குறிப்பாக முதல் இரண்டு வருடங்களைக் கடப்பது பலருக்கு சிம்ம சொப்பனம்! திருமணத்தின் முதல் ஏழு வருட காலத்தை ஆங் கிலத்தில் செவன் இயர் இட்ச் (Seven year itch) என அழைக்கிறார்கள். இல்லாத பிரச்சினைகளெல்லாம் இந்த ஏழு வருட காலத் தில் வரும். டைவர்ஸ் புள்ளி விவரங்கள் இந்த காலகட்டத்தில் தான் எகிறும். இந்த ஏழு வருடப் புயலை சாதுர்யமாகவும், அன்புட னும் கடந்தால் காத்திருக்கிறது அமைதியான வாழ்க்கை.

இதற்குக் காரணம் என்ன என்பதை ஆராய்ந்தார் அமெரிக் காவின் பேராசிரியர் ட்டெட் ஹட்சன் (Ted Huston) என்பவர். இவர் மனித உறவுகள் குறித்த பல்வேறு ஆராய்ச் சிகளை நடத்தியவர். ஏன் மக்கள் திருமணம் முடிந்த கையோடு டைவர்ஸும் கேட்கிறார் கள் என்பது தான் அவரை அலட்டிய கேள்வி. அவர் கண்டுபிடித்த பதில்கள் சுவாரஸ்ய மானவை. அவருடைய பட்டியலில் டைவர்ஸ் வாங்குபவர்கள் யார் தெரியுமா ? திருமணம் முடிந்த ஆரம்பத்தில் உல்லாசமாய் சினிமா காதலர்கள்போல சுற்றுபவர்கள். தான் தான் எல்லாம் என நினைப்பவர்கள். விட்டுக் கொடுப் பது என்ற பேச்சுக்கே இடமில்லை என்பவர் கள். இவர்கள் தான். டைவர்சின் முக்கியமான காரணம் உண்மையான ஆழமான அன்பு இல்லாதது தான். கருத்து வேற்றுமைகள், பதவி பணம், இத்யாதி சங்கதிகள் எல்லாம் கிடையாது என்கிறார் அவர்.

திருமணமாகி முதலிலேயே குழந்தையையும் பெற்றுக் கொள்பவர்களுக்கு விடயம் இடியப்பச் சிக்கலாகிவிடுகிறது. குழந்தைக்காக எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு ஒரே கூண்டுக்குள் எலியும், பூனையுமாய் வாழ வேண்டும். அல்லது எண்ணையும், நெருப்புமாக பற்றிக் கொண்டே திரிய வேண்டும். இந்த சண்டையில் அதிகம் காயப்படுவது அப்பாவா, அம்மாவா என பட்டிமன்றம் நடத்தினால், முடிவு குழந்தைகள் என்று தான் வரும்.

அது பச்சைக் குழந்தை தானே என்றோ, அல்லது அது வளர்ந்த குழந்தை புரிந்து கொள்ளும் என்றோ பெற்றோர் தப்புக் கணக்கு போடுகிறார்கள். உண்மையில் சின்னக்குழந்தையானாலும் சரி, கல்லூரிக்குச் செல்லும் குழந்தையானாலும் சரி. பாதிப்புகள் நிச்சயம் உண்டு. குழந்தைகள் பெற்றோரின் பிரதிபலிப்புகள். பெற்றோரின் சொல்லும், செயலும் தான் குழந்தைகளைக் கட்டியெழுப்புகின்றன. வீட்டில் சதா சண்டையிட்டுக் கொண்டிருக்கும் பெற்றோர் குழந்தைகளுக்கு என்ன சொல்லிக் கொடுக்கிறார்கள்? சண்டையிடலாம் தப்பில்லை என்பதையா ? அல்லது குடும்பம் என்றால் சண்டை போட்டுத் தான் வாழவேண்டும் என்பதையா ? எதுவானாலும் அது சரியான வழிமுறையல்ல என்பது தானே உண்மை.

பெற்றோர் சண்டையிடும் போது குழந்தைகள் முதலில் பயப்படுகின்றன. அவர்களுடைய ஆழ் மனதில் பாதுகாப்பற்ற உணர்வு எழுகிறது. இதனால் தான் பல குழந்தைகள் சண்டையின் போது அழுகின்றன. ஏதேதோ கத்துகின்றன. சத்தம் போடுகின்றன. இதனால் குழந்தைக்கு ஏற்படும் மன அழுத்தம் சொல்லில் அடங்கா. அதிலும் சண்டையில் பெற்றோரின் கோபம் குழந்தைகளின் மீது திரும்பி விட்டால் போச்சு. குழந்தைகள் கதிகலங்கி விடுகின்றன. குழந்தைகள் இதனால் பல தவறான பாடங்களைக் கற்கிறது. அப்பாவிடம் நல்ல பெயர் வாங்க அம்மாவைத் திட்டினால் போதும் என நினைக்கிறது. இதனால் அப்பாவைப் பற்றி அம்மாவிடமும், அம்மாவைப் பற்றி அப்பாவிடமும் கதைகள் ஒப்பிக்கிறது. அவர்களுடைய நோக்கம் அம்மாவுக்கும், அப்பாவுக்கும் சண்டை மூட்டுவதல்ல. பெற்றோரின் அரவணைப்பு மட்டுமே. அது சாதாரணமாய் கிடைக்காத போது ஏதேதோ செய்து அதை அடைய முயல்கின்றன.

பெற்றோரின் சண்டையில் குழந்தைகளை இழுக்கவே கூடாது. பல பெற்றோர் தங்கள் குடுமிப் பிடி சண்டையில் குழந்தையை நடுவராக்க முயல்வார்கள். இது குழந்தைகளின் மன அழுத்தத்தை மிகவும் அதிகரிக்கும். பெற்றோரிடம் பாகுபாடு காட்டாத சூழலை குழந்தைகளுக்குத் தர வேண்டும். அதை விடுத்து குழந்தைகளையே இக்கட்டான சூழலில் தள்ளி விடக் கூடாது.

பெற்றோரின் சண்டை குழந்தைகளை உளவியல் ரீதியாகவும் பாதிக்கும் என்கிறார் மருத்துவர். மார்க் கம்மிங்ஸ். இவர் உளவியலில் டாக்டர் பட்டம் பெற்றவர். அமெரிக்காவின் இந்தியாவிலுள்ள நவ்டர் டீம் (Notre Dame) பல்கலைக்கழகத்தில் நடத்திய ஆய்வில் இதைக் கண்டறிந்திருக்கிறார். அவருடைய ஆய்வு முடிவு சிந்திக்க வைக்கிறது. பெற்றோர்களிடையே கருத்து வேறுபாடோ, விவாதங்களோ வருவது குழந்தையின் மனதை பாதிப்பதில்லை. ஆனால் அந்த விவாதங்கள் முற்றுப் பெறாமல் போவது தான் குழந்தைகளை பாதிக்கிறது. தீர்வற்ற சண்டைகள் அவர்களை மன அழுத்தத்தில் தள்ளுகின்றன என்கிறார் அவர். மனம் சார்ந்த சிக்கல்களைத் தொடர்ந்து, தலைவலி, வயிற்று வலி என உடல் சார்ந்த நோய்களும் குழந்தைகளை வந்தடைகின்றன. அப்போதும் சில பெற்றோர் சும்மா இருப்பதில்லை. குழந்தையை ஒழுங்காக கவனிக்காமல் உனக் கென்ன பெரிய வேலை என அப்பா கத்துவார். குழந்தையைப் பெறுகிறது தான் அம்மா வேலை. வளர்க்கிறது அப்பா வேலை என அம்மா கத்துவார். முடிவில் அங்கும் ஒரு பெரிய சண்டையே மல்லுக் கட்டும்.

சில குடும்பங்களில் நான் தான் செய்வேன் எனும் சண்டை பாதி நேரம் ஓடும். நீ செய்ய வேண்டியது தானே எனும் சண்டை மீதி நேரம் ஓடும். நாம் செய்வோம் என ஒன்று படாததால் குழந்தையின் சிந்தனையும் இரண்டாய் உடைந்து தொங்கும். எனவே தம்பதியரின் அன்னியோன்னியம் குழந்தை வளர்ச்சியின் அத்திபாரம் என்கிறார் கனடாவின் குழந்தைகள் நல நிபுணர் கேரி டைரன்பில்.

தங்கள் சண்டையில் சிதைந்து போவது தனது செல்லக் குழந்தை எனும் உண்மையை பெற்றோர் உணர வேண்டும். தான் செய்வதெல்லாம் சரியென நிறுவுவதும், அடுத்தவரை தரக்குறைவாய் பேசுவதும், அவமானப்படுத்துவதும், அடிப்பதும் கடைசியில் குழந்தையைத்தான் பாதிக்கிறது. ஒருவேளை திருமணங்கள் விவாகரத்தில் முடிந்து விட்டால் சொல்லவே வேண்டாம். குழந்தை நொருங்கி விடுகிறது. பெற்றோர் குழந்தையை வளர்க்க பொருளாதாரம் இருக்கிறதா என்று தான் பார்ப்பார்கள். குழந்தையின் ஏக்கமும் தவிப்பும் அவர்களுக்கு பல நேரங்களில் தெரிவதே இல்லை.

கருத்து வேறுபாடுகள் இல்லாமல் குடும்ப வாழ்க்கை இருக்கப் போவதில்லை. ஆனால் அதை எப்படிக் கையாள்கிறோம் என்பதில் தான் இருக்கிறது வாழ்வின் வெற்றியும் தோல்வியும். சண்டையே போடாமல் இருக்க முடியாது. அதுவும் ஆபத்தானதே. அடக்கி வைக்கப்படும் கோபம் நோய்களாகத் தலை நீட்டும். ஆனால் சண்டையைத் திறமையாகக் கையாள வேண்டும். கருத்து வேறுபாடு வந்தால் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என குழந்தைக்குக் கற்றுக் கொடுப்பதாய் இருக்க வேண்டும் உங்கள் நடவடிக்கை ! முடிவில்லாமல் ஒரு சண்டை இருக்கவே கூடாது. விவாதித்து, பேசி, கடைசியில் உடன்பாடாகி சந்தோஷமாய் ஒரு விவாதம் முடிவுக்கு வரவேண்டும். அது உண்மையில் குழந்தைக்கு வழிகாட்டும் என்கிறார் உளவியலாளர் பிராட் சாச் (Brad Sachs). இந்த உண்மையைத் தம்பதியர் புரிந்து கொண்டால் வாழ்வில் சிக்கலே இல்லை.

# உலகளவில் இளம்பருவத்தினரை தாக்கும் நோய்களில் முதலிடத்தில் மனஅழுத்தம் !

உலக மக்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் மன அழுத்தம் காரணமாக மனநலம் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். மன அழுத்தம் அவர்களது 14ஆவது வயதில் தொடங்குகிறது என்று உலக சுகாதார அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

புகையிலை, மதுபானம் மற்றும் போதை பொருள் பயன்பாடு, கூறினார், காயங்கள், மனநலம்,ஊட்டச்சத்து, இனப் பெருக்கத்தில் சுகாதாரம் மற்றும் வன்முறை ஆகிய பல்வேறு விவகாரங்களை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு நடத்தப்பட்டது.

இதில், இளம்பெண்களை விட இளைஞர்கள் 3 மடங்கு அதிகமாக பலியாகின்றனர் என்று கண்டறியப்பட்டுள்ளது.

இந்த ஆய்வில் பாதுகாப்பான மற்றும் நம்பகமான பொது போக்குவரத்தை அதிகரித்தால் விபத்தைக் குறைக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மதுபானம் மற்றும் வேக எல்லைகள் ஆகியவை குறித்த சாலை பாதுகாப்பு விதிகளைமேம்படுத்துதல், பாடசாலைகள் உள்ள பகுதிகளைச் சுற்றி பாதுகாப்பான நடைபாதைகளை ஏற்படுத்துதல், மற்றும் சாரதிகள் அதிக நேரம் வேலை செய்வதற்கு ஏற்ற பயிற்சித் திட்டங்களை உருவாக்குதல் ஆகியவற்றை மேற்கொள்ள வேண்டும். இதை மேற்கொள்வதில் பல நாடுகளுக்கு அதிக சிரமமாக உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இளம்பருவத்தினர்களுக்குத் தேவையான பாதுகாப்பை அதிகரித்தால் இறப்பைத் தவிர்ப்பதுடன், வாழ்க்கை முழுவதும் பாதிப்புக்கு உள்ளாவதையும் தடுக்க முடியும் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



மேலும், இந்த அறிக்கையில், வீதி விபத்துகளால் 2012ஆம் ஆண்டு உலக அளவில் 10.3 லட்சம்இளைஞர்கள் உயிரிழந்துள்ளனர் எனவும் அப்போது உலக அளவில் பலியாவோரில் முதல் மூன்று காரணங்களாக வீதி போக்குவரத்தில் ஏற்படும் காயங்கள், எய்ட்ஸ் நோய் மற்றும் தற்கொலை ஆகியவை இருந்தன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எய்ட்ஸ் உட்பட இளைஞர்களின் இனப் பெருக்க சுகாதாரத்தை பாதுகாப்பது மற்றும் ஊக்குவிக்கும் நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என்றும் உலக சுகாதார அமைப்பின் விஞ்ஞானியும்,அறிக்கையின் தலைமை எழுத்தாளருமான ஜேன் பெர்குசன் தெரிவித்துள்ளார்.

ஆசியாவில் கடந்த 2000 ஆண்டிலிருந்து இது வரை 57 சதவீதமும், மத்திய கிழக்கு நாடுகளில் 50 சதவீதமும் மற்றும் ஆபிரிக்காவில் 37 சதவீதமும் இறப்பு வீதம் குறைந்துள்ளது என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

ஆபிரிக்காவில் பாதிப்பை ஏற்படுத்தும் தட்டம்மை 90 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளதாகவும், கடந்த10 ஆண்டுகளில் பிற நோய்களைவிட இறப்புக்கு காரணமாக இருந்தது தட்டம்மை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிக வேலை நேரம், குடும்ப சுமை, வேலையில்லா திண்டாட்டம், கடன் சுமை, காலதாமதமான திருமணம், கலாசார சிக்கல்கள் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் உலகம் முழுவதும் உள்ள நோய்களில் மன அழுத்தம் முதலிடத்தில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.